


கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2048*

*மலர் - 9 இதழ் - 8 - நவம்பர் - 2017*

கௌரவ ஆசிரியர்

முனைவர் **அ.அ.மணவாளன்**

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

*எஸ்.சண்முகநாதன்*
*தி.ரெத்தினசபாபதி*
*அ.கணேசன்*
*அ.கிருஷ்ணமூர்த்தி*
*ஜி.சரவணன்*

இதழ் வடிவமைப்பு

*ஞா.சரிதா*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
**இணைய தள முகவரி: www.keetru.com**

**தனி இதழ் ₹ 30.00, ஆண்டு சந்தா ₹ 360.00**
**மாணவர்களுக்கு ₹ 300.00 அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00**

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
*என்ற பெயரில் அனுப்பலாம்.*

---

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600098.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## பொருளடக்கம்


படித்துப் பாருங்களேன்...
ஆ.சிவசுப்பிரமணியன் – 5

மார்க்சியத் தத்துவ உருவாக்கத்தில் மார்க்சும் ஏங்கல்சும்
ந.முத்துமோகன் – 13

இரண்டு தலைமுறைகள் : நினைவும் நனவும்
இந்திரா மோகன் – 21

கருணாமிர்த சாகரம் நூற்றாண்டு : ஒரு சிறுகுறிப்பு
வீ. அரசு – 25

அக்டோபர் புரட்சி
எஸ். தோதாத்ரி – 31

ருஷியாவின் வெற்றி ஐந்து வருட திட்டத்தின் பலன்
பெரியார் – 35

தமிழகத்தில் தொடக்ககால அறிவியல் தமிழ் ...
டாக்டர் சு.நரேந்திரன் – 41

ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே
ஆ.கார்த்திகேயன் – 47

மண்ணின் மணமும் மக்களின் மனமும்
முனைவர் நா. சுலோசனா – 49

புதிய பயணவெளி : கல் மேல் நடந்த காலம்
இராமசாமி வெங்கடேசன் – 52

அதிசயமான மகாவீரன்
பெ. சிதம்பரநாதன் – 55

திருப்பூர் தியாகிகள்
சுப்ரபாரதிமணியன் – 59

நன்றிக் கடன் செலுத்தல்
க.காமராசன் – 60

முல்லைப் பாட்டும்...
மு.செல்லா – 65

விவேகானந்தர் பார்வையில்...
ஆர்.பட்டாபிராமன் – 69




# 1917 - 2017

**சோவியத் புரட்சி நடந்து நூறு ஆண்டுகள் நிறைவுறுகின்றன. உலகில் சோசலிச அரசைக் கட்டமைத்த புரட்சி இது. சோவியத் புரட்சி என்பது ஒரு நாட்டில் மட்டும் நடைபெற்ற புரட்சியாக அல்லாமல் ஒடுக்கப்படும் மக்களின் விடுதலையாகவே கருதப்பட்டது. இப்புரட்சியின் நூற்றாண்டைக் கொண்டாடுவது என்பது வரலாற்றின் மிக முக்கியமான தருணமாகும்.**

“மாகாளி பராசக்தி உருசியநாட்
டினிற் கடைக்கண் வைத்தாள் அங்கே
ஆகாவென் றெழுந்ததுபார் யுகப்புரட்சி;
கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்;
வாகான தோள்புடைத்தார் வானமரர்;
பேய்களெலாம் வருந்திக் கண்ணீர்
போகாமற் கண்புகைந்து மடிந்தனவாம்;
வையகத்தீர், புதுமை காணீர்!” **- பாரதி**

“லெனின் முன்னின்று போல்ஷ்விக்குகளின் தலைமையின் கீழ் உலகை உருமாற்றிய அக்டோபர் புரட்சியால் சோவியத் ஒன்றியம் பிறந்தது; இது மானிடரின் உன்னத கனவு, மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரின் இறவாக் கருத்துகளாகிய சோசலிசம் கற்பனையன்று என நிரூபித்தது.” **- அஜய் கோஷ்**

“வெகுமக்களையும் அவர்களது இயற்கை வள ஆதாரங்களையும் சுரண்டுகிற சுரண்டலாளர்களைத் தூக்கியெறிய நாங்கள் மேற்கொண்டுள்ள இந்த போர் நாங்கள் மட்டுமே தொடங்கவும் இல்லை; எங்களோடு முடிந்தும் போகாது... அந்தச் சுரண்டலாளர்கள் முழுக்க பிரித்தானிய முதலாளிகளாக இருக்கலாம்; அல்லது பிரித்தானிய-இந்தியக் கலப்பினமாக இருக்கலாம்; அல்லது முழுக்கவும் இந்தியர்களாகவும் இருக்கலாம். சோசலிசக் குடியரசு அமைக்கப்படும் வரை இந்தப் போர் எப்போதும் புதிய உத்வேகத்துடன், மாபெரும் உணர்வெழுச்சியுடன், குறைவில்லாத தீர்மானத்துடன் மேற்கொள்ளப்படும்.” **- பகத்சிங்**

# படித்துப் பாருங்களேன்...

## ஆ. சிவசுப்பிரமணியன்

The First Catholic Bible in Tamil and Louis Sabinien Dupuis at Pondicherry - (2017)

S. Jeyaseela Stephen

பதினெட்டு, பத்தொன்பதாவது நூற்றாண்டுகளில் தமிழ் விவிலிய மொழிபெயர்ப்புகள்

நூல் பிரதி கிடைக்குமிடம்:

Louis Savinien Dupuis Research Centre
IMMACULATE GENERALATE
19, St. Therese Street,
Pondicherry - 605001



எஸ். ஜெயசீல ஸ்டீபன்

கிறித்தவர்களின் அடிப்படைச் சமய நூலாக விளங்குவது பைபிள். புத்தகங்களைக் குறிக்கும் பிபிலியா என்ற கிரேக்க மொழிச் சொல்லின் திரிபு வடிவமே பைபிள் என்ற ஆங்கிலச் சொல். 16-ஆவது நூற்றாண்டில் தூத்துக்குடி மாவட்டத்தின் புன்னைக்காயல் என்ற கடற்கரைச் சிற்றூரில் வாழ்ந்த அண்டரிக் அடிகளார் என்ற போர்ச்சுக்கீசிய நாட்டு சேசுசபைத் துறவி பிபிலியா என்ற சொல்லை 'விவிலிய' என்றழைத்தார். இதுவே பின்னர் விவிலியம் எனத் திரிபடைந்தது.

ஞாயிறு வழிபாட்டிற்காகத் தேவாலயம் செல்லும் கிறித்தவர்கள், கருப்பு அட்டையுடனும் நூலின் விளிம்புகளில் சிவப்பு வண்ணத்துடனும் அமைந்த தமிழ் விவிலியத்தைக் கரங்களில் சுமந்தவாறோ, மார்பில் அணைத்தவாறோ செல்வது பரவலாக நாம் காணும் காட்சி. ஒருவகையில் கிறித்தவர்களுக்கான தனி அடையாளமாக இது விளங்குகிறது.

மிக எளிதாக இன்று கிடைக்கும் தமிழ் விவிலியம், தமிழில் மொழி பெயர்க்கப்பட்டமைக்கு நெடிய வரலாறு உண்டு. இவ்வரலாறானது, கிறித்தவம் என்ற சமய எல்லையைக் கடந்து, தமிழ் மொழியில் நிகழ்ந்த உரைநடை நூல் ஒன்றின் மொழிபெயர்ப்பின் வரலாறாகவும் அமைந்துள்ளது. இதனால் தமிழ் இலக்கிய வரலாறின் ஓர் உறுப்பாக, விவிலியத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு முயற்சிகளைக் கொள்ள இயலும்.

## தமிழில் மொழிபெயர்ப்பு

பண்டையத் தமிழர்களுக்கு, பாலி பைசாசம், சமஸ்கிருதம் ஆகிய வடபுலத்து மொழிகளுடன் தொடர்பு இருந்துள்ளது. ஆயினும் இம்மொழிகளில் இருந்து நேரடியாக மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள் எவையும் இன்று நமக்குக் கிட்டவில்லை. என்றாலும் மொழி பெயர்ப்பு முயற்சிகள் தொடர்பான சான்று ஒன்று தொல்காப்பியம். எச்சவியலில் (நூற்பா. 884) காணப்படுகிறது. வடமொழி ஒலிகளைத் தவிர்த்து விட்டு தமிழ் எழுத்தில் வடமொழிச் சொற்களை எழுதுவதை இந்நூற்பா குறிப்பிடுகிறது.

மகாபாரதம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதை 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும்' என்று கி.பி. பத்தாம் நூற்றாண்டுக் காலத்திய சின்னமனூர் செப்பேடு குறிப்பிடுகிறது. ஆனால் இன்று நமக்கு இந்நூல் கிட்ட வில்லை.

நேரடியான மொழிபெயர்ப்பாக இன்றி அம்மொழியில் எழுதப்பட்ட நூல்களை வடமொழி அறிவின் துணையுடன் தமிழில் தழுவி எழுதிய நூல்கள் சில நம்மிடையே இன்றும் வழங்குகின்றன. தண்டி அலங்காரம், கம்பரது இராமாயணம் என்பன தழுவல் நூல்கள்தாம். பைசாச மொழியில் இருந்து வடமொழிக்குச் சென்ற 'பிருகத்கதா' என்ற காவியத்தின் தழுவலாக கொங்குவேளரின் பெருங்கதை அமைந்துள்ளது.

மொழிபெயர்ப்பு என்பதற்கு நாம் இன்று கொள்ளும் பொருளுக்குப் பொருந்துமாறு அமைந்த முதல் மொழி பெயர்ப்பு விவிலிய மொழி பெயர்ப்புதான். இம்மொழி பெயர்ப்பு திடீரென்று நிகழவில்லை. இதற்குப் படிப் படியான வளர்ச்சி நிலை உண்டு. இவ்வளர்ச்சி நிலை குறித்த அறிதலே தமிழ் விவிலிய மொழிபெயர்ப்பு வரலாறாகும். இவ்வரலாறானது பதினாறாம் நூற்றாண்டுத் தமிழகத்தில் போர்ச்சுக்கீசியர் நிலைகொண்டமையில் இருந்து தொடங்குகிறது.

## தமிழகத்தில் போர்ச்சுக்கீசியர்

கி.பி.16-ஆவது நூற்றாண்டில் இராமேஸ்வரம் தொடங்கி கன்னியாகுமரி வரையிலான முத்துக்குளித் துறைக் கடற்கரைப் பகுதியில் போர்ச்சுக்கீசியர்கள் தம் ஆதிக்கத்தை நிலை நிறுத்தினர். இதன் தொடர்ச்சியாக இப்பகுதியில் கடல்சார் தொழில் மேற்கொண்டு வாழ்ந்து வந்த பரவர் அல்லது பரதவர் என்ற மக்கள் பிரிவினர் கத்தோலிக்கர்களாக மதம் மாறினர். இம்மதமாற்ற நிகழ்வே விவிலிய மொழி பெயர்ப்புக்கு வித்திட்டது எனலாம்.

அச்சுநூல்கள் அறிமுகமாகாத, அக்காலத்தில் கத்தோலிக்கக் குருக்கள், தம் சமயம் சார்ந்த வழிபாட்டு முறைகளை, புதிய கத்தோலிக்கர்களுக்கு அறிமுகம் செய்வதில் இடர்ப்பாடுகளை எதிர்கொண்டனர். சில அடிப்படை மன்றாட்டுகளை (செபம்) யாவது தமிழில் கற்றுக்கொடுக்க வேண்டிய தேவை இருந்தது. அக்கால கட்டத்தில் இலத்தீன் மொழியே உலகக் கத்தோலிக்கத் திருச்சபையின் வழிபாட்டு மொழியாக விளங்கியது. தேவாலய வழிபாட்டின் போதும் அன்றாடம் வீட்டில் மேற்கொள்ள வேண்டிய மன்றாட்டுகளின் போதும் அவர்கள் கூறவேண்டிய மன்றாட்டுகளைத் தமிழாக்கம் செய்ய வேண்டிய தேவை இருந்தது. இதை நிறைவு செய்யும் வகையில் சில வழிபாட்டு மந்திரங்களையும், மன்றாட்டுகளையும் தமிழில் மொழிபெயர்த்தனர். இம்மொழிபெயர்ப்பு முயற்சிகள் விவிலிய மொழி பெயர்ப்புக்கான முன்னோடி முயற்சிகளாக அமைந்தன.

## முன்னோடி முயற்சிகள்

தமிழ்நாட்டில் கிறித்தவம் அறிமுகமான 16-ஆம் நூற்றாண்டு தொடங்கி 17-ஆம் ஆண்டு முடிய விவிலிய மொழி பெயர்ப்பு தொடர்பான திட்டமிடல் எதுவும் நிகழாவிடினும் விவிலியத்தின் தேர்வு செய்யப்பட்ட பகுதிகளை மொழி பெயர்க்கும் பணியினை கத்தோலிக்கக் குருக்கள் தொடங்கி வைத்தனர்.

கிறித்தவப் புனிதர்களின் வரலாற்றைக் கூறும் ஃபிளாஸ் சாங்ட்ரோம் என்ற ஸ்பானிய மொழிநூல் இலத்தீன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தது. இலத்தீன் மொழியில் இருந்து மூன்றாண்டு கால முயற்சியில் அண்டரிக் அடிகளார் என்ற சேசுசபைத் துறவி இந்நூலைத் தமிழில் மொழிபெயர்த்தார். கி.பி.1586-ஆம் ஆண்டில் அவரது இம்மொழிபெயர்ப்பு 'அடியார் வரலாறு' என்ற பெயரில் வெளியானது. இந்நூலில் விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ள யேசுவின் மலைப்பொழிவு (செர்மன் ஆஃப் தி மவுண்ட்) தமிழ் வடிவில் முதல்முறையாக இடம்

பெற்றுள்ளது. இதுவரை கிடைத்துள்ள சான்றுகளின் அடிப்படையில் தமிழ் விவிலிய மொழி பெயர்ப்பின் முதல் கட்டமாக இம்மொழிபெயர்ப்பு அமைகிறது.

இதனையடுத்து 17-ஆம் நூற்றாண்டில் கத்தோலிக்க குருக்கள் விவிலியத்தின் சில பகுதிகளை மொழி பெயர்த்துள்ளார்கள். இது வினா விடை வடிவில் அமைந்திருந்தது. ஓலைச் சுவடியில் இதை எழுதி யுள்ளார்கள். உரையாடலைக் குறிக்கும் 'சல்லாபம்' என்ற வடமொழிச் சொல்லால் இவை குறிக்கப்பட்டன. பிரான்ஸ் நாட்டின் தேசிய நூலகத்தில் 'சல்லாபம் சுவடிகள்' பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இச்சுவடி களைப் பார்வையிட்ட, போதகர் முத்துராஜ் சில சுவடிகளில் அவை எழுதப்பட்ட காலம் குறிப்பிடப் பட்டுள்ளதைக் கண்டறிந்துள்ளார். கி.பி. 1666, 1667, 1677 என அச்சுவடிகளில் ஆண்டு குறிப்பிடப் பட்டுள்ளது. இச்சுவடிகள் அவற்றின் உள்ளடக்கத்தின் அடிப்படையில் 'புதிய ஏற்பாட்டுச் சல்லாபம்', 'உபாகமச் சல்லாபம்', '1, 2 ராஜாக்கள் சல்லாபம்', என்று பெயரிடப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிடுகிறார்.

ஆனால் இவை, டி.நோபிலியால் எழுதப்பட்ட 'நித்திய ஜீவன் சல்லாபம்' என்ற நூலின் மூலச்சுவடிகளில் இருந்து எடுக்கப்பட்ட நகல்களாக இருக்க வேண்டும் என்று விவிலியமும் தமிழும் (1990) என்ற தமது நூலில் சரோஜினி பாக்கியமுத்து எழுதியுள்ளார். அத்துடன் போதகர் முத்துராஜாவைப் பகடி செய்யும் தொனியில் அவரது கருத்தை மறுத்துள்ளார்.

ஆனால் தற்போது வெளிவந்துள்ள செயசீல ஸ்டீபனின் நூல் (2017:128) போதகர் முத்து ராஜாவின் கருத்தை உறுதிப்படுத்தும் வகையில் சில உண்மைகளை முன்வைக்கிறது.

கி.பி.1739, 1750-ஆம் ஆண்டுகளில் ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்ட தமிழ் விவிலிய மொழி பெயர்ப்புகள், புதுச்சேரியில் இருந்து பிரான்சுக்கு கப்பல்கள் வாயிலாகச் சென்றதாகக் குறிப்பிடுகிறார். இம்மொழிபெயர்ப்புகள் இலத்தீன் மொழியில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டன. ஓலைச்சுவடியில் தமிழ் விவிலியத்தை எழுதுவதற்காக எழுத்தர்களை நியமித் திருந்தனர். இச்சுவடிகளின் தலைப்புகள் பின்வருமாறு உள்ளன.

- கத்தோலிக்கரின் புதிய ஏற்பாட்டுச் சல்லாபம்
- பழைய ஏற்பாட்டுச் சல்லாபம்
- ராஜாக்களின் சல்லாபம்

இச்சுவடிகளில் உள்ள, கிரேக்க ஹீப்ருமொழிச் சொற்கள் தமிழில் மொழி பெயர்க்கப்படாமல் எழுத்துப் பெயர்ப்புகளாகவே இடம் பெற்றுள்ளன. ஆமென், அல்லேலுயா பாஸ்கா, ஓசன்னா என்ற சொற்கள் எழுத்துப் பெயர்ப்புகளாகவே உள்ளன.

அத்துடன் பேச்சுத்தமிழில் இடம்பெறும் ஜீவன், விசுவாசம், ரட்சிப்பு, ராப்போசனம், மாமிசம், பிதா, புத்திரன், காரியம், விசேஷம், ஜலம், சத்ரு, அபிஷேகம், ஆராதனை, ஜெபம் ஆகிய வடமொழிச் சொற்கள் பரவலாக இடம் பெற்றுள்ளன.

ஆட்பெயர்கள் சில, மாற்றம் பெற்றுள்ளன. பீட்டர் ராயப்பராகவும், ஜான் அருளப்பராகவும், பவுல் சின்னப்பராகவும் ஆண்ட்ரு பிலவேந்திரர் ஆகவும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இம் மொழிபெயர்ப்புகள் ஞாயிறு வழிபாட்டில் படிக்கப்பட்டன. ஓலைச்சுவடியில் எழுதிப் பழக்கமில்லாததால் கத்தோலிக்க மறைப்பணியாளர்கள் அய்ரோப்பாவில் இருந்து காகிதம் வரவழைத்து அதில் எழுதினார்கள். அதைப் பார்த்து ஓலைச்சுவடியில் படி எடுக்க எழுத்தர்களை நியமித்தனர். இவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டது.

பிரான்சில் உள்ள ஒரு காகிதப்படியின் இறுதியில் 'வைகாசி எட்டாம் நாள் அர்ச்சிஷ்ட விவிலிய புஸ்தகம் எழுதி முடிந்தது' என்றுள்ளது (22 மே 1702 ஆம் ஆண்டு எழுதப்பட்டுள்ளது). இக்காகிதப் படியை எழுதியவர் பெயர் ஞானப்பிரகாசம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கையெழுத்துப் படியானது புதுச்சேரியில் இருந்து கான்ஸ்டாண்டின் நோபிள் வழியாக பிரான்சை அடைந்துள்ளது.

இவ்வாறு பகுதி பகுதியாகத் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட விவிலியத்தின் புதிய ஏற்பாடு நூல் வடிவில் 1714-ஆம் ஆண்டு தரங்கம்பாடியில் அச்சிடப்பட்டு வெளியானது. இந்தியாவிலேயே முதல்முறையாகத் தமிழில்தான் விவிலியம் அச்சிடப் பட்டது என்ற பெருமையைத் தமிழுக்கு வழங்கியவர் சீகன் பால்க் என்ற ஜெர்மானிய மதகுரு ஆவார்.

**சீகன்பால்க்**

இன்றைய நாகப்பட்டிணம் மாவட்டத்திலுள்ள தரங்கம்பாடி என்ற கடற்கரையூர் கி.பி.1620-ஆம் ஆண்டில் டேனிசியர்களால் குத்தகைக்கு எடுக்கப் பட்டிருந்தது. டேனிஷ் மன்னனான நான்காம் பிரடரிக் என்பவனின் விருப்பத்திற்கிணங்க இங்கு கிறித்தவப் பரப்புதலை மேற்கொள்ள ஜெர்மானிய நாட்டிலிருந்து அழைத்து வரப்பட்ட சீர்திருத்தக் கிறித்தவ சபைக் குருவே பரதாமஸ் சீகன்பால்க்.

9 ஜுலை 1706-ஆம் ஆண்டில் இங்கு வந்து சேர்ந்த இவர் மணலில் எழுதிப் பழகி, ஓலைச்சுவடிகளின் துணையுடன் தமிழ் கற்றறிந்தார். சீர்திருத்தக் கிறித்தவ



சபையில் சேர்ந்த தமிழகக் கிறித்தவர்களுக்குப் பயன்பட வேண்டும் என்ற நோக்கில் விவிலியத்தை கிரேக்க மொழியில் இருந்து தமிழில் மொழிபெயர்க்கும் பணியில் ஈடுபட்டார். குருண்டலர் என்ற செர்மானிய மதகுருவும் இப்பணியில் துணைநின்றார்.

இப்பணியின் முதற் கட்டமாக கி.பி.1715இல் விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் இருந்து சில பகுதிகளைத் தமிழில் மொழி பெயர்த்தார். யேசுவின் நேரடிச் சீடர்களான மாற்கு, மத்தேயூ லூக்கா, யோவான் என்ற நால்வரும் எழுதியவை புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளன. இவை தனித்தனி நூல்களாகும். இந்நான்கு நூல்களையும், 'காஸ்பல்' என்று ஆங்கிலத்தில் குறிப்பிடுவர். இதை 'சுவிஷேஷம்' என்று முன்னர் வடமொழியில் அழைத்தனர். தற்போது 'நற்செய்தி ஏடு' என்ற நல்ல தமிழ்ப் பெயரால் கத்தோலிக்கர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்நான்கு நூல்களுடன், புதிய ஏற்பாடு பகுதியில் உள்ள 'அப்போஸ்தலர் நடபடிகள்' என்ற நூலையும் சீகன்பால்க் தமிழில் மொழி பெயர்த்தார். இந்த அய்ந்து நூல்களின் தொகுப்புக்கு 'அஞ்சுவேதப் பொத்தகம்' என்று அவர் தலைப்பிட்டிருந்தார். இத்தலைப்பை அவர் இட்டதற்கு வரலாற்றுப் பின்னணியொன்று உண்டு.

17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மதுரையில் வாழ்ந்த இத்தாலிய நாட்டு சேசுசபைத் துறவி டி.நொபிலி, தமிழ்நாட்டில் வேதத்திற்கு இருந்த மரியாதையைப் புரிந்து கொண்டார். இதன் அடிப் படையில் நான்கு வேதங்கள் மட்டுமின்றி அய்ந்தாவதாக ஏசுரவேதம் என்ற ஒன்று உண்டு என்றும் தான் அதைக் கற்றறிந்த ரோமாபுரிப் பிராமணண் என்றும் வெளிப் படுத்திக் கொண்டார். அதை நிறுவும் முகமாக மார்பில் முப்புரிநூல் அணிந்து கொண்டார். அது பிதா சுதன் பரிசுத்த ஆவி என்பனவற்றின் குறியீடு என்றும் விளக்கமளித்தார்.

இவ்வாறாக வேதம் என்ற அடையாளம் விவிலியத்துக்கு டி. நொபிலியால் இடப்பட்டது. இதன் வளர்ச்சியாகவே கிறித்தவர்கள் வேதக்காரர்கள் என்ற அடையாளத்தைப் பெற்றார்கள். அவர்கள் சென்று வழிபடும் தேவாலயம் வேதக்கோவில் என்ற பெயரால் சுட்டப்பட்டு இன்றுவரை அது தொடர்கிறது.

சீகன்பால்குவின் சமகாலத்தவரான வீரமாமுனிவர் விவிலிய மொழிபெயர்ப்பை மையமாகக் கொண்டு சீர்திருத்தக் கிறித்தவர்களுடன் வாதிட எழுதிய நூலுக்கு 'வேதவிளக்கம்' என்றே பெயரிட்டார்.

இச்சூழலில்தான் சீகன்பால்க் தமது விவிலிய மொழிபெயர்ப்புக்கு அஞ்சுவேதப் பொத்தகம் எனத் தலைப்பிட்டார். வேதம் என்பது அடித்தள மக்கள் கேட்கவும் பயிலவும் தடைசெய்யப்பட்டிருந்த சமூக அமைப்பில் தமக்கென ஒரு வேதத்தை மத மாற்றத்தின் வாயிலாக அடித்தள மக்கள் பெற்றனர். அஞ்சுவேதப் புத்தகம் 500 படிகள் அச்சிடப்பட்டது. தாம் மொழி பெயர்த்து அச்சிட்ட அஞ்சுவேதப் புத்தகத்திற்கு:


> சுதனாகிய சர்வேஸ்வரனாய் இருக்கிற யேசு கிறிஸ்து நாதரானவர் இந்த பூலோகத்தில் மனுசனாய்ப் பிறந்த விசேஷங்களையும் போதிச்சு விச்ச உபதேசங் களையும் செய்த அற்புதங்களையும் மனுசருக்கு வேண்டிப் பாடுபட்டு எல்லாரையும் ரட்சித்து வித்தவங்களையும் உயிரோடே எழுந்தருளவித்து பரலோகத்திலே மகிமையாக அவருடைய சீஷர் களாகிய அப்போஸ்தலமார்கள் லோகம் எங்கும் போய் இப்படிக் கொத்த விசேஷங்களை சகல வசனங்களுக்கும் பிரசங்கம் பண்ணினதையும் வெளிப்படுத்திய புது ஏற்பாடினுடைய முதலாம் வகுப்பாகிய அஞ்சுவேத பொஸ்தகம். கிறிஸ்து பிறந்த ஆயிரத்து எழுநூத்து பதினாலாம் வருஷமாகிற போது தரங்கம்பாடியிலே இருக்கிற பாதிரிமார் களுடைய அச்சிலே பதிப்பிக்கப்பட்டது.

என்ற தலைப்பை சீகன்பால்க்கும் குருண்டலரும் இட்டுள்ளார். இந்நூல் வெளியான காலத்தில் நான்காம் பிரடரிக் என்ற மன்னன் டென்மார்க் நாட்டை ஆண்டு

வந்தான். இம்மொழிபெயர்ப்பு நூலை அவனுக்குக் காணிக்கையாக்கி தமிழிலும், ஜெர்மனிலும் அதை எழுதியுள்ளனர். அப்பகுதி வருமாறு:

> *மகா மகிமையுள்ளவருமாய், மகாவல்லமையுடைத் தானவருமாய் சகலகிருபை உள்ளவருமாய் இருக்கிற மகாராசவாகிற தென்மார்க்கச் சீமைக்கும் நார்வேயாகிய சீமைக்கும் வெரியுன்னத சீமைக்கும் சுயம் பார்பத்தியம் உடைத்தான ஆண்டவருக்காக ராச்சியபாரம் பண்ணுகிற யெங்களுடைய கிருபை யுள்ள ராசாவாயிருக்கிற பிரடரிக்கு சுவார்ட்ஸ் சென்கிறவருக்குச் சமாதானமும் பாக்கியமும் ராச்சியபாரமும் ஆசிர்வாதமும் தேவநன்மை களுடைய பரிபூரணமும் நித்திய சீவனத்தை யுடைய கிரிடமும் உண்டாகக் கடவதென்று அடியேன்கள் வேண்டிக் கொள்கிறோம்.*

ஆள்வோனிடம் இறையடியார்கள் எவ்வளவு தாழ்ச்சியுடன் இருந்துள்ளார்கள் என்பதற்கு இப்பகுதி நல்ல எடுத்துக்காட்டு, 'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே' என்று நாமும் பாடி யுள்ளோமே!


சேசுகிறீஸ்துநாதருடைய
பரிசுத்த
சுவிசேஷம்.
இஃது
அந்நியதேசத்துப்போதகர்சபையிலுள்ள
அப்போஸ்தொலிக்குக் குருக்களிற்
சிலரால்
மொழிபெயர்க்கப்பட்டுப்
புதுவையிலெழுந்தருளியிருக்கும்
மகாகனம் பொருந்திய ஆண்டவராகிய
கிளெமேன்சு பொனந்
துரிசிப்பாவென்னும
நாமதேயங்கொண்டிருக்கிற
மேற்றிராணியாரவர்களனுமதியின்
உரோமாபுரியினின்றுவந்த உத்தாரத்தின்
படியே
௲அ௱௫௰-௭
புதுவையிற் சன்மவிராக்கினிமாதாகோயிலைச்சேர்ந்த
அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

## கத்தோலிக்கரின் மதிப்பீடு

ஆனால் கத்தோலிக்கத் துறவியர், இம்மொழிப் பெயர்ப்பை எதிர்மறையாகவே விமர்சித்தனர். வீரமாமுனிவர் தமது வேதவிளக்கம் நூலில் மிகக் கடுமையாக விமர்சித்ததுடன் பகடியும் செய்துள்ளார்.

கத்தோலிக்கக் குருக்கள் தாம் மொழிபெயர்த்த தமிழ் விவிலியப் பகுதிகள் அனைத்துக் கத்தோலிக்கர் களிடமும் அறிமுகம் ஆவதை விரும்பவில்லை. தேர்வு செய்யப்பட்ட பகுதிகளை மட்டுமே வாசிக்க அனுமதித்தனர். தேவாலயத்தில் நிகழ்த்தப்படும் மறையுரைகளில் மட்டுமே அது வாசிக்கப்பட்டது. இதை, சீர்திருத்த கிறித்தவர்கள் குற்றச்சாட்டாகக் கத்தோலிக்க மறைப்பணியாளர்கள் மீது வைத்தனர். இது ஒருவகையான ஏமாற்று வேலை என்றனர். தமது வேத விளக்கம் என்ற நூலில் இதற்கு வீரமாமுனிவர் பின்வருமாறு பதிலளித்தார்:

> *எழுதப்பட்ட வேதாகமங்களை அவனவன் தன் மனதின்படியே மறுபாஷையாக திருப்பவும் திருப்பினதை அவனவன் வாசிக்கவும் அதற்கு அர்த்தஞ் சொல்லவும் நல்லதென்று பதிதர்* அபத்தமாய்ச் சொல்கிறார்கள்... வேதாமகங்கள் தேவவாக்கியமாகக் கொள்ள எவருக்கும் உயிர்தரும் அமிர்தமாகும். ஆகிலும் பசுவின்பால் அமிர்தமா யினுஞ் ஜீரண சக்தியற்றவர்களுக்கு அது விஷமல்லோ?*

காகிதங்களிலும் ஓலைச்சுவடிகளிலும் எழுதப்பட்டு ஒரு குறுகிய வட்டத்திற்குள் மட்டுமே அறிமுகமாகி இந்த விவிலியம் அச்சிடப்பட்ட புத்தக வடிவில் வெளிப்பட்டு அனைவர் கைக்கும் சென்றது கத்தோலிக்க மறைப்பணியாளர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி யிருக்கும் என்பதில் ஐயமில்லை.

சீகன்பால்கின் சமகாலத்தவரான வீரமாமுனிவர் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் புலமை மிக்கவராய் இருந்தார். இவரளவுக்கு சீகன்பால்க் தமிழ்ப்புலமைமிக்க வரல்லர்தான். ஆனால் கடையனுக்கும் கடைத்தேற்றம் என்ற வகையில் மக்களது பேச்சு மொழியில் விவிலிய மொழிப்பெயர்ப்பைச் செய்துள்ளார். தமிழ் இலக்கிய இலக்கணப் புலமை கொண்ட வீரமாமுனிவர் சீகன் பல்குவின் மொழி பெயர்ப்பில் இருந்து சில பகுதிகளை மேற்கோளாகக் காட்டி மொழிபெயர்ப்பின் தரத்தைக் குறை கூறினார். குறிப்பாக மத்தேயூ *(4:18, 18:17)*, லூக்கா *(6:14)*, ரோமர்கள் *(9:22)* கொரிந்தியர் *(7:3, 9:5)* பீட்டர் *(2:2)* தீமத்யூ *(3:6)* ஹிப்ருக்கள் *(13:4)* ஆகிய பகுதிகளைச் சுட்டிக்காட்டினர்.

---

* சீர்திருத்த கிறித்தவர்கள்

அழகு குன்றிய தமிழில் (பேச்சுத் தமிழில்) விவிலியத்தை மொழிபெயர்த்ததானது ஒளிவீசும் அணிகலனை சேற்றில் புதைப்பதையும், அமுதத்தில் நஞ்சைக் கலப்பதையும் அழகிய ஓவியத்தின் மீது கரியைப் பூசுவதை ஒக்கும் என்றும் குறிப்பிட்டார். அஞ்சுவேதப் புத்தகம் குறித்த எள்ளல் தன்மையுடன் கூடிய அவரது விமர்சனத்தின் ஒரு பகுதி வருமாறு:

> ஒரு வரி முடியா முன்னே பார்த்த கண்ணும் வேக, உச்சரித்த நாவுந் துவர்ப்ப, கேட்ட காதுங் கைப்ப, மிகவும் வருந்துதற் காரணமாக, தொடரெழுதி யைந்த வகையும் எழுத்து வழுவி, யெடுத்த நீச்ச சொல்லுங் கீழிறந்த திடறிய சொல்லை கூட்டின வசனமும் யிவையெல்லாம் ஒன்று தளர்ந்து மயங்கி செந்தமிழ் கெடுக்கவும், கேட்டார் காதிரண்டையும் பிளந்து உரித்து கொடுந்தீயூட்டி உச்ச வருந்தனங் கொடியர் நினைத்த மற்றோர் பாஷை அதென்று, பொங்கிய வெகுளியோடு அதை தானெறிந்து வந்ததைக் கொணர்ந்த சிறிய சிந்தாயினை சினந் தடித்ததையென துரத்த மிகவும் வருந்தா நின்றதாம்.

வீரமாமுனிவரின் இக்கடுமையான விமர்சனத்துக்கு அவரது தமிழ்ப்புலமை மட்டுமே காரணமல்ல. அல்லது சமயப்பரப்பலில் தன் போட்டியாளராக சீகன்பால்க் இருந்தார் என்பதும் காரணமல்ல. அவர் சார்ந்திருந்த கத்தோலிக்கத் திருச்சபை விவிலியம் தொடர்பாகக் கொண்டிருந்த அணுகுமுறையே காரணமாகும்.

கிரேக்க, ஹிப்ரூ மொழிகளில் இருந்து இலத்தீன் மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட விவிலியத்தையே தன் அதிகாரப்பூர்வமான விவிலியமாகக் கத்தோலிக்கத் திருச்சபை கொண்டிருந்தது. அதைப் படித்து விளக்கம் தரும் உரிமையைத் தன்னிடமே வைத்துக் கொண்டது. செர்மானிய மொழியில் விவிலியத்தை மொழி பெயர்த்ததன் விளைவாக மார்டின் லூதர் கத்தோலிக்கத் திருச்சபையின் சீற்றத்துக்கு ஆளானார் என்பது வரலாறு கூறும் செய்தி. சீகன்பால்குவின் செயல் விவிலியத்தை அடித்தள மக்களிடம் கொண்டு சேர்ந்தது. இதுவே வீரமாமுனிவரின் சீற்றத்துக்கு காரணம் எனலாம்.


காஸ்டன் லாரெண்ட் என்ற பிரெஞ்சு சேசுசபைத் துறவி *1741* செப்டம்பர் *20*-ஆம் நாள் எழுதிய கடிதம் ஒன்றில் இம்மொழிபெயர்ப்பின், மொழி, நடை அமைப்பு ஆகியன சிறப்பாக இல்லை என்று குறிப்பிட்டுள்ளதுடன் ஒரு புனித நூலுக்குப் பெருமை சேர்ப்பதாக அமையவில்லை என்றும் எழுதியுள்ளார்.

பெர்ரி கிலூனி என்ற சேசு சபைத் துறவி தமது ஆண்டு மடலில், இம்மொழிப்பெயர்ப்பில் நயமற்ற தமிழ் இடம் பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டதுடன் அவர்களது விளக்கவுரைகளையும், தவறுகளையும் விமர்சனம் செய்துள்ளார். அதே நேரத்தில் நூலாக்கத்திற்குப் பயன்படுத்தியுள்ள அச்செழுத்துக்களைப் பாராட்டியுள்ளார்.

### திருத்திய பதிப்பு

சீர்திருத்தக் கிறித்தவ மறைப்பணியாளர்கள் சிலரும் பேச்சு மொழியில் விவிலிய மொழிபெயர்ப்பு அமைந்தது தவறு என்றனர். இவ்விமர்சனங்களை ஏற்று மத்தேயு நற்செய்தி நூலின் திருத்தப்பட்ட பதிப்பு *25* மார்ச் *1739*-இல் தரங்கம்பாடி அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியானது. இந்நூலின் தமிழ்த் தலைப்பானது 'யேசு கிறிஸ்து சுவாமியின் சீசனாகிய அப்போஸ்தலரும் சுவிசேஷிகளுமாயிருந்த அர்ச்சிஷ்டமாத்தி என்பவர் எழுதுவித்த ஆகமம் என்றிருந்தது.

இப்பதிப்பிற்காக சீகன்பால்க்கின் முந்தைய பதிப்பை மட்டுமின்றி கத்தோலிக்கர்கள் பயன்படுத்தி வந்த வேறு இரு விவிலிய மொழி பெயர்ப்புகளையும் பயன்படுத்திக் கொண்டார். இத்துடன் விவிலிய மொழி பெயர்ப்பு நின்றுவிடவில்லை. இது மேலும் தொடர்ந்தது.




### தொடர்ந்த பணி

சீகன்பால்கு அச்சிட்ட அஞ்சுவேதப் புத்தகம் விவிலியத்தின் புதிய ஏற்பாட்டை உள்ளடக்கியது.

இதனையடுத்து விவிலியத்தின் பழைய ஏற்பாட்டைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடத் திட்டமிட்டார். இதன் பொருட்டு கத்தோலிக்கத்தின் சேசுசபைத் துறவியர் நாகப்பட்டிணத்திலும் சென்னை சாந்தோமிலும் பயன்படுத்தி வந்த பழைய ஏற்பாட்டுச் சுவடிகளை 1711 டிசம்பரில் பெற்று அதைப் படித்தறிந்தார். பின் ஹிப்ரூ மொழியில் இருந்து தாமே மொழி பெயர்க்கலானார். இதன் மொழிநடை பேச்சுவழக்கிலேயே இருந்தது. 1719 பிப்ரவரி 23-இல் இவர் இறக்கும் முன்னர் பழைய ஏற்பாட்டின் பகுதிகள் அச்சுக்கு ஆயத்தமாய் இருந்தன. அவர் இறந்த பின்னர் தரங்கம்பாடியில் உள்ள டேனிஷ் மிஷன் அச்சகத்தில் 1724-ஆம் ஆண்டில் 400 படிகள் அச்சிடப்பட்டன. இதன் தலைப்பு இலத்தீன் மொழியிலும், தமிழிலும் அச்சிடப்பட்டிருந்தது. தமிழில் இந்நூலின் தலைப்பு பின்வருமாறு காணப்படுகிறது.

> அளவில்லாத ஞானமுள்ளவருமாய் அளவில்லாத கிருபையுள்ளவருமாய் அளவில்லாத தெய்வீகமுள்ளவருமாய், இருக்கிற பராபர வஸ்துவானவர். பழைய ஏற்பாட்டினுடைய காலத்திலே திருவுளம் பத்தின வேத பொஸ்தகத்தின் ரெண்டாம் பகுப்பு:

விவிலிய மொழிபெயர்ப்புடன் மட்டுமின்றி விவிலியத்தில் இடம்பெறும் சொற்களுக்கான அகராதி ஒன்று. 'தேவ அருள் வேதபுராணம்' என்ற தலைப்பில் 1731-ஆம் ஆண்டில் கொழும்பு நகரில் வெளியானது. சீகன்பால்குவின் புதிய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பை கி.பி.1772-இல் திருத்தியமைத்து, சென்னை வேப்பேரி அச்சகத்தில் ஆயிரம் படிகள் அச்சடித்து இவர் வெளியிட்டார். இம்மொழிபெயர்ப்பு, 'நமது கர்த்தரும் இரட்சகருமாகிய யேசு கிறிஸ்துவினால் உன்னத கிருபையின் உடன்படிக்கையாகிய புது ஏற்பாடு' என்ற தலைப்பில் வெளியானது.

> இதிலே அர்ச்சிஸ்ட ரூத் என்கிறவருடைய முதலாம் பொஸ்தகமும் அர்ச்சிஸ்ட் சாமுவேலன்கிற வருடைய முதலாம் பொஸ்தகமும், ரெண்டாம் பொஸ்தகமும், பரவிப் போலென்று சொல்லப் பட்ட முதலாம் பொஸ்தகமும், ரெண்டாம் பொஸ்தகமும் யெச்சேருவென்கிற வருடைய பொஸ்தகமும், யோபு யென்கிறவருடைய பொஸ்தகமும், தாவீதென்கிறவர் யெழுதிவைத்த ஞானசங்கீதங்களென்கிற பொஸ்தகமும், சால மோன்யென்கிறவர் பேசின வாக்கியங்களுடைய பொஸ்தகமும் யெசக்கியேல் யென்கிற நாமத்தைக் கொண்டிருக்கிற பொஸ்தகமும் உன்னதமான பாட்டினுடைய பொஸ்தகமும் அடங்கியிருக்கிறது. கிறிஸ்து பிறந்து 1724 வருஷமாகிய போது இது தரங்கன்பாடியிலேயிருக்கிற பாதிரிமார்களுடைய அச்சிலே பதிப்பிக்கப்பட்டது.

சீகன்பால்குடன் இணைந்து விவிலியத்தின் பழைய ஏற்பாட்டை மொழி பெயர்த்த ஸ்வார்ட்ஸ் எஞ்சிய பகுதிகளை மொழி பெயர்த்து 1727 அக்டோபர் மூன்றாம் நாளான்று தரங்கம்பாடி அச்சகத்தில் 400 படிகளை அச்சிட்டு வெளியிட்டார். இந்நூலில் சீகன்பால்க் மொழிபெயர்த்த பகுதிகளும் இடம் பெற்றிருந்தன.

சென்னை வேப்பேரி, சிராம்பூர், புதுச்சேரி, கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய ஊர்களில் தமிழ் விவிலியம் அச்சானது. போர்ச்சுக்கீசியரும், டச் நாட்டினரும், மொழி பெயர்ப்பிலும், அச்சாக்கத்திலும் முன்நின்றனர். இவ்வாறு மொழி பெயர்த்தவர்களுள் ஜோனோப் பிலிப் பப்ரிஷியஸ் என்ற சீர்திருத்தக் குரு முக்கியமானவர்.

### பணியின் தொடர்ச்சி

கத்தோலிக்க குருக்களால், இலத்தீன் மொழியில் இருந்தும், போர்ச்சுக்கீஸ் மொழியில் இருந்தும், மொழி பெயர்க்கப்பட்ட விவிலியம், சீகன்பால்குவினால் கிரேக்க மொழியில் இருந்தும் ஹீப்ரு மொழியில் இருந்தும் மொழி பெயர்க்கப்பட்டது. அத்துடன் அச்சுவடிவம் பெற்று அனைவருக்கும் கிடைத்தது. இது தமிழ் அறிவுத்துறையில ஏற்பட்ட பெரும் மாறுதலாகும்.


சீகன்பால்குவின் விவிலிய மொழி பெயர்ப்பும் அச்சாக்கமும் தமிழ் உரைநடை வரலாற்றில் ஒரு புதிய தொடக்கமாக அமைந்தது. அத்துடன் ஒரு குறுகிய வட்டத்திற்குள் மட்டுமே புழங்கிய ஓலைச் சுவடி களுக்கு மாற்றாக அச்சுப் புத்தகப் பண்பாட்டை அறிமுகம் செய்தது. இதன் வளர்ச்சி நிலையாக தொடக்கக் கல்விக்கான பாட நூல்கள் தரங்கம்பாடியில் அச்சிடப்பட்டன.


இவ்வாறு 16-ஆம் நூற்றாண்டில் அண்ட்ரிக் அடிகளார் என்ற போர்ச்சுக்கீசியக் கத்தோலிக்கத் துறவி தொடங்கி வைத்த விவிலிய மொழி பெயர்ப்பானது 18-ஆம் நூற்றாண்டில் சீர்திருத்தக் கிறித்தவ சபையின் சீகன்பால்க், குருண்டலர் பெப்ரிஷியஸ் ஆகியோரால் அச்சு வடிவம் பெற்றது.

தமிழ்நாட்டின் தொடக்கக்காலக் காலனியவாதி களான போர்ச்சுக்கீசியர், டச் நாட்டினர், டேனிஷியர் ஆகியோரை அடுத்து வந்த பிரெஞ்சு, ஆங்கிலக் காலனிய வாதிகள் 19-ஆம் நூற்றாண்டில் விவிலிய மொழி பெயர்ப்பையும், அச்சாக்கத்தையும் தொடர்ந்தனர்.

(தொடரும்)

# வாழ்த்துகள்...






06-11-2017 அன்று நடைபெற்ற
தினத்தந்தி நாளிதழ் பவளவிழா நிகழ்வில்
சிறந்த இலக்கிய நூலுக்கான
'தினத்தந்தி விருது'
என்.சி.பி.எச். வெளியீடான
'இலக்கியத்தில் மேலாண்மை'
நூலுக்கு வழங்கப்பட்டது.

விருது பெற்ற
நூலாசிரியர் வெ.இறையன்பு அவர்களுக்கு
'நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்'
வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.



# மார்க்சியத் தத்துவ உருவாக்கத்தில் மார்க்சும் ஏங்கல்சும் சில சிந்திப்புகள்

ந.முத்துமோகன்

மார்க்ஸ், ஏங்கெல்ஸ் ஆகிய இருவருக்கும் இடையில் ஓர் அற்புதமான வேலைப் பிரிவினை நிலவியது. பொதுவான பல வேலைகளை அவர்கள் இணைந்து செய்தது போக, அவர்கள் தனித்தனியாகவும் பல வேலைகளைச் செய்து முடித்தனர். மார்க்சைப் பொறுத்தமட்டில், அவரது கவனம் பெருமளவில் மார்க்சியக் கோட்பாட்டு உருவாக்கத்திலும் அடுத்த கட்டத்தில் “மூலதனம்” நூலிலும் குவிந்திருந்தது. வரலாறு குறித்த பொருள் முதல்வாதப் புரிதலும், உபரிமதிப்பு குறித்த அரசியல் பொருளாதாரக் கோட்பாடும் மார்க்சின் இரண்டு மேதமை கொண்ட கண்டுபிடிப்புகள் என்று ஏங்கெல்ஸ் எடுத்துக்காட்டுவார்.

வரலாறு குறித்த பொருள்முதல்வாதப் புரிதல் மார்க்சின் காத்திரமான தத்துவ உழைப்பை அடிப் படையாகக் கொண்டது. “கம்யூனிஸ்ட் அறிக்கை” வெளிவந்த 1848 ஆம் ஆண்டிற்கு முன்னதும் பின்னதுமான ஆண்டுகளில் மார்க்ஸ் இந்தத் தத்துவப் பணியைச் செய்து முடித்தார். மார்க்சின் வாழ்க்கைக் காலத்தில் நடுப்பகுதியிலிருந்து இறுதிக் காலம் வரையிலான அவரது உழைப்பு சமகாலச் சமுதாயமான முதலாளித்துவம், அதன் பொருளாதார உற்பத்தி முறை ஆகியவை தொடர்பானது. அவைதாம் உபரி மதிப்பு குறித்த கோட்பாட்டின் எல்லைகளையும் குறித்தன. மார்க்சின் வாழ்க்கை முழுவதையும் மேற்குறித்த இரண்டு

கண்டுபிடிப்புகளும் அவற்றுக்கான உழைப்பும் ஆக்கிரமித்திருந்தன என ஒரு வசதிக்காகச் சொல்லலாம்.

ஏங்கல்சைப் பொறுத்தமட்டில், அவர் மார்க்சின் இணைபிரியாத நண்பர். மார்க்ஸ் என்ன செய்து கொண்டிருந்தார், அவருக்கு என்ன தேவைகள் இருந்தன, வேலைகளுக்கு நடுவில் இட்டு நிரப்ப வேண்டிய இடைவெளிகள் யாவை என்பவற்றை அவர் நன்கு அறிந்திருந்தார். மார்க்சை ஏங்கெல்ஸ் எப்போதுமே அணைத்து நின்றார். மார்க்ஸ் என்ற இளம் தத்துவ அறிஞரில் முதலாளியப் பொருளாதாரம் குறித்த ஆர்வங்களை ஏற்படுத்தியவர் ஏங்கெல்ஸ் என்று ஒரு சித்தரிப்பு உண்டு. வரலாற்றுப் பொருள்முதல்வாதப் புரிதலை உருவாக்கிக் கொள்ள மார்க்ஸ் போராடிக் கொண்டிருந்த காலங்களில், 1843 ல் "அரசியல் பொருளாதார விமர்சனம் குறித்த பொது வரையறைகள்" என்று ஒரு கட்டுரையை ஏங்கெல்ஸ் எழுதினார். இன்னும் சில ஆண்டுகளில், 1845 ல் ஏங்கெல்ஸ் "இங்கிலாந்தில் தொழிலாளர் வர்க்கத்தின் வாழ்க்கைச் சூழல்கள்" என்றொரு நூலை எழுதி வெளியிட்டார். இந்த இரண்டு படைப்புகளும் அவை சார்ந்த கலந்துரையாடல்களுமே மார்க்சிடம் அரசியல் பொருளாதார ஆர்வங்களை ஏற்படுத்தின என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இது மார்க்ஸ் ஏங்கெல்ஸ் உறவுகளில் ஒரு பரிமாணம். இதுபோலப் பல வேளைகளில் அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் அறிவுப்புல வட்டாரங்களில் புதிய ஆர்வங்களை ஏற்படுத்திக் கொண்டனர். நூல்களைச், செய்திகளைப் பகிர்ந்து கொண்டனர்.

1848 ஐ ஒட்டிய ஆண்டுகள் மார்க்ஸ் ஏங்கெல்சுக்கு மிக நெருக்கடியான ஆண்டுகள். ஹெகல், ஃபியவர்பாக் ஆகியோரின் செல்வாக்கிலிருந்து விடுபட்டு புதிய சிந்தனை அவர்களிடத்தில் உருவான ஆண்டுகள் அவை. இளம் ஹெகலியர் போன்ற அமைப்புகளில் இணைந்து வேலை செய்த நண்பர்களையும் தோழர்களையும் மார்க்சும் ஏங்கெல்சும் கடந்து நடந்த காலங்கள் அவை. புதிய நிலைகளை எட்டியபோது பலருடன் அவர்களுக்கு மோதல்கள் ஏற்பட்டதுண்டு. மார்க்ஸ் ஆக்ரோஷத்துடன் வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடுவார் என்ற தகவலை அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதிய ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். புதிதாக உருவான "மார்க்சிய"த்தை மார்க்சின் நண்பர்களே அங்கீகரித்து விடவில்லை. "மார்க்சியம்" ஓரளவு அங்கீகரிக்கப்பட்டு பரவிய நாட்களில், முதலாம் கம்யூனிஸ்ட் அகிலம் உருவான போது, அதனுள் நிகழ்ந்த கருத்துப் போராட்டங்களும் காத்திரமானவை. இத்தகைய சூழல்களில்தான் ஏங்கெல்ஸ் என்ற மார்க்சின் நண்பரின் மற்றுமொரு பரிமாணம் வெளிப்பட்டது. புரூனோ பௌவர், டூரிங்க், ப்ரௌதன், மாக்ஸ் ஸ்டனர், மிகயில் பகூனின் போன்ற பலருடன் மார்க்ஸ் ஏங்கெல்சுக்கு கருத்து வேறுபாடுகள் திரண்டன. அது உக்கிரமான ஒரு விவாதச் சூழல், உரையாடற் சூழல், மோதல் சூழல். மார்க்சை அத்தகைய சூழல்களில் வியூகம் கட்டிப் பாதுகாப்பது போன்ற ஒரு பணியை ஏங்கெல்ஸ் செய்துவந்தார். ஏங்கெல்ஸ் ராணுவ உத்திகள் தெரிந்தவர். எனவே போராட்ட வியூகங்கள் வகுப்பதிலும் அவர் திறன் கொண்டவராக இருந்தார். இது அவரது இரண்டாவது முக்கியமான பரிமாணம் என்று கொள்ள வேண்டும்.

1848-50களில் ஜெர்மனியிலும் இன்னும் சில ஐரோப்பிய நாடுகளிலும் ஒரு தொழிலாளர் எழுச்சியை மார்க்சும் ஏங்கெல்சும் எதிர்நோக்கினர். ஐரோப்பியத் தொழிலாளர் எழுச்சி திரளும்போது, பூர்ஷ்வா வர்க்கம் எத்தகைய நிலைப்பாட்டை எடுக்கும்? பூர்ஷ்வா வர்க்கம் ஐரோப்பிய நாடுகளின் நில உடமை வர்க்கத்தோடு எத்தகைய உறவினைக் கொண்டிருக்கும்? பூர்ஷ்வா வர்க்கம் மாற்றங்களை விரும்பும் ஒரு வர்க்கம் என்ற முறையில் பழமைவாத நில உடமைச் சக்திகளைப் புறந்தள்ளும் என்றும் மார்க்ஸ் எதிர்பார்த்தார். ஆயின் 1848-50 ஆம் ஆண்டுகள் மார்க்சுக்கு அதிர்ச்சிகளை ஏற்படுத்தின. ஜெர்மனியிலும் பிரான்சிலும் பூர்ஷ்வா வர்க்கம் நில உடமையாளர்களோடு உடன்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டது. இரண்டு ஆளும் வர்க்கங்களும் சேர்ந்து விவசாயிகளையும் தம்பக்கம் சேர்த்துக் கொண்டன. தொழிலாளர் வர்க்கம் தனிமைப்பட்டது, எழுச்சிகள் தோற்கடிக்கப்பட்டன.

நவீன பூர்ஷ்வா வர்க்கத்தின் வரலாற்றுரீதியான முற்போக்குப் பாத்திரம் மிகக் குறைந்த ஓர் எல்லைக்குட்பட்டது என்பதை மார்க்சும் ஏங்கெல்சும் உணர்ந்து கொண்ட சந்தர்ப்பம் என அதனைக் கொள்ள வேண்டும். மார்க்சும் ஏங்கெல்சும் விவசாயிகளைப் பற்றிய தமது சிந்தனைகளை விரிவுபடுத்த முடிவு செய்தனர். மார்க்ஸ், சமகால உடனடி அரசியலில் ஆளும் வர்க்கங்களின் சூதாட்டங்களைப் பற்றிக் கோபத்தோடு எழுதினார். நகர்ப்புற தொழிலாளர் வர்க்கம் மற்றொரு பிரதான உழைக்கும் வர்க்கமான விவசாயிகளோடு நிரந்தரமான சமூக அரசியல் கூட்டணியை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு மார்க்ஸ் வந்து சேர்ந்தார். மற்றொரு புறம், ஏங்கெல்ஸ், ஜெர்மானிய வரலாற்றில் விவசாயிகளின் பாத்திரம் பற்றிய ஆய்வுகளில் அக்கறை காட்டினார். வரலாறு முழுவதிலும் விவசாயிகள் நில உடமைக்கு எதிரான கலகங்களிலும் எழுச்சிகளிலும் ரகசிய சங்கங்களை உருவாக்குவதிலும் ஈடுபட்டு வந்திருப்பதை அவரால் இப்போது காணமுடிந்தது. நில உடமையை ஆதரித்து நின்ற அரசாங்கத்தையும் கத்தோலிக்க கிறித்தவ சமயத்தையும் விவசாயிகள் விட்டு வைக்கவில்லை. ஆயுதமேந்திய போராட்டங்களையும் அவர்கள் முன்னெடுத்தனர். விவசாயிகளின்

எழுச்சிகள்தாம் வரலாற்றின் மிகப்பெரும் நிறுவனமான கிறித்தவ சமயத்தை இரண்டாகப் பிளந்தன. கத்தோலிக்கம், சீர்திருத்தக் கிறித்தவம் என்ற இரண்டு சமயங்கள் உருவாயின. இது குறித்த ஆய்வுகளைக் கொண்டுதான் ஏங்கெல்ஸ் "ஜெர்மனியில் விவசாயிகளின் போர்" என்ற நூலை எழுதி வெளியிட்டார். ஒரு முக்கியமான அரசியல் வேலைத்திட்டத்தைத் தன்னுள் கொண்டுள்ள நூல் அது. விவசாயிகளால் முடியுமா? என்ற கேள்விக்கு இந்நூல் பதில் சொல்லியது. இந்நூல் உருவாக்கம் ஏங்கெல்சின் மூன்றாவது பரிமாணத்தைக் குறித்து நிற்கிறது. முக்கியமான சந்தர்ப்பங்களில் இதுபோன்ற நூல்களை ஏங்கெல்ஸ் எழுதி வழங்கினார் என்பதைக் கவனத்தில் கொள்ளுவோம்.

மார்க்ஸ், "மூலதனம்" நூலின் உருவாக்கத்தில் இயங்கியல் தத்துவத்தின் முழு ஆற்றலையும் பயன் படுத்தியிருந்தார். இயங்கியலைப் பற்றித் தனியாகவே ஒரு நூலை எழுத அவர் நினைத்திருந்தார். ஆயின் அவரது முடிவுறா வேலைகளுக்கு இடையில் அது சாத்தியப் படவில்லை. இத்தகைய சூழல்களில் ஏங்கெல்ஸ் இயங்கியல் பற்றிய தகவல்களைத் திரட்டத் தொடங்கினார். குறிப்பாக, நவீன விஞ்ஞானங்கள் இயங்கியல் குறித்து வழங்கும் ஆதாரங்களில் அவர் கவனம் செலுத்தினார். "இயற்கையின் இயங்கியல்" என்ற தலைப்பில் இன்று கிடைக்கும் நூல் அத்தகைய முயற்சியில் உருவான நூலே. அது முழு வடிவம் பெறாமல் பல இடங்களில் குறிப்புகளாகவே உள்ளது. மார்க்சியத்திற்கு விஞ்ஞானங்களின் ஆதரவை இந்நூல் கோரிநின்றது. இந்நூலின் உருவாக்க முயற்சி ஏங்கெல்சின் நான்காவது பரிமாணத்தைக் குறித்து நிற்கிறது எனலாம்.

இந்நூலுக்கு "இயற்கையின் இயங்கியல்" எனத் தலைப்பிட்டிருப்பது பொருத்தம் தானா? என்ற கேள்வியில் நியாயம் உண்டு. இந்நூலுக்கு, "இயற்கை விஞ்ஞானங்களின் இயங்கியல்" என்ற தலைப்பிட்டிருக் கலாம். ஏனெனில் மொத்த இயற்கையின் இயங்கியலை இந்நூல் பேசிவிடவில்லை, மாறாக, நவீன விஞ்ஞானங்கள் வழங்கும் தகவல்கள், வகைப்படுத்தல்கள், விஞ்ஞானக் கோட்பாடுகள் முதலானவற்றில், விஞ்ஞானிகள் தம்மை அறியாமலேயே வெளிப்படுத்தும் இயங்கியல் உண்மை களை ஏங்கெல்ஸ் இந்நூலில் பதிவு செய்துள்ளார். விஞ்ஞான அறிஞர்கள் தன்னிச்சையாகப் பயன்படுத்தும் இயங்கியல் முறைமைகளை ஏங்கெல்ஸ் எடுத்துக்காட்டு கிறார்.

மார்க்சின் மறைவுக்குப் பிறகு, "மூலதனம்" நூலின் பிற்பகுதி எழுத்துக்களைப் பதிப்பித்து வெளியிடும் ஏங்கெல்சின் மீதொரு மிகப்பெரிய பரிமாணத்தைச் சந்திக்கிறோம். மார்க்சின் வாழ்நாள் முழுவதும் அவருக்குப் பொருளாதார உதவிகள் செய்து, அவருடன் நின்ற ஏங்கெல்ஸ் பற்றிய தகவல்களையும் இங்கு மற்றுமொரு பரிமாணமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். மார்க்சை எப்போதுமே அணைந்து நின்று ஏங்கெல்ஸ் மேலெடுத்துச் செய்துவந்த மேற்குறித்த வேலைகளின் தொடர்ச்சியாகத்தான் "குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்" என்ற இந்நூலையும் காண வேண்டும்.

அமெரிக்க மானுடவியல் அறிஞரான மோர்கனின் "பண்டைய சமூகம்" என்ற நூலைப் (1877) படித்து மார்க்ஸ் எழுதி வைத்திருந்த குறிப்புகள் இப்போது "இனவியல் நோட்டுப் புத்தகங்கள்" என்ற தலைப்பில் நமக்குக் கிடைக்கின்றன. மோர்கனின் நூலின் முக்கியத்துவத்தை உணர்ந்து மார்க்சும் ஏங்கெல்சும் அது குறித்து எழுதவேண்டும் என ஏற்கனவே திட்ட மிட்டிருந்தனர் என்பதை உணரமுடிகிறது. ஆயின் மார்க்சின் பிற பணிகளும் பின்னர் அவரது மரணமும் அத்தகைய ஒரு நூலை வரவிடாமல் ஆக்கி விட்டன. எனவே அப்பணியைத் தான் ஒருவரேயாயினும் செய்துமுடிக்க வேண்டும் என்ற முனைப்பிலேயே ஏங்கெல்ஸ் அதனை மார்க்சின் மறைவுக்குப் பின் செய்து முடித்துள்ளார். மார்க்ஸ் தனது கையெழுத்துப் பிரதிகளில் எழுதி வைத்திருந்த குறிப்புகளைக் கொண்டே ஏங்கெல்ஸ் இந்நூலை உருவாக்கியுள்ளார் என்பதையும் தனது முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

ஏங்கெல்ஸ் எந்தத் தயக்கமும் இன்றி, மார்க்சிய சிந்தனை உருவாக்கத்தில் மார்க்ஸ் வகிக்கும் இடம் குறித்துத் தெளிவாகச் சொல்லுகிறார்: மார்க்ஸ் ஒரு மேதை, நாங்கள் திறமைசாலிகள். நாங்கள் இல்லாமலே கூட நாங்கள் செய்துள்ளவற்றை மார்க்சால் செய்திருக்க முடியும்; ஆயின் அவரின்றி எங்களில் எவரும் அவர் செய்துள்ளவற்றைச் செய்திருக்க முடியாது, என்று அவர் குறிப்பிடுகிறார்.

மார்க்சைப் பற்றி ஏங்கெல்ஸ் நட்புணர்வுடனும் உண்மையுடனும் கூறியுள்ளவற்றை ஏங்கெல்சுக்கு எதிராகவே பயன்படுத்துபவர்கள் இருக்கின்றனர். மார்க்சிய உருவாக்கத்தில் ஏங்கெல்சின் பங்களிப்பைப் பின்னுக்குத் தள்ளி அவர் மீது குற்றச்சாட்டுகளை அவர்கள் சுமத்துகின்றனர். அவற்றில் சிலவற்றை இங்கு வரிசைப்படுத்துவோம்.

மார்க்சியத்தில் பொருளாதார நிர்ணயவாதம் உருவாவதற்குக் காரணமாக அமைந்தவர் ஏங்கெல்ஸ். பொதுவாகவே மார்க்சியத்தைச் சில சூத்திரங்களாகச் சுருக்கிக் காட்டியவர் அவர். ஏங்கெல்சின் எழுத்துக்களில் மார்க்சியம் அதன் படைப்புத்தன்மையை இழந்து வாய்ப்பாடாக மாறிவிட்டது. சமூக வாழ்க்கைக்குச் சொந்தமான இயங்கியலை ஏங்கெல்ஸ் இயற்கைக்குச் சொந்தமானதாகச் சித்தரித்தார். மனிதப்பங்கேற்பின்றி

இயங்கியல் கிடையாது. ஏங்கெல்ஸ் ஒரு புறவயவாதி. ஏங்கெல்ஸ் ஒரு விஞ்ஞானவாதி. மார்க்ஸ் மனித நேயவாதி. கிட்டத்தட்ட சோவியத் அறிஞர்கள் "எளிமைப்படுத்தி" வழங்கிய ஸ்டாலினிய மார்க்சியத் திற்கு முன்மாதிரியாக ஏங்கெல்சின் மார்க்சியம் அமைந்தது. இவையெல்லாம் ஏங்கெல்சின் மீது சொல்லப்படும் குற்றச்சாட்டுகள்.

ஏங்கெல்ஸ் மீதான இந்தக் குற்றச்சாட்டுகளை மீறி நிற்கும் நூல் "குடும்பம், தனிச் சொத்து, அரசு ஆகிய வற்றின் தோற்றம்" எனும் இந்நூல். இந்த நூலின் மிகப் பெரிய சிறப்பு, இது மார்க்ஸ் தனது முழுக்கவனத்தையும் செலுத்திய நவீன முதலாளிய யுகத்திற்கு முந்திய (Pre-Capitalist) மிக நீண்ட வரலாற்றுக் காலக்கட்டத்தைப் பரவி நிற்கிறது. ஏடறியா வரலாற்றுக் காலம் என அழைக்கப்படும் புராதன சமூக அமைப்பில் தொடங்கி சில அபூர்வமான தொடர்ச்சிகளின் காரணமாக மத்திய காலத்தின் பிற்பகுதி வரை நீடிக்கும் வரலாற்றுக் காலத்தை ஏங்கெல்சின் நூல் தழுவி நிற்கிறது. முதலாளியத்திற்கு முந்திய யுகம் பற்றிய இந்நூலின்றி உண்மையில் இன்றைய மார்க்சியத்தை முழுவடிவில் உருவகிப்பதே சாத்தியமில்லாத ஒன்றாகும். பண்டைய வரலாறு சார்ந்த ஒரு மிகப்பெரிய இடைவெளியை இட்டு நிரப்பும் நூலாக இது அமைந்துள்ளது.

மோர்கன் எனப்படும் மானுடவியல் அறிஞரின் நூலில் தரப்பட்டுள்ள புராதன குடும்பம், ஆண்-பெண் பாலியல் உறவுகள், அரசு நிறுவனம் ஆகியன குறித்து கள ஆய்வுகளின் அடிப்படையில் சேகரிக்கப்பட்ட தகவல்கள், விளக்கங்கள் ஆகியவற்றை மார்க்சிய வரலாற்றுப் பொருள்முதல்வாதப் புரிதல் அடிப்படையில் மறு வாசிப்பு செய்து எழுதப்பட்ட நூல் இது. பலவகை மண உறவுகள், குலம், குடும்பம் சார்ந்த ரத்த உறவுகள், தாய்வழிச் சமுதாயம், அது உடைந்து சிதறுதல், தனிச் சொத்துரிமையின் தோற்றம், குலம் சார்ந்த தன்னாட்சி முறை, வர்க்கங்களின் தோற்றமும் மோதல்களும், அரசு எனும் அடக்குமுறை எந்திரத்தின் தோற்றம் எனப் பலவகையான பழம் வரலாற்று நிகழ்வுகளை இந்நூல் விரிவாகப் பேசுகிறது. கிரேக்க, ரோமானிய, ஜெர்மானிய மற்றும் அமெரிக்கச் செவ்விந்தியப் பழங்குடிகளின் வாழ்க்கைத் தரவுகளை இந்நூலில் மோர்கனைப் பின்பற்றி ஏங்கெல்ஸ் எடுத்தாளுகிறார்.

ஏங்கெல்ஸை சில விமர்சகர்கள் பொருளாதார நிர்ணயவாதியாகச் சித்தரிக்கின்றனர் என்று மேலே குறிப்பிட்டோம். இந்நூலில் அப்படிப்பட்ட பொருளாதார நிர்ணயவாதத்தைக் காண முடியாது. மாறாக, 1884 ஆம் ஆண்டு இந்நூலுக்கு ஏங்கெல்ஸ் எழுதிய முன்னுரையில், இரண்டு வகையான உற்பத்தி வடிவங்களைச் சுட்டிக் காட்டுகிறார். அவை பொருளாதார உற்பத்தி, மற்றும் மனித இனம் தன்னைத் தானே உற்பத்தி செய்து கொள்ளுதல். பொருளாதார உற்பத்தி மிகக்குறை வாகவே இருந்த பண்டைக்காலத்தில் குலமரபு உறவுகள் ஆதிக்கம் செலுத்தின, ஆயின் படிப்படியாக உற்பத்தி வளர்ந்த போது, பொருளுற்பத்தி உறவுகள் அவற்றை மீறி வளர்ந்து, குல மரபு உறவுகள் இரண்டாம் நிலைக்குச் செல்லுகின்றன. இவ்விரண்டு வகையான உறவுகளுக்கும் பொருந்தாநிலை ஏற்பட்டு அவை ஒரு புரட்சிக்கே இட்டுச் சென்றன என ஏங்கெல்ஸ் எழுதுகிறார். ஏங்கெல்ஸின் நூல், குலமரபு உறவுகள் நிலவிய காலத்திய சமூக நிறுவனங்களையும் அவற்றிலிருந்து பொருளுற்பத்தி உறவுகள் மீறி வளர்ந்த காலத்தையும் சித்தரிக்கின்றது. பொருளாதார அமைப்பு இன்னும் வலுப்படாத, வெளிப்படையாகத் தன்னை அறிவித்துக் கொள்ளாத காலத்தின் சமூக உறவுகளை, அச்சமூக உறவுகளின் இயங்கியலை இந்நூல் பேசுகிறது. பண்பாடு, அரசியல், பொருளாதாரம், வரலாறு ஆகிய பல பரிமாணங்களை மிக நுட்பமாக ஏங்கெல்ஸ் இந்நூலில் ஒன்றிணைக்கிறார். இது வேறு எந்த ஒரு மார்க்ஸ்-ஏங்கெல்ஸ் நூலிலும் காணக்கிடைக்காத சித்திரம்.

வரலாறு என்ற துறையும் மானுடவியல் என்ற தொரு துறையும் இந்நூலில் சங்கமமாகின்றன. வரலாறு, பழங்கால மக்கள் கூட்டங்களின் வாழ்க்கையைப் பேசத் தொடங்கும்போது, அது மானுடவியலுடன் இணைவது தவிர்க்கமுடியாது என்பது உண்மைதான். இருப்பினும், மார்க்சியத்தின் முதலாசிரியர்களில் ஒருவரான ஏங்கெல்சே நேரடியாக இப்பணியை முன்னெடுத்துச் செய்துள்ளார் எனும் போது இந்நூலின் சிறப்பு பலமடங்கு உயர்கிறது.

மானுடவியல் என்ற ஒரு துறை ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற பல்வேறு சூழல்களுக்கு இடையில், குறிப்பிடத்தக்க அதன் ஒரு பங்களிப்பினைப் பற்றி இங்கு சொல்ல வேண்டும். 18-19 ஆம் நூற்றாண்டுகளின் அறிவு முதல்வாதத்தின் (Rationalism) ஒற்றை நேர்கோட்டுப் போக்கைத் திசைதிருப்பி ஆய்வுலகின் கவனத்தைப் பண்பாட்டு ஆய்வுகளை நோக்கி இட்டு வந்ததில் மானுடவியலுக்கு ஒரு முக்கிய இடம் உண்டு. அறிவு முதல்வாதிகள் முன்வைத்த, அறிவுக்குப் பொருந்தாத பழம் சரக்குகளை புறம் தள்ளுங்கள் என்ற கோஷத்தை மௌனமாக மறுதலித்து நாட்டார் சமயங்கள், சடங்குகள், பழக்க வழக்கங்கள், வாய்மொழி வழக்காறுகள் ஆகிய வற்றைப் பண்பாடு, சமூக உளவியல் மற்றும் பயன்பாடு சார்ந்து விளக்கமளிக்கும் ஒரு துறையாக மானுடவியல் பரிணமித்தது. இந்த வகையில் அறிவுமுதல்வாதத்தின் ஒற்றை நேர்கோட்டுப் போக்கிலிருந்து விலகிய ஒரு செழுமையான அணுகுமுறை மானுடவியலில் காணப் பட்டது. அறிவு முதல்வாதத்தை நெகிழவாக்கும் ஓர் இயங்கியல் மானுடவியலுக்கு அமைந்திருந்தது.

மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்த நம்மைப் பொறுத்தமட்டில், மானுடவியலின் ஆய்வுப்பரப்பு பெருமளவில் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளைச் சார்ந்தது என்பது கவனிக்கத்தக்கது. அதாவது, ஐரோப்பிய அறிஞர்களால் அநாகரீக மானவை, வளர்ச்சி அடையாதவை, மூடத்தனமானவை, அழுக்கானவை என்றெல்லாம் புறம்தள்ளப்பட்ட வாழ்க்கைக் கூறுகள் மானுடவியலின் மறுமதிப்பீட்டுக்கு ஆட்படுகின்றன. மானுடவியலும் மார்க்சியமும் சந்தித்துக் கொள்ளும் இவ் அணுகுமுறையை "குடும்பம், தனிச்சொத்து..." நூலில் ஏங்கெல்ஸ் தொடங்கி வைத்தார் என்று கூற வேண்டும். பல ஐரோப்பிய அறிஞர்கள் மார்க்சிய ஆதரவு நிலைப்பாடுகளுடன் மானுடவியல் ஆய்வுகளில் ஈடுபட்டனர். மூன்றாம் உலக நாடுகளின் பல்கலைக்கழகங்களில் மானுடவியல், நாட்டார்வழக்காற்றியல் துறைகள் விருப்புடன் பயிலப்படுகின்றன. பேராசிரியர்கள் தேவி பிரசாத் சட்டோபாத்யாயா, நா. வானமாமலை, ஆ. சிவசுப்பிர மணியன் போன்றோர் இந்தியச் சூழல்களில் தமது மார்க்சிய நிலைப்பாடுகளுடன் ஊடும் பாவுமாக மானுடவியலின் பயன்பாட்டை உணர்ந்திருந்தனர். இன்றுவரை சமூக மானுடவியல், பண்பாட்டு மானுடவியல், பொருளாதார மானுடவியல், சூழல்சார் மானுடவியல், பெண்ணிய மானுடவியல் போன்ற துறைகள் இவ்வட்டாரத்தில் செழித்து வளர்ந்துள்ளன என்று கூறமுடியும்.


"மூலதனம்" நூலின் கறாரான பொருளாதார அணுகுமுறையைக் கொண்டு, மூன்றாம் உலக நாடுகளின் பொருளாதார அரசியலைப் புரிந்து கொள்ளுதல் ஒரு விதமான மார்க்சியம். ஆயின் "குடும்பம், தனிச் சொத்து..." நூலில் பேசப்பட்டுள்ள விடயங்களைக் கொண்டு மூன்றாம் உலக நாடுகளின் கலாச்சார அரசியல், அடையாள அரசியல், மத அரசியல், சாதியம், அரசு எந்திரத்தின் வட்டாரச் செயல்பாடுகள் போன்ற வற்றைப் பயில்வது இன்னொரு வகையான மார்க்சியம். மூன்றாம் உலக அரசியலில் இவை கூட்டாகப் பயணிக்க முடியும்.

ஏங்கெல்சின் நூலிலிருந்து ஒரு மார்க்சியப் பெண்ணியத்தை உருவாக்க முடியும். அது உருவாக்கப் பட்டுள்ளது. வரலாற்றின் முதல் வேலைப்பிரிவினையாக ஆண்-பெண் பிரிவினை அமைந்தபோது, பாலியல் மண உறவுகள் புராதனச் சமூகத்தின் ஒழுங்கமைப்பை நிர்ணயித்த காலங்களில் அவற்றின் மொழியிலேயே ஆணாதிக்கமும் உருவான நிகழ்வை ஏங்கெல்சின் இந்நூலிலிருந்து வருவிக்க முடியும். வேலைப் பிரிவினை களுக்கும் மண உறவு முறைகளுக்கும் பின்னால் ஆணாதிக்கச் சமூகத்தின் தனிச்சொத்துரிமை நலன்கள் அமைந்திருந்ததையும் ஏங்கெல்ஸ் எழுதுகிறார். எனவே ஏங்கெல்சின் இந்நூலை சோசலிசப் பெண்ணியத்தின் முதல் நூலாகக் கொள்ளுவோர்கள் உண்டு. ஏங்கெல்ஸ் குடும்ப அமைப்பின் பல்வேறு வரலாற்று வடிவங்களைப் பெண்-நலன்களின் நோக்கிலிருந்து அணுகியுள்ளார் என்ற கருத்து நிறுவப்பட்டுள்ளது. புராதனக் குடும்பம், நில உடமைக் குடும்பம், பூர்ஷ்வா குடும்பம், உழைப்பாளிக் குடும்பம் எனக் குடும்ப அமைப்புகளை வித்தியாசப் படுத்திப் பார்க்கும் முறையியலை ஏங்கெல்சின் நூல் வழங்குகிறது. உடமைச் சமுதாயம் பெண்ணின் வரலாற்றுத் தோல்வியை நிர்ணயித்தது, பாலியல் உறவுகள் மற்றொரு சமூக ஏற்றத்தாழ்வின் காரணியாக மாறியது என்று ஏங்கெல்ஸ் எழுதுகிறார். இந்திய, தமிழ்ச் சூழல்களில் கம்யூனிஸ்டுகள், கம்யூனிஸ்ட் அறிவாளிகள் குடும்பங்களை அவற்றின் வர்க்கப் பண்புகளைக் கொண்டு பகுத்து ஆய்வு செய்துள்ளார்களா? முதலாளியக் குடும்பம் என்பது இன்னும் கூடுதலாகச் சிக்கல் நிறைந்த ஓர் அமைப்பு. தனி உடமையால், பண உறவுகளால் குடும்பம் சீரழிக்கப்படுவது முதலாளியச் சூழல்களில் உச்சக்கட்டத்தை எட்டுகிறது.

ஏங்கெல்ஸ் இந்நூலின் முதற் பதிப்புக்கு 1884ல் எழுதிய முன்னுரையையும் நான்காம் பதிப்புக்கு 1891 ல் எழுதிய முன்னுரையையும் மொழிபெயர்ப்பாளர்கள் தமிழ்ப் பதிப்போடு சேர்த்துத் தந்துள்ளார்கள். இம் முன்னுரைகள் சில குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளைக் கொண்டுள்ளன. மோர்கன் பற்றிய மதிப்பீடு முதன்மை யானது. "நாற்பது ஆண்டுகளுக்கு முன் மார்க்ஸ் கண்டு பிடித்திருந்த வரலாற்றுப் பொருள்முதல்வாதக் கருத் தோட்டத்தைத்தான் மார்கன் தன்னுடைய வழியில் அமெரிக்காவில் மறுபடியும் கண்டுபிடித்தார்." இது மோர்கனின் நூல் குறித்து ஏங்கெல்ஸ் வழக்கும் அற்புத மான, பெருந்தன்மையான மதிப்பீடு. இதே கருத்தை மார்க்சும் கொண்டிருந்தார் என்பதையும் ஏங்கெல்ஸ் உறுதிப்படுத்துகிறார். மோர்கன் பற்றிய மதிப்பீட்டை மார்க்ஸ் "மக்கள் முன்பாக வைத்து, அதன் மூலம் அவற்றின் முக்கியத்துவம் முழுவதையும் தெளிவாக்க வேண்டும் என்று திட்டமிட்டிருந்தார்." மார்க்ஸ், ஏங்கெல்ஸ் ஆகியோரின் அறிவுப்புல நேர்மைக்கு இவ்வரிகளெல்லாம் சான்றாக நிற்கின்றன. இன்னும் கூடுதலாக, மோர்கன் பண்டைய உலகின் கூறுகளைக் கொண்டு, தற்கால முதலாளிய சமூகத்தின் அடிப்படை யான பண்ட உற்பத்தி முறையை விமர்சனம் செய் துள்ளார் என்பதை எடுத்துக்காட்டுகிறார். "மட்டுமின்றி, கார்ல் மார்க்ஸ் உபயோகப்படுத்தியிருக்கக் கூடிய சொற்களில் சமூகத்தின் எதிர்கால மாற்றத்தைப் பற்றிப் பேசியுள்ளார்." நேரில் சந்தித்துக் கொள்ளாத ஓர் அறிஞரோடு, அவரது கண்டுபிடிப்புகளுக்காகவும் கருத்துக்களுக்காகவும் மார்க்சும் ஏங்கெல்சும் தோழமை பாராட்டும் பண்பை இங்கு காணுகிறோம். ●

# வாசகர்களின் வேண்டுகோளை ஏற்று
# முன் வெளியீட்டுத் திட்டப் பதிவு
# ஜனவரி 31-1-2018 வரை நீட்டிக்கப்படுகிறது

**1/8 டெமி அளவில் சுமார் 7600 பக்கங்களுக்குமேல் அழகிய வடிவமைப்பில், தரமான தாளில்**



## விலை

~~₹ 5000/-~~

முன் வெளியீட்டுத் திட்டம்

## ₹ 2500/-

# மார்க்ஸ்-எங்கெல்ஸ்
## தேர்வு நூல்கள் மற்றும் வாழ்க்கை வரலாறுகள்
## 20 தொகுதிகளாக...

**நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின்**
**அனைத்துக் கிளைகளிலும் முன் பதிவு செய்துகொள்ள வேண்டுகிறோம்**

NCBH

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098.

☎ 044 - 26251968, 26258410, 26241288

www.ncbhpublisher.in | email: info@ncbh.in

### தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்
### நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
### இணைந்து நடத்திய

# விருது வழங்கும் விழா - 2017

*29 ஆண்டுகளாகத் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றமும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸும் இணைந்து சிறந்த படைப்புக்களைத் தேர்ந்தெடுத்துப் படைப்பாளிகளுக்கு விருது வழங்கி வருகின்றன.*

*இவ்வாண்டு விருது வழங்கும் விழா 28-10-2017 அன்று சென்னை முகப்பேரிலுள்ள வேலம்மாள் மேனிலைப் பள்ளியில் சிறப்பாக நடைபெற்றது.*

*தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலத் தலைவர் திரு. சி. சொக்கலிங்கம் விழாவுக்குத் தலைமையேற்று எழுத்துரிமை குறித்து விரிவாகப் பேசினார். என்.சி.பி.எச். நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சண்முகம் சரவணன், திரு. ஜீவா மணிக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். த.க.இ.பெ. மாநிலக்குழு உறுப்பினர் திரு. மோ. ஜேம்ஸ் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தோழர் இரா. நல்லகண்ணு, ஓவியர் டிராட்ஸ்கி மருது இருவரும் படைப்பாளிகளுக்கு விருதுகள் வழங்கிப் பாராட்டிப் பேசினர். த.க.இ.பெ. பொதுச் செயலாளர் முனைவர் இரா. காமராசு, என்.சி.பி.எச். பொது மேலாளர் திரு. தி. ரெத்தினசபாபதி, த.க.இ.பெ. பொருளாளர் திரு. ப.பா. ரமணி, மாநிலச் செயலாளர் திருமதி தி. பரமேஸ்வரி, மாநிலச் செயலாளர் திரு. தி.சு. நடராசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். த.க.இ.பெ. துணைப் பொதுச் செயலாளர் பேராசிரியர் எச். ஹாமீம் முஸ்தபா, மாநிலச் செயலாளர்கள் திரு. கலைமணிமுடி, ஓவியர் பெ. அன்பு, திரு. எல்லை சிவகுமார் ஆகியோர் விழாவினை ஒருங்கிணைத்தனர்.*

*இவ்வாண்டுக்குரிய வாழ்நாள் சாதனையாளர்: சிற்பி சக்தி விருது கலைமாமணி பொ. கைலாசமூர்த்திக்கு வழங்கப்பட்டது.*

*ஆய்வு நூலுக்கான பேராசிரியர் நா. வானமாமலை நினைவு விருது 'பழஞ்சீனக் கவிதைகளில் சங்கக் கவிதைகளின் செல்வாக்கு' என்ற நூலுக்காக முனைவர் ந. அறிவரசனுக்கும், முதுமுனைவர்*



வ.ஐ. சுப்பிரமணியன் நினைவு விருது 'முதுவர் வாழ்வியல்' என்ற நூலுக்காக முனைவர் க. முத்துஇலக்குமி அவர்களுக்கும் வழங்கப்பட்டன.

'எட்வர்ட் செய்த்தும் கீழைத் தேய இயலும்' என்ற கட்டுரை நூலுக்காக என்.சி.பி.எச். இராதாகிருஷ்ணமூர்த்தி நினைவு விருதினை எச். பீர்முகம்மது அவர்களும், 'மறுவாசிப்பில் செவ்வியல் இலக்கியப் படைப்புகள்' என்ற நூலுக்காக மேலவாசல் கோ. இராமசாமி நினைவு விருதினை முனைவர் ந. முருகேசபாண்டியன் அவர்களும் பெற்றனர்.

கவிதை நூலுக்கான பின்னையூர் மா. சண்முகம் நினைவு விருது 'வால்' நூலுக்காக கவிஞர் சபரிநாதன் அவர்களும் 'தம்புராட்டியின் பரியங்கம்' நூலுக்காக கே.சி.எஸ். நினைவு விருதினை கவிஞர் நட. சிவகுமார் அவர்களும் பெற்றுக்கொண்டனர்.

சிறுகதை நூலுக்கான எழுத்தாளர் தனுஷ்கோடி ராமசாமி நினைவு விருதினை அ. கரீம் அவர்கள் 'தாழிடப்பட்ட கதவுகள்' நூலுக்காகவும், திருமதி சுந்தரி சாந்திலால் நினைவு விருதினை செம்பை முருகானந்தம் அவர்கள் 'போன்சாய் நிழல்கள்' நூலுக்காகவும் பெற்றுக் கொண்டனர்.

சிறுவர் நூலுக்கான தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவு விருது 'ஒல்லி மல்லி குண்டு கில்லி' நூலுக்காக திரு. மு. முருகேஷ் அவர்களுக்கும், எம். கௌதம் நினைவு 'எப்படி? எப்படி?' நூலுக்காக திரு. ஆதி வள்ளியப்பன் அவர்களுக்கும் வழங்கப்பட்டன.

திரு. இரா. முருகவேள் தமது 'முகிலினி' நாவலுக்காக அழகியநாயகி அம்மாள் நினைவு விருதினையும், டாக்டர் மு. ராஜேந்திரன், இ.ஆ.ப. தமது '1801' நாவலுக்காக தென்னமநாடு - இராமசாமி மாரியம்மாள் நினைவு விருதினையும் பெற்றுக்கொண்டனர்.

மொழிபெயர்ப்புக்கான தொ.மு.சி.ரகுநாதன் நினைவு விருது 'இறுதியாத்திரை' நூலுக்காக கே.வி. ஷைலஜா அவர்களுக்கும், அறந்தை நாராயணன் நினைவு விருது 'இருள்யுகம்' நூலுக்காக ஆ. சுமதீந்திரா அவர்களுக்கும் வழங்கப்பட்டன.

குறும்படங்களுக்கான பா. முத்துசாமி நினைவு விருது 'வலி' என்ற படத்திற்காக வம்சி அவர்களும், பவானி பி.என்.பாலு - பாக்கியலட்சுமி நினைவு விருது 'கூர்ப்பி' என்ற படத்திற்காக மு. வெங்கடேசன் அவர்களும் பெற்றுக்கொண்டனர்.

சென்னை மண்டல சாதனையாளர்களுக்கான மக்கள் பாடகர் விருது தோழர் சங்கை வேலன், தோழர் பாவலர் கீர்த்தி, தோழர் செல்வ ஜான்சன் ஆகியோருக்கு வழங்கப்பட்டன. தோழர் செ.து. சஞ்சீவி அவர்கள் கவிஞர் தமிழ்ஒளி தாரகம் விருதினைப் பெற்றுக்கொண்டார்.

திரு. மேன்மை மணி அவர்கள் நன்றி கூறினார்.



கட்டுரை



# இரண்டு தலைமுறைகள்: நினைவும் நனவும்

இந்திரா மோகன்

இந்தியாவின் தென்கோடி. மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரம். மூங்கில், தேக்கு, கோங்கு போன்ற மரங்களைக் கொண்ட அடர்த்தியான மலங்காடு. புலி, கரடி, யானை, மிளா, மான், தனிச் சிறப்புடைய சிங்கவால் குரங்கு, காட்டெருமை, காட்டுப் பன்றிகள், விருவு, கிளி, குயில், கருங்காகம், மலை அணில், மலைப் பாம்பு, நாகப் பாம்பு, கட்டுவிரியன், உடும்பு என நிற்பன, நடப்பன, பறப்பன, ஊர்வன எனப் பல்வேறு பட்ட உயிரினங்களுடன் ஏராளமானத் தாவர வகைகளையும் தன்னகத்தே கொண்ட நிலம். முண்டந்துரைப் புலிகள் காப்பகமாகத் திகழும் ஒரு பகுதி. அங்கு அம் மலையில் கருமேகங்கள் திரண்டு, மழையாகப் பொழிந்து, உருவாக்கியதொரு ஆறு ஒன்று உண்டு. அதன் பெயர் பச்சையாறு.

ஆற்றின் இரு மருங்கிலும் காட்டுப் பத்து, வாணியம் பத்து, கோவர் நெடுங்கன், கோனார் பள்ளி, சத்திரங்காடு, பரிசுகொடுத்தான் பத்து, கால்பரவு, என்னும் பெயர்களைக் கொண்ட நெற்பயிர் வயல்கள் பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்று, காற்றில் அலை அலையாய் வீசும் பசுங்கடல் கண்ணுக்குச் சிறப்பு விருந்தளிக்கும். தென்னந்தோப்புகள், மாந்தோப்புகள், வாழைத் தோட்டங்கள் என பறவைகளின் வசிப்பிடங் களுடன், நெட்டேரிக்கால் அணை, தலை அணை, தேங்காய் உருளி, எலவடி அணை, கருங்கல் கசம், மொட்டைக் கலங்கு என்னும் நீர்த் தேக்கங்கள், வடக்குக்கால், காலாங்கரை, மணல் அடைப்புக் கால் வாய், முத்து ஓடை என்னும் உச்சி வெயிலிலும் குளிர்ந்த நீரைச் சுமந்து செல்லும் சிறு கால்வாய்களைக் கொண்ட பசுமையான கிராமம். சிதம்பரபுரம் என்பது அதன் பெயர். திருநெல்வேலி மாவட்டம், நான்குனேரி தாலுகாவைச் சேர்ந்த சிறு கிராமம். அந்நாளில் மோட்டார் வாகனங்கள் அதிகம் இல்லாமையால் மாசற்ற தூய காற்றையும் நீரையும் கொண்ட பசுமையான கிராமமாக விளங்கியது. முப்பிடாதி அம்மன், முத்தாரம்மன், இசக்கி அம்மன், சாஸ்த்தா, ஊர்க்காட்டான், பட்ராயன், அதலி பாறையம்மன், நிழல் தாங்கல் என்று அழைக்கப்படும் இரு நாராயண சாமி கோவில்கள், ஒரு கத்தோலிக்க வேதக் கோவில், சி.எஸ்.ஐ வேதக்கோவில் என சிறு கிராமமே என்ற போதிலும் ஏராளமான கோவில்களைக் கொண்டிருந்தது. அதனால் திருவிழாக்கள், கோவில் கொடைவிழாக்கள் என ஆண்டு முழுமையும் நடைபெற்றன. செம்மண் பூமியையும் சிறந்த நீராதாரத்தையும் கொண்ட பூமியான படியால் விவசாயம் முக்கியத் தொழிலாய் அமைந் திருந்தது. விவசாயம் சார்ந்த இதரத் தொழில்களான கலப்பை செய்யும் ஆசாரிகள், கொளு, கதிர் அரிவாள் இத்தியாதிகள் செய்யும் கொல்லாசாரிகள் அதற்கான பட்டறைகள், களம் கூட்டும் விளக்குமாறு, பதர் நீக்கும் முறம் செய்யும் குறவர் இன மக்கள், ஏராளமான பனைமரங்களையும் கொண்டிருந்ததால் பனை சார்ந்த கருப்புக் கட்டி செய்வோர், ஓலை பெட்டி, நார்ப்பெட்டி செய்வோர் என பலதரப்பட்ட மக்களைக் கொண்ட பகுதியாக இருப்பதால் சிறுகிராமமா? பெருங்கிராமமா? எனப் பிரித்து அறிய முடியாத கிராமத்தில் பிறந்து வளர்ந்து சுற்றித்திரிந்த பதினாறு வயதே நிரம்பிய பருவ மங்கையவள். நல்ல மஞ்சள் நிறத்தழகி. இராணுவ வீரரின் கைத்தலம் பற்றியதால் இத்தென்கோடியி லிருந்து இந்தியாவின் வடமேற்கு எல்லைப் பகுதிக்கு, மறு செழுமைப் பார்க்கப் புறப்பட்டாள்.


நீண்ட ரயில் பயணம். முதல் இரு நாட்கள் மகிழ்ச்சியளிப்பதாய் இருந்தன. காடுகள், மலைகள், ஆறுகள், ரயில் நிலைய அழுக்குகள், ஏழை பாழைகள், இளையோர் முதியோர், ஆண்கள் பெண்கள், உடல் ஊனமுற்றோர் என பலதரப்பட்டோரை இங்கும் அங்குமாகக் காண நேரிட்டது அவளுக்கு. சில சமயம் ஆச்சரியம், சில சமயம் வெறுப்பு, கோபம், அசூசை எனப் பலவித உணர்ச்சிகளோடு இருந்தாள். எப்போதும் துறுதுறுவென்று ஓடிக்கொண்டே இருந்த அவளுக்கு மூன்றாம் நாள் அயர்ச்சியாய் இருந்தது. மெதுவாக எதிர்ப்புறம் அமர்ந்திருந்த பெரியவரிடம், "தாத்தா உங்களுக்கு எந்த ஊர்?" என்று தமிழில் கேட்டு வைத்தாள். "கியா பேட்டி" என்றார் கரடுமுரடான குரலில். அவ்வளவுதான் பயந்து விட்டாள். அவரின் குரலில் அவள் பயப்படவில்லை. அதே சமயம், "பேசாமல் இரு" எனத் தன் பெரிய விழிகளை உருட்டிக் உரத்தக் குரலில் கட்டளையிட்ட கணவரின் சத்தத்தில் தான் பயந்தாள். முதன் முதலாக அவள் கேட்ட அந்நிய மொழி என்ன ஏது எனப் புரியாமல் அச்சம் கொள்ளச் செய்தது.

இந்தியாவின் தலைநகரில் கால் பதித்தாள். பயம் கலந்த மகிழ்ச்சி. என்றோ படித்தது நினைவில் வந்தது. ஆனால் ஊர் பெயர் ஞாபகத்தில் இல்லை. எதையும் தெரிந்து கொள்ளும் ஆர்வம் மிக்கவள். அதனால் டில்லி என்பதனைத் தன் கணவரைக் கேட்டுத் தெரிந்து கொண்டாள். மீண்டும் ஓரிரவு ரயில் பயணத்திற்குப் பின் அமிர்தஸரஸ் நகர் வந்து சேர்ந்தாள். வரும் வழி எங்கும் தான் கண்ட பச்சை வயல்வெளிகள் அவளுக்கு மகிழ்ச்சியளிப்பதாய் இருந்தது. ஏனென்றால் தான் மீண்டும் ஒரு உழவுத் தொழிலை மையமாகக் கொண்ட நிலத்திற்கு வந்து விட்டதை உணர்ந்து கொண்டாள். அது அவளை அந்நியப்படுத்தாதிருந்தது. மார்கழி மாதக் குளிரை ரசித்த அவளுக்குப் பஞ்சாபின் நவம்பர் மாதக் குளிர் விரும்பத்தக்கதாக இருந்தது. கிராமத்திலிருந்து கிளம்பும் போது வெறும் ஊறுகாயும், தமிழகத்து மசாலாப் பொருட்களை மாத்திரமா கொண்டு வந்திருந்தாள்? கோலப் பொடியையும் அல்லவா எடுத்து வந்திருந்தாள். அதிகாலை எழுந்து குளித்து வாசலில் கோலமிடுவது, தமிழ் காலண்டர்படி மார்கழியில் கோலத்தின் மீது அழகழகாகப் பூக்களை வைத்து அலங்கரிப்பது, விளக்கேற்றுவது, பாந்தமாக தான் புடவைக் கட்டிக் கொள்வது எனத் தமிழ் பழக்க வழக்கத்தை விடாமல் அவள் மேற்கொண்டமை அவளது தனிச் சிறப்பு. அவளின் கோலமிடும் திறனை அக்கம் பக்கத்தினர் சிலாகித்தமை அவளை மகிழும்படிச் செய்தது. புடவையில் கண்ட அப் பெண்கள் அவளை தேவதையாகவே கொண்டாடினர். மேம்சாப் என்று தன் கணவரின் துணைநிலை அதிகாரிகள், அவர்களின் வீட்டுப் பெண்கள் தன்னை அழைக்கின்ற பட்சத்தில் தனக்கு கிரீடம் வைக்கப்பட்டதாகவே நினைத்து ஆனந்தம் கொள்வாள்.

கடல்களே அற்ற பூமி என்பதை அறிந்த போது ஆச்சரியப்பட்டாள். மேடுபள்ளங்கள் அற்ற சம பூமி என அறிந்து கொண்டாள். பெருங்கடலாய் விரிந்திருக்கும் பேராறுகள், பெருங்கால்வாய்கள், வியக்கச் செய்வதாய் இருந்தன. இவ்வாறுகளின் வண்டல் மண், வற்றாது பாயும் நீர், நிலத்தடி நீர், மண் வளம், தாது வளம் போன்றவற்றின் சிறப்புதான் வயல்வெளிகளின் செழுமைக்குக் காரணம் என்பதனை மக்களைக் கேட்டு அறிந்து கொண்டாள். எதனையும் அறிந்து கொள்ளும் ஆர்வம் காரணமாய் பஞ்சாபி மொழியை சீக்கிரமே பிறரிடம் பேசிப் பழகியே கற்றறிந்து கொண்டவள். அவள் பிறந்து வளர்ந்த ஊரில் பசுமாடுகளை மாத்திரமே அறிந்திருந்தவள். இப் புதிய ஊரில் எருமைகள் மாத்திரமே உண்டு என்பது விந்தையாகவே இருந்தது. பால், தயிர், வெண்ணெய், பாலாடை என பால் பதார்த்தங் களை விரும்புபவளாய் இருந்தது இப்பொருட்களின் சரளமானப் பயன்பாட்டில் ஈடுபாடு மிக்கவளாக்கிற்று.

அது மட்டுமின்றி இம் மக்களின் திருமண வைபவங்கள் ஈர்க்கச் செய்வதாய் இருந்தது. குறிப்பாக நள்ளிரவில், மாப்பிள்ளையின் அம்மா, மற்றும் அவர்களின் கூடப் பிறந்த சகோதரிகள், இன்னும் மிக நெருங்கிய உறவுக்காரர்கள் என பத்துப் பதினைந்து பெண்கள் சேர்ந்து, நல்ல பலவண்ண அலங்கார ஆடை அணிகலன்களுடன், அலங்கரிக்கப்பட்டு, சுற்றிலும் அகல் விளக்குகள் ஏற்றப்பட்ட மட்குடங்களைத் தலையில் சுமந்து, தோல் கருவி, இசை முழங்க ஆடிப்பாடி ஊர்வலமாகச் சென்று தங்கள் வீட்டுத் திருமண விழாவில் கலந்து கொள்ளுமாறு அழைக்கும் வைபவம், பைசாகி என்னும் அறுவடைத் திருவிழா, லோரி, தீஜ், ஹோலி போன்ற விழாக்களைக் கண்டும் கொண்டாடியும் மகிழ்ந்தாள். தான் இருக்கும் ஊரின் மொழியறிவை சீக்கிரமாகக் கற்றுக் கொண்டதால் அந்நிய ஊரில் இருப்பதாகவே உணர்ந்தாளில்லை. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பதனை மெய்ப்படச் செய்தாள்.

குளிர்காலத்தினை அடுத்துக் கோடையும் வருமே. இந்நகரில் கோடையும் உக்கிரம் மிக்கதாய்த் தகித்தது. வீட்டிற்குள் அறைகளுக்குள் அரை நாளுக்குத் தண்ணீரை நிரப்பி வைத்து வெப்பத்தைத் தணிக்கும் முறையைக் கண்டாள். வெளியே செல்லும் போது துணியை நனைத்து தலை முகம் முழுவதையும் சுற்றிக்கொள்வது, வீட்டு வராந்தாக்களில் வெட்டி வேர்தட்டிகள் அமைத்து மாலையில் தண்ணீர் தெளித்து இயற்கை முறையில் குளிரூட்டுவது போன்ற பல கோடைக்கால வாழும் முறைகளையும் அறிந்து கொண்டாள் அவள்.



பசுமையான வயல் வெளிகளில் மனதைப் பறி கொடுத்தவளைக் கொள்ளை கொண்ட இன்னுமொரு விடயம் உண்டென்றால் அது பொற்கோவில். இரவில் அலங்கார மின் விளக்கொளியில் புனிதநீர் தேக்கத்தில் தகதகத்து பிரதிபலிக்கும் கோபுரக் கலசங்கள், கோவில் கூரையின், சுற்றுச் சுவரின் வண்ண ஓவியங்கள், அங்கு இலங்கும் தூய்மை, மக்களின் சேவையுள்ளம், செழுமை, அமிர்தமாய் விளங்கும் குரு பிரசாதம், சமபந்தி உணவு வழங்கல் முறை, இசைக்கப்படும் பாடல்கள் என அனைத்தும் என்றும் அவள் நினைவலையின் நீங்கா ஓவியங்களாயிற்று.

கடுங்குளிரைத் தாங்குவதற்கான கம்பளி ஆடைகள், வீட்டு அமைப்புகள், வீட்டு வாசல்கள், சன்னல்கள் என எல்லாவற்றிலும் வலைக் கதவு மரக் கதவு என இரட்டைக் கதவுகள் கொண்ட கட்டிடங்கள், பூஞ்செடிகளைக் கொண்ட பங்களாக்கள், தோட்டங்கள் எனப் பலவற்றையும் மனத்திரையில் ஏற்றிக்கொண்டவள். சலிப்பற்ற ஏராளமான மகிழ்ச்சியானத் தருணங்களைச் சந்தித்தவள். வாழ்க்கைச் சக்கரம் சுழன்று மூன்று பிள்ளைகளுடன் தாயகம் திரும்ப வைத்தது. ஆம் பிள்ளைகளை ஓரிடத்தில் இருந்து படிக்க வைக்க வேண்டிய பொறுப்புக்குள்ளானாள். இராணுவ அதிகாரியின் அடிக்கடியான வேலை மாற்றம் பிள்ளைகளின் படிப்பிற்கு இடைஞ்சலாயிற்றே என்ற காரணத்தினால்.

அவளது இரண்டாந்தலைமுறையும் அவள் பாதையிலேயே தன் ஐம்பதாம் வயதில் பயணம் மேற்கொண்டாள், ஆராய்ச்சியாளரின் மனைவியாகத் தம் கணவரோடு. தன் தாயின் வார்த்தைகளை அதே மாதிரியான நீண்ட ரயில் பயணத்தின் போது அசை போட்டவாறு. திடீரென்று பெரியதொரு ஆற்றினைக் கடந்த போது, 'பியாஸ்' என்ற பெயர் பலகையைக் கண்ட போது பழைய நினைவொன்று வந்து போனது. ஆம் ஒரு நாள் படித்துக் கொண்டிருந்த போது, இந்தியாவின் நதிகளென்ற தலைப்பில் பல ஆறுகளின் பெயர்களைப் படித்துவிட்டு. பஞ்சாபின் நதிகள் பற்றி படிக்க நேரிட்டது. "ஜீலம், ஜீனாப், ம்... ம்..." என்று படித்துக்கொண்டு சொன்னதையே ஓட்டை ரெக்காடாய் வாசித்துக் கொண்டிருந்தாள். அங்கு வந்த முதல் தலைமுறைக்காரி, அவளது அம்மா "ரவி, சட்லெஜ் என்று கூறி. பாஞ் என்றால் ஐந்து என்றும், ஆப் என்றால் ஆறுகள் என்றும் இந்த ஐந்து ஆறுகளும் பாய்கின்ற செழிப்பான மாநிலமே பஞ்சாப்" என்றும் தன் சிறு பெண்ணிற்கு விளக்கமளித்தாள்.

அதன் பின் பொற்கோவிலுக்குச் செல்கின்ற போதெல்லாம் தன் அம்மையின் சொற்கள் மீண்டும் மீண்டும் வந்து போயின. பெரிய செழிப்பான கோவில் என்பது மாத்திரமே நம் கோவிலுக்கும் பொற் கோவிலுக்கும் உள்ள வேறுபாடு என்றும், வழிபாட்டு முறைகள் பெரும்பாலும் ஒன்றே என்ற அவளது வாதம் சரியானதே என்று பின்னவளை எண்ண வைத்தது. இவர்களின் ஊரில் நாராயண சாமி கோவில் உள்ளது. நிழல் தாங்கல் என்று அழைக்கப்படும். அதாவது இங்கு வரும் பக்தர்களின் துன்பெனும் உக்கிரத்தை நிழலாகத் தாங்குமிடமாகக் கொள்ளப்படும். கோவில் கர்ப்பக் கிரகத்தில் விக்ரகம் கிடையா. ஐயா நாராயணரின் செய்திகள் பாடல்களாக எழுதப்பட்ட ஏடு ஒன்று நடுப் பகுதியில் இருக்கும் மேடையில் வைக்கப்பட்டிருக்கும். தினப்படி விளக்கு ஏற்றி வைத்து முரசங்கள் ஒலிக்க ஒலிபெருக்கியில் ஏடு வாசிப்பு நடைபெறும். பால் அன்னம், உம்பாஞ் சோறு என அனைவருக்கும் விசேட நாட்களில் வயிறார உணவு வழங்கப்படும். அது சமயம் ஆண்கள் அனைவரும் தலையில் முண்டாசுக் கட்டிக் கொள்ள வேண்டும். கிட்டத்தட்ட இதே வழிமுறை தான் பொற்கோவிலிலும் பின்பற்றப்படுகிறது என்பது வியக்கத் தக்கதாய் இருந்தது.

அம்மையின் ஒவ்வொரு வார்த்தைகளும் செயல் களும் அவளுக்கு நினைவில் கொள்ளத்தக்கதாய் இருந்தன. குறிப்பாகக் குளிர்காலங்களில் வெந்நீரில் பாத்திரங்கழுவுவது, வெந்நீரில் நல்ல சுவை இருக்கும் என்று கூறி இறுதிவரை வெந்நீர் குடிப்பது, மப்ளெர், ஸ்வெற்றர், சால் இத்தியாதிகளைச் சுற்றிக் கொண்டு கோமாளித்தனமாகக் குளிரில் அலைவதின் சுகம், சுட்ட நறுக்கிய சீனிக்கிழங்கு, மக்காச்சோளத்தை அவித்து எலுமிச்சை சாற்றில் நனைத்து உப்பில் தேய்த்து தின்னும் ருசி, மக்கி ரொட்டியும் சாகு என்ற கடுகுக் கீரை மசியலின் தனிச்சுவை, பைங்கன் பர்த்தா என்று அழைக்கப்படும் சுட்டக் கத்தரிக்காய் கறி, ஆலு பரோட்டா, கீர் போன்றவைகளுடன் கித்தா என்ற பெண்களின் கையையும் காலையும் தட்டித் தட்டி ஆடும் சீரான நடனம், ஆண்களின் பங்கரா வீர நடனம், கட்கா வாள் சண்டைக் காட்சிகளுடனான நகர் வலம் போன்ற அனைத்தையும் அம்மையின் கண்ணோட்டத்திலேயே சிற்சில மாற்றங்களுடன் காண நேரிட்டது இரண்டாம் தலைமுறைக்கு.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மகளுக்கு அவளது அம்மை உடனிருந்து சொல்லுவது போலவே தெரிந்தது. எது நினைவு, எது நனவு? எப்படி இப்படி ஓர் அதிசயம் நிகழ்ந்தது! இரண்டு தலைமுறையைச் சேர்ந்த ஒரே குடும்பத்துப் பெண்கள் இந்த ஊரில் வந்து கிட்டத் தட்ட ஒரே மாதிரியாக நல்லதும் கெட்டதும் அனுபவித்திருக்கிறார்களே! ●




# கருணாமிர்த சாகரம் நூற்றாண்டு : ஒரு சிறுகுறிப்பு

வீ.அரசு

"சிறுவர்கள் தட்டி விளையாடும் பலகைக் கதவின் ஓசையிலிருந்து, தம்பட்டம் பேரிகை மத்தளம், மிருதங்கம் தபிலா உடுக்கை கைத்தாளம் சேமக்கலம் சல்லரிமணி சலங்கை முதலிய கொட்டும் கருவிகளும், ஊதி விளையாடிய இலைக்குழல்களிலிருந்து, தாரை ஒத்து நாகசுரம் முகவீணை மகடி புல்லாங்குழல் கொம்பு சங்கு முதலிய துளைக் கருவிகளும், பல்லினால் கடித்து கையினால் பிடித்து இழுத்து ஒரு கையினால் மீட்டிப் பிறந்த இனிய நாதத்திலிருந்து, துந்தினாமா கின்னரி தம்புரு அகப்பைக் கின்னரி சுந்தரிவீணை ருத்ரவீணை பேரியாழ் மகரயாழ் முதலிய மீட்டும் தந்தி வாத்தியங்களும் சிறுவர் விளையாட்டி லிருந்தே தோன்றி, படிப்படியாய் விருத்தியாயின வென்று நாம் அறிகிறோம்". (கருணாமிர்தசாகரம். முதல் புத்தகம். முதல் பாகம். 2009:119)

தமிழிசை வரலாற்றில் ஆபிரகாம் பண்டிதர் (1859-1919) உருவாக்கிய 'கருணாமிர்தசாகரமும்', விபுலானந்தர் உருவாக்கிய 'யாழ்நூலும்' மயில்கற்கள். கருணாமிர்த சாகரம் 1917இல் வெளிவந்தது. நூல் வெளிவந்த நூற்றாண்டு இது. அந்த நூலை, ஆபிரகாம் பண்டிதர் உருவாக்கிய வரலாற்றை மீள்நினைவுக்குக் கொண்டுவர வேண்டும். அந்த நூலில் பண்டிதர் பேசியுள்ள செய்திகளை நூற்றாண்டு கடந்த வரலாற்றோடு இணைத்துப் பேச வேண்டும். அந்த நூலின் வரலாற்று முக்கியத் துவத்தை பின்வருமாறு தொகுத்துக் கொள்ள இயலும்.

- பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் திராவிட மொழிக்குடும்பம் அடையாளப்படுத்தப்பட்டது. இந்த நூற்றாண்டில்தான் திருக்குறளும் (1812), தொல்காப்பியமும் (1847), சங்க இலக்கியங்களான கலித்தொகை (1887), பத்துப்பாட்டு (1889) ஆகியவையும் அச்சு வடிவம் பெற்றன. சிலப்பதிகாரமும் (1892) அச்சானது. இதன் மூலம் தமிழ் மொழியின் செவ்வியல் கூறுகள் உலக அளவில் அறியும் சூழல் உருவானது. இப்பின்புலத்தில் தமிழிசை குறித்த தமது ஆய்வை மேற்கொண்டு வந்த பண்டிதர், தமிழர்கள், தமிழ்மொழி, தமிழ் நிலம் ஆகியவை குறித்த ஆய்வையும் மேற்கொண்டார். கருணாமிர்த சாகரம் முதல் பகுதியில் மேற்குறித்த இனம், மொழி, நிலம் ஆகியவற்றின் தொன்மை குறித்த ஆய்வை மேற்கொண்டுள்ளார். இசை குறித்த ஆய்விற்கு அடிப்படையாக மேற்குறித்த ஆய்வை நிகழ்த்தியுள்ளார்.

- கருணாமிர்தசாகரத்தின் இரண்டாம் பகுதியில் புழக்கத்தில் இருக்கும் கர்நாடக இசைக்கும் தமிழிசைக்கும் உள்ள உறவு குறித்த ஆய்வை நிகழ்த்தியுள்ளார். சுமார் இரண்டாயிரத்தைநூறு ஆண்டுகளில் தமிழ்க்கலை வரலாற்றில் இசைக் கலையின் பல்வேறு பரிமாணங்களை விரிவாகப் பதிவு செய்கிறார். தமிழுக்கும் சமஸ்கிருதத்திற்கும் உள்ள தொடர்புகளை விரிவாகப் பேசுகிறார். இந்தப் பின்புலத்தில் கருநாடக இசை என்று கருதப் படும் மரபு என்பது தமிழிசை மரபுதான் என்ற கருத்தை முன்வைக்கிறார். இதற்கான விரிவான உரையாடலாகவே இரண்டாம் பகுதி அமைந்துள்ளது.

- கர்நாடக இசை மரபு என்பது தமிழிசை மரபுதான் என்ற கருதுகோளை நிலைபெறு கொள்ளச் செய்யும் பணிகளில் ஈடுபடுகிறார். பல்வேறு இசை மாநாடுகளை நடத்துகிறார். இந்தியா முழுதும் இருக்கும் இசை அறிஞர்களைப் பங்கேற்க செய்து, அவர்களது கருத்துக்களைப் பதிவு செய்கிறார். தஞ்சையில் நிலையான மன்றம் ஒன்றையும் உருவாக்குகிறார். தனது ஆய்வு வழி கண்டறிந்தவற்றை நடைமுறைப் படுத்தும் பணியை மேற்கொள்கிறார். இவ்வகையான செயல்கள் குறித்த விரிவான பதிவாக மூன்றாம் பகுதி அமைந்துள்ளது.

- இறுதிப் பகுதியில் கர்நாடக இசை மரபில் கூறப்படும் 22 அலகுகள் என்பதை ஏற்றுக் கொள்ளாது, 24 அலகுகள் என்று நிறுவுகிறார். இதனை சிலப்பதிகாரத்தில் காணப்படும் இசை நுணுக்கங்களை அடிப்படையாகக் கொண்டு பேசுகிறார். இதன் மூலம் யாழிசை மரபு குறித்த ஆய்வையும் முன்னெடுக்கிறார். பண்டைத் தமிழ் மரபின் இசை வரலாற்றை இவ்வகையில் புதிதாகக் கட்டமைக்கிறார்.

❑ ❑ ❑

இசையின் பழைமையை உறுதிப்படுத்துவதற்காக, உலகத்தோற்றம் தொடர்பான பல்வேறு தொன்மைக் கதைகளை பண்டிதர் அறிமுகப்படுத்துகிறார். விவிலியத்தில் கூறப்படும் இசைக்கருவிகள் பற்றிய விவரங்களைத் தருகிறார். மோசே முனிவர், தாவீது ராஜா, சாலமோன் ராஜா, பாபிலோன் அரண்மனையில் வாசிக்கப்படும் இசை ஆகிய பல செய்திகளை விவிலியத்திலிருந்து எடுத்துப் பேசுகிறார். இதன் மூலம் இசையின் தொன்மை குறித்துச் சொல்கிறார். தமிழ் பேசும் பகுதிகளில் ஏற்பட்ட கடற்கோள்கள் குறித்து விரிவாகப் பதிவு செய்கிறார். ஜலப்பிரளயம் எனும் சொல்லை கடற்கோள் என்பதற்குப் பயன்படுத்துகிறார். இதன் மூலம் தமிழைப் போற்றிய முதல், இடை, கடைச்சங்கங்கள் கடலில் மூழ்கியதைச் சொல்கிறார். இறையனார் களவியல் உரையில் பேசப்படும் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு, மேற்குறித்த விவரணங்களைப் பதிவு செய்கிறார். லெமூரியா கண்டம் குறித்த பல்வேறு ஆய்வுகளையும் மேற்கோள் காட்டுகிறார். அழிந்துபோன லெமூரியாவில்தான் தமிழ்மொழி புழக்கத்தில் இருந்ததாகக் கூறுகிறார். இதன் மூலம் தமிழ்மொழியின் தொன்மையைப் பதிவு செய்கிறார்.

சென்னை இராஜதானியின் நிர்வாகக் கையேடு, அபிதான சிந்தாமணி, கால்டுவெல் எழுதிய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம், வின்சுலோ அகராதியில் உள்ள செய்திகள், மோனியர் வில்லியம்ஸ் அவர்களின் தமிழ் - சமசுகிருத அகராதி ஆகியவற்றிலிருந்து விரிவான மேற்கோள்களைத் தருகிறார். ஆங்கிலத்தில் கொடுத்து விட்டு அதன் தமிழ் மொழியாக்கத்தையும் தருகிறார். இச்சான்றுகள் தமிழ்மொழியின் தொன்மையை உறுதிப்படுத்துவதாகக் கருதுகிறார்.

"உலகச் சரித்திரங்கள் எழுதப்படுவதற்கு முன்னும், அழிந்துபோன லெமூரியா கண்டத்திலுள்ளோர் நாகரிகமுடையவர்களாயிருந்திருக்க வேண்டு

மென்று சரித்திரக்காரர் சொல்வதற்கிணங்க அக் கண்டத்திலுள்ள தென்மதுரையும், அதில் அரசாண்டு வந்த பாண்டிய ராஜர்களும் சங்கப்புலவர்களும் பேசி வந்த பாஷையாகிய தமிழும், மிகுந்த தொன்மையும் தனிச்சிறப்பும் வாய்ந்தவைகளாயிருந்தன. தமிழ் என்னும் பதத்தின் முதல் இரண்டு எழுத்துக்கள் சேர்ந்த தமி என்னும் முதனிலையானது ஒப்பின்மை, தனிமை என்றும், தமிழ் என்னும் பதமானது, இனிமை, மதுரம் என்றும் அர்த்தப்படுமென்று நாம் அறிவோம்". (கருணாமிர்தசாகரம். முதல்புத்தகம். முதல்பாகம்: 2009:153)

இவ்வகையில் பண்டிதரின் கருணாமிர்தசாகரம் முதல் பகுதியில் உலகத்தில் இசையின் தொன்மை, விவிலியம் கூறும் இசையின் பழைமை, கடற்கோள்களினால் அழிந்து போன தமிழ்ச்சங்கங்கள், தமிழின் பழமை ஆகியவற்றைப் பதிவு செய்கிறார். தொல்பழங்காலத்தில் பேணப்பட்ட இசைமரபு பிற்கால மன்னர்கள் காலத்திலும் போற்றிப் பாதுகாக்கப்பட்டது என்பதை முதல் பாகத்தின் இறுதிப் பகுதியில் பேசுகிறார். பிற்கால சோழர் காலத்தில் உள்ள இசை தொடர்பான கல்வெட்டுக்களை விரிவாக மேற்கோள் காட்டுகிறார். தஞ்சாவூர் பெரியகோவில் கல்வெட்டுகளிலுள்ள இசை, நடனம் தொடர்பான விரிவான விவரணங்களைப் பதிவு செய்துள்ளார். மேலும் தஞ்சையில் "சங்கீத வித்யா மகாஜன சங்கம்" உருவாக்கப் பட்டதற்கான காரணங்களைக் கூறுகிறார். தென்னிந்திய இசை வல்லுநர்கள் சுமார் நாற்பது பேர், இசைமரபை ஆதரித்த அரசர்கள், புரவலர்கள் ஆகியோரின் பட்டியல் களையும் தந்துள்ளார். ஒரு பொருள் குறித்து ஆய்வு செய்யும்போது, அதன் அடிப்படையாக அமையும் வரலாறு அவசியமாகும். அந்த வகையில் கருணாமிர்த சாகரத்தின் முதல் பகுதி அமைந்துள்ளது.

❑ ❑ ❑

கி.பி.பதிமூன்றாம் நூற்றாண்டில் சாரங்கர் என்பவர் எழுதிய 'சங்கீதரத்னாகரம்' எனும் நூல், தென்னிந்திய இசைமரபு குறித்து எழுதிய முதல் நூலாகப் பலராலும் கருதப்படுகிறது. இந்நூலில் பேசப்படும் இருபத்திரண்டு சுருதிகள் என்னும் அலகைப் பண்டிதர் ஏற்றுக்கொள்ள வில்லை. எனவே அந்நூலில் சுருதிகள் குறித்துப் பேசப் படும் செய்திகளைப் பற்றிய விரிவான ஆய்வை மேற் கொள்கிறார். அந்நூலை அடியொற்றிப் பேசும் அறிஞர் களின் கருத்துக்களையும் ஆய்வு செய்கிறார். 'விக்டோரிய கீதிகா' என்ற சமசுகிருத இசை நூலை எழுதிய ராஜா சுரேந்திர மோகன தாகோர் மற்றும் கே.பி.தேவால், இ.கிளிமெண்ட்ஸ், சி.நாகோஜிராவ், சுப்பிரமணிய சாஸ்திரி ஆகியோர், 'சங்கீதரத்னாகரம்' நூலில் பேசப்படும் இருபத்திரெண்டு சுருதிகளை எவ்வா றெல்லாம் புரிந்து பதிவு செய்துள்ளனர் என்பதை விரிவாகப் பேசுகிறார். மேற்குறித்த அறிஞர்களின் கருத்துக்களை சாரங்கர் கருத்துக்களோடு ஒப்பிட்டு பல்வேறு அட்டவணைகளை உருவாக்கியுள்ளார். இதன் மூலம் இருபத்திரெண்டு சுருதிகள் குறித்துப் பேசு வோரின் கருத்துக்களைப் பதிவு செய்கிறார். சமசுகிருத மொழியிலுள்ள தென்னிந்திய இசை பற்றிய சாரங்கரின் நூலான சங்கீதரத்னாகரம் செய்திகளை, பண்டிதர் விரிவாக உரையாடலுக்கு உட்படுத்துவது என்பது, அடுத்த பகுதியில் 22 சுருதிகள் எனும் அலகுப் பதிலாக 24 சுருதிகள் எனும் அலகை அவர் கட்டமைப்பதற்கான அடிப்படையாக அமைகிறது. அவ்வகையான உரை யாடல் பூர்வ தமிழிசை குறித்தப் புரிதலுக்கு உதவுமென்றும் கருதுகிறார்.

பூர்வ தமிழிசை மரபில் காலப் போக்கில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்துப் பண்டிதர் ஆய்வு செய்கிறார். அவ்வாய்வில் தமிழிசை தொடர்பான சொற்கள் பலவும் சமசுகிருத சொற்களாக மொழிமாற்றம் பெற்றதாகக் கருதுகிறார். அவ்வகையான செயல்பாடுகள், சாரங்கரின் 'சங்கீதரத்னாகரம்' நூலில்தான் முதல்முதல் முன்னெடுக்கப் படுவதாகக் கருதுகிறார். தமிழிசையில் ஏற்பட்ட இவ்வகையான மொழிமாற்றத்தை உறுதிப்படுத்தும் வகையில், பண்டிதர் தமது ஆய்வைக் கொண்டு செல்கிறார். இக்கண்ணோட்டத்தில் அந்நூல் பேசும் செய்திகளையும் அதனை வேறு பலர் எடுத்துக் கொண்ட முறையினையும் விரிவாகப் பதிவு செய்கிறார். இப்பகுதி கருணாமிர்தசாகரத்தின் இரண்டாம் பகுதியாக அமைகிறது.

❑ ❑ ❑

"வடநாட்டில் வழங்கிவரும் கானத்திற்கும் சாரங்க தேவர் எழுதிய சங்கீதரத்னாகரத்திற்கும் எப்படி ஒற்றுமையில்லையோ அப்படியே தென்னாட்டில் சமஸ்கிருதம் தெலுங்கு தமிழ் முதலிய பாஷை களில் எழுதிய சங்கீத சாஸ்திரத்திற்கும், சங்கீத ரத்னாகரத்திற்கும் முற்றிலும் ஒற்றுமையில்லை யென்று அறிகிறோம். ஆனால் தென்னாட்டிலுள்ள சில சமஸ்கிருத நூல்களுக்கும் தென்னாட்டின் சங்கீதத்திற்கும் ஒற்றுமையிருக்கிறதென்று விசாரிக்கும் விவேகிகள் அறிவார்கள். ஊர்ந்து திரிகிற குழந்தை நடக்க பிரயத்தனப்படுவதும், பூமியில் நடக்கிற ஒருவன் ஆகாயத்தில் பறக்க விரும்புவதும் பெற்று வளர்த்த தாயைவிட்டு மனையாளிடத்தில் அதிகப் பிரியங்காட்டுவதும் இயற்கையென்று அறிவோம். அரைகுறையாய்த் தான் கற்ற அந்நிய பாஷையில் தனது தாயின் குணங்களை வர்ணிப்பது போலத் தென்னாட்டின் சங்கீத ரகசியங்களை அந்நியப் பாஷையிலெழுதி வைத்ததேயொழிய வேறில்லை". (கருணாமிர்த சாகரம். முதல்புத்தகம். மூன்றாம் பாகம்: 2009:10)

தென்னிந்திய இசை மரபு எவ்வாறு பதிவு செய்யப் பட்டது? ஒரு மொழியில் பதிவு செய்யப்பட்டது என்பதனாலேயே அதிலுள்ள செய்திகள் அம்மொழி சார்ந்த பண்பாட்டுத் தரவுகளாக அமைந்துவிடுமா? எனும் கேள்விகளுக்குப் பதிலாகவே, தென்னிந்திய இசைமரபு பதிவு செய்யப்பட்டிருக்கும் மொழிபற்றிய புரிதலை மேற்காணும் பண்டிதரின் பதிவுதருகிறது. பல்லவ மன்னர்கள், பிற்கால சோழர்கள், விஜயநகர மன்னர்கள் ஆகியோர் காலத்தில் அரச மொழியாக சமஸ்கிருதம் செயல்பட்டது. தென்னிந்திய கட்டிடக் கலை, தென்னிந்திய இசைக்கலை, தென்னிந்திய சமய மரபுகளின் அடிப்படைகள் ஆகிய பிற சமசுகிருத மொழியில் எழுதப்பட்டன. வைணவ ஈட்டு உரைகள் எழுதப்பட்ட மணிப்பிரவாள மொழி எத்தகையது என்பதை நாம் அறிவோம். கி.பி.ஏழாம் நூற்றாண்டு முதல் பொறிக்கப்பட்ட கல்வெட்டு மொழி குறித்தும் நாம் அறிவோம். இந்தப் பின்புலத்தில் சமஸ்கிருத சொற்களிலிருக்கும் பூர்வ தமிழிசை மரபு குறித்த ஆய்வை பண்டிதர் மேற்கொள்கிறார். கருணாமிர்த சாகரத்தின் மூன்றாம் பகுதியில் சங்கீதரத்னாகரத்தில் கூறப்படும் செய்திகளில் தொல்பழமைமையைக் கூறுகிறார். அதனை இசைத்தமிழ்ச் சுருதிகள் என்று அழைக்கிறார். இதனை அவரது சொற்களில் வாசிப்பது நல்லது. அப்பகுதி வருமாறு.

> “பூர்வ நூல்களின் அபிப்ராயத்தை உள்ளது உள்ளபடி அர்த்தம் செய்து, பழைய வழி அதனை மேலான நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்று அநேக கனவான்கள் பிரயாசப்பட்டிருக்கிறார் களென்றும், அவர்கள் சாரங்கத்தேவர் கருத்தின்படி சுருதி சேர்க்காமல் வெவ்வேறு விதமாய்த் தங்கள் மனம்போல் செய்திருக்கிறார்களென்றும் இதன் முன் உள்ள அட்டவணைகளில் தெளிவாகக் கண்டோம்.
>
> அவைகள் யாவையும் பார்த்த நமக்கு யாவராலும் மிக அருமையும் சாஸ்திர முறைமையுமுடைய தென்று மதிக்கப்படும் தென்னிந்திய சங்கீதத்திற்குப் பூர்வ தமிழ் நூல்களின் ஆதாரம் ஏதாவது உண்டா என்று விசாரிக்கும் எண்ணம் உண்டாகாமல் போகாது. இவ்வெண்ணம் முற்றிலும் பூர்த்தி அடையாமல் போனாலும், அதாவது தென்னிந்திய சங்கீதத்தைப் பற்றி விவரஞ்சொல்லும் பூர்வ நூல்கள் நமக்குக் கிடைக்காமல் போனாலும், தென்னிந்திய சங்கீதத்திற்கு முக்கிய ஆதாரமான சில அம்சங்கள் மாத்திரம் தற்காலம் ஆங்காங்கே காணக் கிடைக்கின்றன.
>
> அதோடு தென்னாட்டில் வழங்கிவரும் சங்கீதப் புத்தகங்கள் என்று சொல்லப்படும் சில சமஸ்கிருத நூல்களிலும், தென்னிந்திய சங்கீதத்தில் வழங்கி வந்த சில அம்சங்களையே சொல்லியிருக்கிற தென்று நாம் அறிய வேண்டும்”. (கருணாமிர்த சாகரம். முதல்புத்தகம். மூன்றாம்பாகம். 2009:10)

தென்னிந்திய சங்கீதமரபு என்பது பூர்வ தமிழிசை மரபுதான் என்பதை உறுதியாகப் பேசும் பண்டிதர், இதனை சிலப்பதிகாரத்தில் பேசும் இசை தொடர்பான செய்திகளின் அடிப்படையில் விரிவாக ஆய்வு செய்திருக் கிறார். மூன்றாம் பகுதி முழுவதும், தொல்காப்பியம், பரிபாடல், சிலப்பதிகாரம் ஆகியவற்றிலுள்ள இசை தொடர்பான மரபுகளை ஆய்வு செய்வதாகவே அமைகிறது. இந்த மரபு பின்னர் எவ்வாறு தென்னிந்திய இசைமரபாக வடிவம் பெற்றது என்பதையும் பேசுகிறார். பண்டிதரின் தமிழ் இசை பற்றிய ஆய்வு என்பது, தமிழ்ச்சமூகத்தில் நடைமுறையில் தொழிற்பட்ட அவைதீக மற்றும் வைதீக மரபுகள் சார்ந்து புரிந்து கொள்ளும் தேவை உண்டு.

❑ ❑ ❑

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல்வேறு சமூக இயக்கங்கள், தமிழ்ச்சூழலில் உருப்பெற்றன. திராவிட மாணவர் சங்கம் (1912), தனித் தமிழ் இயக்கம், தமிழ் பௌத்த சங்கம்;, தென்னிந்திய நலஉரிமைச் சங்கம் (1917), சென்னை மாகாணசங்கம் (1924), சுயமரியாதை இயக்கம் (1925), தமிழிசை இயக்கம் என்பவை அவ்வகையில் அமையும். இவை இனம், மொழி சார்ந்த பல்வேறு புதிய பார்வைகளை முன்னெடுத்தவை. இவ் வகையில் தமிழிசை இயக்கத்தின் பங்கும் குறிப்பிடத் தக்கது.

சென்னை சங்கீத வித்வ சபை (1927)இல் உருவாக்கப்பட்டது. அந்த அமைப்பின் அரங்காக மியூசிக்கல் அகாடெமி கட்டிடம் கட்டப்பட்டது. அவ்வரங்கில் தமிழ்ப் பாடல்கள் பாடுவதற்கான அனுமதி மறுக்கப்பட்ட சூழலில், அதற்கு எதிராக உருவான இயக்கமே தமிழிசை இயக்கம் என அறியப்படுகிறது. இதில் தமிழகத்தில் இருந்த அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் பங்கேற்றனர். 1929இல் உருவான அண்ணாமலைப் பல்கலைக்கழகம், தமிழ்நாட்டில் உருவாக இருந்த தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு மாற்றாகவே அமைந்தது. ஆந்திரப் பல்கலைக்கழகம், கேரளப் பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம் என்றே காலனிய இரட்டையாட்சி அரசு அனுமதி வழங்கியது. ஆனால் அண்ணாமலை அரசரின் செல்வாக்கால், சிதம்பரம் மீனாட்சி கல்லூரி தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு மாற்றாக அண்ணாமலைப் பல்கலைக்கழகமாக அமைந்தது. அங்கு தமிழ் இசைக்கு முதன்மை கொடுக்கும் செயல்கள் முன்னெடுக்கப் பட்டன. சங்கீத வித்வ சபையை எதிர்கொள்ள தமிழ்

இசை குறித்த ஆய்வு, மற்றும் மாநாடு நடத்தல் (பண்ணிசை மாநாடு) ஆகியவை நடந்தன. மதுரை, சென்னையில் கட்டப்பட்டுள்ள அண்ணாமலை மன்றங்களும், சங்கீத வித்வ சபை நடவடிக்கைகளுக்கு எதிரான உருவாக்கங்களே ஆகும்.

இவ்வகை இயக்கத்தை இராஜாஜி 'தமிழ்ப்பாட்டு' இயக்கம் என்றே அழைப்பார். ஏனெனில் தமிழில் பாட இயலாத நிலைக்கு எதிராக உருவான இயக்கம் என்பதால் ஆகும். இவ்வகையான இயக்கத்திற்கு முன்னோடியாக ஆபிரகாம் பண்டிதரைக் குறிப்பிட முடியும். கீழ்க்காணும் செயல்கள் அவரது தமிழிசை இயக்கச் செயல்களாகக் கருதலாம்.

- 1907இல் கருணாமிர்தசாகரத்திரட்டு எனும் நூலை வெளியிட்டார். இவை தமிழ்ப் பாட்டுக்களைப் பாடும் பயிற்சியாளர்களுக்கென்று உருவாக்கப் பட்ட கையேடு ஆகும். 95 தமிழ்ப்பாடல்களுக்கு சுர தாள ஒழுங்கை இவர் அமைத்து இந்நூலைக் கொண்டுவந்தார். தமிழ்க் கீர்த்தனங்கள் இல்லை யென்ற சூழலில் அதற்கான மாற்று ஏற்பாடாகவே செய்தார்.
- 1912இல் தஞ்சாவூர் சங்கீத வித்ய மகாஜன சங்கத்தை உருவாக்கினார். அந்த ஆண்டு முதல் 1916 வரை ஏழு இசை மாநாடுகளை நடத்தினார். சுருதிகள் பற்றிய ஆய்வு இம்மாநாடுகளில் மேற் கொள்ளப்பட்டது. இதனை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நடத்திய பண்ணிசை ஆராய்ச்சி மாநாடுகளுக்கு முன்னோடியானது என்று கூற முடியும்.

❑ ❑ ❑

ஆபிரகாம் பண்டிதர் வாழ்க்கை என்பது பல்வேறு பரிமாணங்களைக் கொண்டதாக அமைகிறது. மிகச் சாதாரணக் குடும்பத்தில் பிறந்து, பெரும் ஆளுமையாக உருவான வரலாறு வியப்பளிக்கும் வகையில் உள்ளது. சித்த மருத்துவ நாடார் குடும்பம், மூன்று தலைமுறை யாக சித்த மருத்துவப்பயிற்சியில் இருந்த குடும்பத்தில் பிறந்தார். பள்ளி ஆசிரியராக பணியைத் தொடங்கினார். சுருளி மலைப் பகுதியில் இருந்த கருணாமிர்தர் என்பவரை தமது குருவாக ஏற்றுக் கொண்டார். அவரின் மூலமாக இவரது மருத்துவ அறிவு வளர்ந்தது. அக் காலத்தில் தென்னிந்தியாவை அலைக்கழித்த பிளேக் நோய்க்கு மருந்து கண்டுபிடித்து மக்களைக் காப்பாற்றி யவர் பண்டிதர். திண்டுக்கல் பகுதியிலிருந்து, தஞ்சாவூருக்குக் குடிபெயர்ந்தார். ஆசிரியப் பணியை விட்டார். முழு நேர மருத்துவர் ஆனார். முழுநேர விவசாயியும் கூட. பழப் பண்ணை, மாட்டுப் பண்ணை ஆகியவற்றை உருவாக்கினார். அவற்றிற்கு நவீன நீர் இறைக்கும் கருவிகளை இங்கிலாந்திலிருந்து வருவித்தார். தனது



கருணாமிர்த சாகரம் நூல் அச்சிட லாலி அச்சகத்தை உருவாக்கினார். அதற்கான இயந்திரம் இங்கிலாந்தி லிருந்து வாங்கப்பட்டது. ஒருவகையில் ஜி.டி.நாயுடு அவர்களின் வாழ்க்கைக்கும் பண்டிதர் வாழ்க்கைக்கும் நெருங்கிய ஒற்றுமைகள் உள்ளன.

மேற்குறிப்பிட்ட பின்புலத்தில் இருந்த பண்டிதர், இசைத் துறைக்குச் சென்றதில் அவரது இரண்டாவது துணைவியார் கோவில் பாக்கியம் அம்மா அவர்களுக்குப் பங்குண்டு. அவரது இசைப் பணிகள் தமிழ்ச்சமூக வரலாற்றில் என்றும் பேசப்படும். தமிழ்ச்சமூகத்தில் பண்டிதர் ஆளுமையை முழுதும் புரிந்து கொள்ளப் பட்டுள்ளதா? என்றே கேட்க வேண்டியுள்ளது. அவரைக் கொண்டாடும் கடமை நமக்குண்டு.

❑ ❑ ❑

**ஆதாரநூல்கள்**


1917 - ஆபிரகாம் பண்டிதர் மு. கருணாமிர்த சாகரம் எனும் இசைத்தமிழ் நூல். 1994இல் அன்றில் பதிப்பக வெளியீடாக வந்தது. இது இரண்டாம் அச்சு. அந்நூல் இங்கு பயன்படுத்தப்பட்டது.

1950 - வரகுணபாண்டியன் ஆ.அ. பாணர் இசைவழி எனப்படும் யாழ்நூல். இதன் மறுபதிப்பு 2001இல் வந்தது. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம். இந்நூல் இங்கு பயன்படுத்தப்பட்டது.

1984 - தனபாண்டியன் ஆபிரகாம்பண்டிதர் (வாழ்க்கை வரலாறு)

1985 - அருணாச்சலம்.மு கருநாடக சங்கீதம் தமிழிசை. ஆதி மும்மூர்த்திகள்.

1988 - தனபாண்டியன்.து.ஆ நுண்ணலகுகளும் இராகங்களும் தமிழ்ப் பல்கலைக்கழகம். தஞ்சாவூர்.

1993 - தண்டபாணி.ப. திராவிடர் இசை ஆபிரகாம் பண்டிதர் மன்றம். சென்னை

2007 - அமுதாபாண்டியன். கருணாமிர்தம்:சுருக்கத் திறனாய்வு உரை ஆபிரகாம் பதிப்பகம் தஞ்சாவூர்.

2009 - ஆபிரகாம் பண்டிதர். தமிழிசைக் களஞ்சியம் கருணாமிர்தசாகரத்திரட்டு (பகுதி 1), கருணா மிர்த சாகரம் (பகுதி-2 முதல் 7 வரை) பதிப்பு: அங்கயற்கண்ணி. மு. வளவன் பதிப்பகம். சென்னை.



காவ்யா
கால்கரை
வெ. சுடலைமுத்துத்தேவரின்
14 ஆவது நினைவு நாளில்
பேரா.நா.வானமாமலையின்
நூற்றாண்டு விழாவும்
10 நெல்லை படைப்பாளிகளின்
நூல் வெளியீட்டு விழாவும்
தலைமை : பேரா.சு.சண்முகசுந்தரம்
நூல் வெளியீட்டாளர்
முருகதாஸ் தீர்த்தபதி ராஜா
பேரா.நா.வா.வின்
நான்கு கதைப்பாடல்கள்
பேரா.நா.வா.வின்
கட்டபொம்மு கதைப்பாடல்கள்
நூல்களைப் பெறுபவர்கள்
பேரா.தோத்தாத்திரி, பேரா.நா.இராமச்சந்திரன்
நல்ல நூல்கள் நல்ல நண்பர்கள்!
நவில் தொறும் நூல்நயம்!!
நாள் : 19.11.2017 ஞாயிறு, மாலை 5 மணிக்கு
இடம் : ஓட்டல் ஜானகிராம், நெல்லை சந்திப்பு
தொடர்புக்கு : 98404 80232
ஆசிரியர்கள் / நூல்கள் / பெறுபவர்கள்
பேரா.சு.சண்முகசுந்தரத்தின் அக்னி – நாடகம்
பேரா.சிவசு
பேரா.சு.சண்முகசுந்தரத்தின் தொகுப்பில்
காசு பிள்ளையின் உலகப் பெருமக்கள்
கவிஞர் மு.சு.சங்கர்
பேரா.சண்முகசுந்தரத்தின் தொகுப்பில்
முதல் விடுதலை வீரர் பூலித்தேவர்
பேரா.பா.வளனரசு
பேரா.சு.அழகேசனின் இலக்கிய மொழி
பேரா.சு.சுந்தரம்
பேரா.அ.கா.பெருமாளின்
இரட்டை அர்த்தங்கள் மாண்டு போகவில்லை
செந்தீ நடராசன், தொல்லியல் அறிஞர்
பேரா.சீ .சித்ராவின் இரத்தினங்கள் –ஓர் அறிமுகம்
பேரா. பா.வேலம்மாள்
பேரா. ஜெ.பி. ஜோஸபின்பாபா அன்பே பாபா –நாவல்
நாறும்பூ நாதன், எழுத்தாளர்
எழுத்தாளர் நா.நாகராஜனின் விடியும்வரை பேசலாம்
எட்வர்ட் சாமுவேல், தொழிலதிபர்
முத்தாலங்குறிச்சி காமராசுவின் நெல்லைக்கோயில்கள்
டாக்டர் ஏ.எஸ்.பால்ராஜ் – ஏ.எஸ்.பி குழுமம்
முத்தாலங்குறிச்சி காமராசுவின் சிங்கம்பட்டி ஜமீன்கதை
டாக்டர் சு.செல்லப்பா, தேசிய நல்லாசிரியர்
வரவேற்பு : டாக்டர் சு. நடராசன்
நன்றியுரை: டாக்டர் சு முருகேசன்
நூலின் மொத்த விலை : ரூ.3000/–
விழாவன்று சலுகை விலை : ரூ 2000/–
அனைவரும் வருக!




# அக்டோபர் புரட்சி

## எஸ். தோதாத்ரி

*ரஷ்யாவில் 1917 ஆம் ஆண்டு இடம் பெற்ற அக்டோபர் புரட்சி பற்றி நமது மகாகவி பாரதி பின்வருமாறு எழுதுகிறார்.*

"மாகாளி பராசக்தி உருசிய நாட்
டினிற் கடைக்கண் வைத்தா ளங்கே
ஆகாவென் றெழுந்தது பார் யுகப் புரட்சி
கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்
வாகான தோள் புடைத்தார் வானமரர்
பேய்களெல்லாம் வருந்திக் கண்ணீர்
போகாமற் கண் புகைந்து மடிந்தனவாம்
வையகத்தீர் புதுமை காணீர்."

இந்தக் கவிதை பாரதி அன்பர்களுக்கு நன்கு தெரிந்த ஒன்று. சோவியத் புரட்சி நடந்த உடனேயே அதனை வரவேற்றுப் பாடிய முதல் தமிழ்க் கவிஞன் என்ற பெருமை பாரதிக்கு உண்டு. (தமிழ்நாட்டில் இதனைக் கொச்சைப்படுத்தி பேசியவர்கள் உண்டு.)

இந்தப் புரட்சியின் நூற்றாண்டு விழாவை ஒட்டி அதன் அடியார்களாக விளங்கிய லெனின், ஸ்டாலின் வழி நின்று அது பற்றிய சில விஷயங் களை இங்கு நினைவுபடுத்திக் கொள்வது அவசிய மாகிறது. இவற்றை பெரும்பாலும் எல்லோரும் மறந்து விட்டனர்.

இந்தப் புரட்சி தோன்றி வெற்றி பெறுவதற்கான சூழ்நிலைகள் என்ன என்பது முதல் கேள்வி.

இதனை முதலில் பாரதி வாயிலாகவே காண்போம்.

"உழுது விதைத் தறுப்பாருக் குணவில்லை;
பிணிகள் பல வுண்டு; பொய்யைத்
தொழுதடிமை செய்வார்க்குச் செல்வங்க
ளுண்டுண்மை சொல்வோர்க் கெல்லாம்
எழுதரிய பெருங்கொடுமைச் சிறையுண்டு
தூக்குண்டே யிறப்ப துண்டு
முழுதுமொரு பேய் வனமாஞ் சிவேரியிலே
ஆவிகெட முடிவ துண்டு."

லெனின், ஸ்டாலின் ஆகியோரது மொழியில் கூறினால் இது புரட்சிக்கான அகச் சூழ்நிலை ஆகும். இவற்றை ஸ்டாலின் பின்வருமாறு வகைப் படுத்துகிறார் ஒன்று: ரஷ்யாவின் பெரும்பான்மை உழைக்கும் மக்களின் ஆதரவு அக்டோபர் புரட்சிக்கு இருந்தது. இரண்டு: ஏழை விவசாயிகள் போர் வீரர்கள் ஆகியோர் அதனை ஆதரித்தனர். மூன்று : உறுதியான கொள்கையுள்ள போல்ஷ்விக் கட்சி அதற்குத் தலைமை தாங்கியது. இக்கட்சிக்கு உழைக்கும் மக்களிடையே நெருங்கிய தொடர்பு இருந்தது. நான்காவது புரட்சியை எதிர்த்த ரஷ்ய பூர்ஷ்வா வர்க்கம் பலமற்று இருந்தது. நிலப் பிரபுத்துவ வர்க்கம் சிதைந்து இருந்தது. ஐந்தாவது பல சிறு சிறு அரசுகளின் ஆதரவு அதற்கு இருந்தது அவற்றில் போல்ஷ்விக்குகள் சுதந்திரமாகச் செயல் பட்டனர்.

இவை ரஷ்யாவிற்கு உள்ளே இருந்த நிலை. இவற்றை பாட்டாளி வர்க்கத்துடன் இணைத்து புரட்சியை நடத்திய பெருமை போல்ஷ்விக்கு களுக்கு உண்டு.

அதே ஸ்டாலின் இதற்கான புறக்காரணி களையும் வகைப்படுத்துகிறார். அக்டோபர் புரட்சி ஏற்பட்ட பொழுது ஐரோப்பிய அரங்கில் இரண்டு ஏகாதிபத்திய சக்திகள் போராடிக் கொண்டிருந்தன. ஒன்று ஆங்கிலேயர்களும் - பிரஞ்சுக்காரர்களும் இணைந்திருந்த அணி. மற்றொன்று ஜெர்மனி - ஆஸ்திரியா ஆகியன இணைந்திருந்த அணி. இவற்றின் தீவிரமான பேராட்டம் காரணமாக அக்டோபர் புரட்சி பற்றி சிந்திக்க இவற்றிற்கு நேரமே இல்லை. இதனை புரட்சியாளர்கள் தங்களுக்குச் சாதக மாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

இவற்றின் விளைவாகத் தோன்றியது தான் பாட்டாளி வர்க்கம், விவசாய வர்க்கம் ஆகிய வற்றிற்கு இடையிலான கூட்டுறவு. இது பாட்டாளி வர்க்கத் தலைமையில் அமைந்தது. இது புரட்சியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்றது. இது அக்டோபர் புரட்சிக்கான காரணங்கள்.

அக்டோபர் புரட்சியானது ஒரு நாட்டில் ஏற்பட்ட ஒரு நிகழ்வு. இருந்தாலும் அது பல நாடுகளுக்கு வேகத்தைக் கொடுத்தது. அது அரசியல் ரீதியான வேகத்தினையும், கருத்தியல் ரீதியான வேகத்தையும் அளித்தது. எனவே அதனை ஒரு நாட்டில் இடம் பெற்ற தேசீய நிகழ்வாகக் காணக் கூடாது. அதாவது அதற்கு ஒரு தேசீயத் தன்மையும் உண்டு; சர்வ தேசீயத் தன்மையும் உண்டு.

பழங்காலத்தில் புரட்சிகள் இடம் பெற்றது உண்டு. உதாரணமாக ஸ்பார்ட்டகஸ் என்ற அடிமையின் தலைமையில் ரோம சாம்ராஜ்யத்தில் ஏற்பட்ட புரட்சி இதனை அடித்தளமாகக் கொண்டு ஹோவாட் பாஸ்ட் என்ற அமெரிக்க இடதுசாரி எழுத்தாளர் ஸ்பார்ட்டகஸ் என்ற நாவலை எழுதி யுள்ளார். இது புகழ்பெற்ற திரைப்படமாகவும் வெளிவந்துள்ளது. இதில் தான் அடிமை என்பவன் "பேசும் கருவி" (Speaking Tool) என்ற வாசகம் இடம் பெற்றது. இப்புரட்சி தோல்வியில் முடிந்தது; பிரான்ஸ் தேசத்தில் உலகப் புகழ்பெற்ற பிரஞ்சுப் புரட்சி இடம் பெற்றது. இது வெற்றி பெற்றது. இதன் விளைவாக பிரபுத்துவ ஆட்சி ஒழிக்கப் பட்டு, பூர்ஷ்வாக்களின் ஆட்சி இடம் பெற்றது. இதனைத் தொடர்ந்து பாரிஸ் கம்யூன் எழுச்சி இடம் பெற்றது. இது தான் பாட்டாளி வர்க்க மானது முதலாளிகளுக்கு எதிராகப் போர் கோலம் பூண்டு ஆட்சியைப் பிடித்த நிகழ்ச்சி யாகும். ஆனால் வரலாற்றுச் சூழல் சாதகமாக

இல்லாத காரணத்தால் இது கொடூரமாக அடக்கப் பட்டது. பிரான்சில் இரத்த ஆறு ஓடியது! இது போன்று இங்கிலாந்திலும், ஜெர்மனியிலும் பல போராட்டங்கள் இடம் பெற்றன. ஆசிய நாடு களிலும் இடம் பெற்றன. இவற்றில் அடக்கப்பட்ட வர்க்கமானது சுரண்டல்காரர்களை அகற்றி விட்டு அதன் ஆட்சியை நிறுவ முற்பட்டது. இது வரலாறு கண்ட உண்மை. இன்று வர்க்கங்களே கிடையாது என்று பேசுபவர்களது மண்டையில் இது ஏறாது.

அக்டோபர் புரட்சி அதற்கு முந்தி நடந்த புரட்சியிலிருந்து முன்னேறிய ஒன்று. இதன் நோக்கமே சுரண்டலை முற்றிலுமாக அகற்று வதாகும். எனவே இது முற்றிலும் புதிய வகைப் புரட்சி ஆகும். இது பற்றி ஸ்டாலின் பின்வருமாறு கூறுகிறார்.

"அக்டோபர் புரட்சியின் வெற்றி மனித குல வரலாற்றில் ஒரு அடிப்படை மாறுதலின் வெற்றியைக் குறிக்கிறது; முதலாளித்துவத்தின் விதியைத் தீர்மானிக்கிறது; உலகப் பாட்டாளி களின் விடுதலைப் போராட்டத்தில் ஒரு மாறுதலைக் குறிக்கிறது போராட்ட முறைகளிலும், வடிவங் களிலும் ஒரு புரட்சிகர மாறுதலைக் குறிக்கிறது. சுரண்டப்பட்ட, வர்க்கங்களின் கருத்தியல் கலாச் சாரம் ஆகியவற்றில் மாறுதலைக் குறிக்கிறது" (stalin : Problems of Leninism : 237).


அக்டோபர் புரட்சி ஏற்படுத்திய விளைவுகள் என்ன? ஒன்று உலக ஏகாதிபத்திய முகாமில் அது ஒரு விளைவை ஏற்படுத்தியது. உழைப்பாளிகள், அடக்கப்பட்டவர்கள், சுரண்டப்பட்டவர்கள் ஆகியோர் கரங்களில் அரசு அதிகாரம் சென்றது. உற்பத்தி சாதனங்கள், பொதுச் சொத்தாக மாற்றம் பெற்றன. உலகில் முதன் முதலாகச் சோஷலிசச் சொத்து என்பது பூர்ஷ்வாக்களின் அதிகாரத்தை அடியோடு ஒழித்தது. இரண்டு இப்புரட்சியின் தாக்கத்தினால், உலகின் பல நாடுகளில் உழைப் பாளர் போராட்டங்கள் வேகம் பெற்றன. அக் காலத்திய தேச விடுதலைப் பேராட்டத்திற்கு இப் புரட்சி உந்து விசையாக இருந்தது என்பது வரலாற்று உண்மை. மூன்று இதனை வெறும் பொருளாதார மாறுதல் என்றோ, அரசியல் மாறுதல் என்றோ கூற முடியாது. இது உழைக்கும் மக்களது சிந்தனையில் மாறுதலைக் கொண்டு வந்தது. இது மார்க்சியத்தின் வெற்றியை எடுத்துக் காட்டியது. மார்க்சியக் கருத்துக்கள் உலகம் முழுவதிலும் பரவுவதற்கு இது காரணமாக இருந்தது. பாராளுமன்ற ஜனநாயகம் என்பதை இது கேள்விக்குள்ளாக்கியது.

அக்டோபர் புரட்சி பல படைப்பாளிகளையும் கவர்ந்தது. ஹெச்.ஜி.வெல்ஸ், பெர்னாட்ஷா போன்றவர்கள் புரட்சியைப் பாராட்டிப் பேசினர். உதாரணமாக, ஹெச்.ஜிவெல்ஸ், புரட்சி நடந்த ஒரு சில வாரங்களில் லெனினைப் பற்றி பின் வருமாறு எழுதினார் "கிரம்ளினில் ஒருவர் கனவு கண்டு கொண்டிருக்கிறார்" இதே வெல்ஸ் ஒரு சில ஆண்டுகளுக்குப் பின்னர் பின்வருமாறு எழுதினார். "அந்தக் கனவு நனவாகிவிட்டது" ஜான் ரீட் "உலகத்தை உலுக்கிய பத்து நாட்கள்" என்ற நூலை புரட்சி பற்றி எழுதினார். தமிழ்நாட்டில் பெரியார் இந்தப் புரட்சியை வரவேற்றார். அலக்ஸி டால்ஸ்டாயின் "எஃகு எவ்வாறு உறுதி யாக்கப்பட்டது?" என்ற நாவல் புரட்சியைப் பற்றியது ஆகும்.


இந்தப் புரட்சி செய்த காரியம் உலக ஏகாதி பத்திய முகாமில் ஒரு சிறு விளைவை ஏற்படுத்தியது ஆகும். ஆனால் இது பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியது என்பது மட்டும் உண்மை. இதனை பட்டுக்கோட்டையின் பாடல் ஒன்றுடன் முடிக்கலாம். அது **நண்டு செய்த தொண்டு** என்ற பாடல். ஒரு பண்ணையாரின் வயல் மேடான இடத்தில் இருக்கிறது. அவருக்கு ஏராளமான வயல்கள். நல்ல வசதியான இடத்தில் அவை உள்ளன. முதல் தண்ணீர் முழுவதும் அவற்றிற்குத் தான் செல்லும். அந்த வயல்களைச் சுற்றி சிறு விவசாயிகளின் வயல்கள் உள்ளன. பண்ணை வயலின் உயரமான வரப்பை மீறி மற்ற வயல்களுக்குத் தண்ணீர் செல்ல முடியாது! ஒரு நண்டு பண்ணையார் வயலின் வரப்பில் ஒரு சிறு துளையிட்டது. இத்துளை வழியாகத் தண்ணீர் தாழ்வான வயல்களுக்குப் பாயத் தொடங்கியது. சிறுதுளை பெரிதாகி மற்ற வயல்களுக்குப் பாய்ந்தது. இந்த நண்டு தான் உழைக்கும் வர்க்கம். இதன் தொண்டு ஒரு சமுதாய மாறுதலுக்கு வித்திட்டது எனலாம்.

இன்று அக்டோபர் புரட்சியை இடதுசாரி களே மறந்துவிட்டனர். அவர்கள் பல கருத்துக் குழப்பங்களுக்கு உள்ளாகியுள்ளனர் வலுது சாரிகளைக் கேட்க வேண்டாம். அவர்கள் குழம்பிய குட்டையில் மீன் பிடித்துக் கொண்டிருக் கின்றனர். ●

# நியூ செஞ்சுரியின்
# புதிய வெளியீடுகள்




₹ 140/-





₹ 250/-





₹ 220/-




₹ 350/-





₹ 95/-





₹ 150/-

# ருஷியாவின் வெற்றி ஐந்து வருட திட்டத்தின் பலன்

பெரியார்



ருஷியாவில் 1917ல் நிகழ்ந்த புரட்சிக்குப் பின்னர் அந்நாடு உலக மக்களின் கவனத்தைப் பெரிதும் தன்பால் இழுத்துக்கொண்டது. சமதர்ம நோக்கமுடைய ஆன்றோர்களும், பொருளாதார நெருக்கடியால் கஷ்டப் படும் ஏழை மக்களும் ரஷ்ய சமதர்மத் திட்டத்தின் நுண் பொருளை நன்குணர்ந்து தத்தம் நாடுகளிலும் அத் திட்டங்களைப் புகுத்தி மிகுந்த தீவிரமாய் ஒரு பக்கம் பிரசாஞ் செய்துவர, ஊரார் உழைப்பில் உடல் நோவா துண்டு வாழும் சோம்பேறிச் செல்வவான்களும் அவர் களின் தரகர்களான புரோகிதர்களும், அவர் தம் பத்திரிகைகளும் முதலாளித்துவ அரசாங்கமும் சமதர்ம உணர்ச்சியை ஒழிக்கப் பற்பல சூழ்ச்சி முறைகளையும், மிருகத்தனமான பயங்கர ஆட்சி முறையையும் கையாண்டு வருவதும் ருஷியாவைப்பற்றிப் பொய்யும் புழுகுமான வியாசங்களை உலமெங்கும் பரப்பி அந்த ஆட்சி முறையை பலவாறு குற்றஞ் சொல்லி அங்கு

பட்டினியும், பஞ்சமும் நிறைந்திருக்கின்றனவென்று கூறியும் வேறு பல தீயமுறைகளைக் கையாடி வருகின்றனர். ருஷியாவின் சமதர்மக் கொள்கை ஒரு பொழுதும் நடைமுறையில் சாத்தியமாகாது என்று புகன்ற ராஜ தந்திரிகளும், ருஷியாவில் தனியு டைமை யொழிந்து பொதுவுடைமை மிளிர்வதால் அங்கு மக்களின் முயற்சியும், அறிவும் குன்றி உற்பத்திகள் குறைந்து போய்விடும் என்று தர்க்க ரீதியாய் மொழிந்த பொருள் நூலாசிரியர்களும் தங்கூற்றுத் தவரொன்று தானே இன்று ஒத்துக்கொள்ளும்படி செய்து விட்டதோடு ஐரோப்பிய வல்லரசுகளெல்லாம் ரஷியாவை அலட்சியம் செய்து வாழ முடியாத நிர்பந்தத்திற்குள் வந்து விட்டதென்பதை எவரும் மறுக்க முடியாது.

ரஷிய சமதர்மத் திட்டமோ இன்னும் முற்றுப் பெறவில்லை. உலக மெங்கும் சமதர்ம ஆட்சியாய் விளங்குங் காலத்திலே சமதர்ம ஆட்சியின் திட்டம் வெற்றி பெறுமென்று கூறலாம். இப்பொழுது ரஷியா உலகத்திலுள்ள முதலாளித்துவத்தோடு போரிட்டுக் கொண்டிருக்கிறதென்றே கூறவேண்டும். அப்போரில் தமது எதிரிகளை நிர்த்தாக்ஷண்யமாகத் தண்டித்து வருவதை நியாய புத்தியுள்ள எவரும் தவறென்று கூறத் துணியார். ரஷியாவில் மனிதனுக்கு சுதந்தரம் அதிக மில்லையென்று கூறப்படுகிறது. தனிமனிதனுடைய சுதந்திரத்திற்குப் போதிய இடமிருப்பதாகக் கூறப்படும் நாட்டிலுள்ள மக்களைவிட ரஷ்ய மக்களுக்கு அந் நாட்டில் அதிக சுதந்திரமும் உரிமையு மிருப்பதோடு ஜார் சக்கரவர்த்தியின் கொடிய ஆட்சியில் உண்ண உணவும், உடுக்க உடையும், ஒண்ட நிழலும், படுக்கப் பாயுமின்றி கோடானுகோடி மக்கள் தவித்து ஆயிரக் கணக்காய்-இல்லை-லட்சக்கணக்காய் பட்டினியாலும் நோயாலும் மடிந்த ரஷியா நாட்டிலே பட்டினி யென்றால் இன்னதென்பதை எவருமறியாதபடி, நோய் என்றால் இன்னதென்பதை உணராத படியும் நாளைக்கு உணவிற்கு என்செய்வது, வியாதியால் இரண்டு நாள் படுத்துக்கொண்டால் நமது நிலையென்ன? நமது குடும்பத்தின் கதியென்ன? என்றகவலையே அறியாத மக்களாய் வாழும்படி செய்து நாடெங்கும் சாந்தியும் சமாதானமும் நிறைந்திருக்கும்படி இச்சுருங்கிய காலத்திற்குள் சோவியத் ஆட்சி செய்து உலகத்திலுள்ள எல்லா முதலாளித்துவ அரசாங்கங்களும் திடுக்கிடச் செய்து விட்டதென்பதை நன்கு அறியலாம்.

### ஐந்து ஆண்டு திட்டம்

பஞ்சத்தாலும் கொடுங்கோன்மையினாலும் பொருளாதார நிலையிற் மிக மிகக் கேவலமாயிருந்த ரஷியாவை உன்னத நிலைக்குக் கொண்டுவர சோவியத் ஆட்சியினர் 5 வருடத்திட்டமொன்று தயாரித்து ஐந்து ஆண்டுகளுக்குள் இன்னின்ன வேலைகளைப் பூர்த்தி செய்துவிட வேண்டுமென்று திட்டம்போட்டுக் கொண்டு வேலை ஆரம்பித்தனர். வேலையற்று, கொள்ளையும் விபசாரமும் புரிந்து வந்த மக்களெல்லாம் தொழில் முறையில் ஈடுபட்டு தங்களின் துர்செயலை ஒழித்து நாட்டின் நலனைக் கோரி உழைக்க ஆரம்பித்து விட்டனர். பொருள் உற்பத்தி ஐந்து வருடத் திட்டத்தில் எதிர்பார்த்ததை விட அதிக வெற்றிபெற்று விட்டது. தங்கள் ஆட்சி முறையைப் பற்றி பெருமைபேசிக் கொண்டு கர்வம்கொண்ட ஐரோப்பாவும், அமெரிக்காவும் உலக வர்த்தகத்தில் ரஷியப் போட்டியை எதிர்த்து போராட முடியவில்லை. உலகத்து மார்க்கட்டி லெல்லாம் ரஷியக் கோதுமை போய் மோதி உலக பொருளாதார உற்பத்தி ஸ்தானங்களையெல்லாம் திடுக்கிடுக்கும்படி செய்து விட்டது.

'பசி வந்திடப் பத்தும் பரந்துபோம்' என்னும் பழமொழியைப் போல் பசியால் வாடும் மக்களிடம் சுதந்திரம், உரிமை முதலியவைகளைப் பற்றி கதை கூறுவதில் பயனென்ன? பட்டினியால் வாழும் மக்களுக்கு முதலில் கொடுக்க வேண்டியது வயிறு நிரம்பும்படி ஆகாரந் தான் கொடுக்க வேண்டுமென்ற உண்மையை சோவியத் அரசாட்சி அறிந்து கொண்டதோடு தனி சொத்துரிமையை ஒழித்து பொது உடமையை மேற்கொண்ட தங்கள் ஆட்சிக்கு பிற தேசம் உணவுப் பொருளைக் கொடுத்து ஒரு பொழுதும் உதவி செய்யாது என்பதையும் நன்கறிந்து 5 வருடத் திட்டத்தில் உணவுப் பொருள்களைப் பெருக்குவதைப் பிரதானமாகக் கொண்டனர். ஐந்து வருடத்திற்குள் இத்தனை டன் கோதுமை, இத்தனை டன் பாரம் பருத்தி, இவ்வளவு யந்திரங்கள், இவ்வளவு ஆடுமாடுகள், இவ்வளவு தொழிற்சாலைகள் உற்பத்தியாக வேண்டும், இத்தனை மாணவர்களுக்கு படிப்புச் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று திட்டம் போட்டு வேலை ஆரம்பித்தார்கள். நான்கு வருடத்திலே ஐந்து வருடத் திட்டத்திற் கண்ட பெரும்பாலானவைகள் பூர்த்தியாகி விட்டதால் திட்டத்தை அதிகப்படுத்தி வேலை செய்தனர். இதன் விபரமெல்லாம் அரசாட்சியாரால் வெளியிடப் பட்டிருக்கும் சோவியத் ஆட்சியின் பொருளாதார நிலை என்னும் நூலில் விரிவாய்க் காணலாம். இத்திட்டத்தின் வெற்றியைக் கண்டு இத்தகைய திட்டங்களை ஏற்படுத்தி தாங்களும் வேலை செய்யலாம் என்பது பற்றி பற்பல அரசாங்கங்களும் யோசித்து வருகின்றன.

ஒவ்வொரு நாடும் இத்தகைய திட்டம் போட்டு வேலை ஆரம்பித்தால் உலகிலே தேவைக்கு அதிகமான பொருள் உற்பத்தியாகி, உற்பத்தியான பொருள்கள் விலையாகாமல் பலவிதத் தொல்லைகள் ஏற்படுவது

நிட்சயம். இதையே ரஷியாவும் எதிர்பார்க்கின்றது. தேவைக்கு அதிகமான பொருள் உற்பத்தி செய்ய மனிதனுக்கு சக்தி இருக்குமானால் பாடுபட்டு உழைக்கும் தொழிலாளி அரை வயிற்றிற்கும் சோறு கிடையாது தவிப்பதன் காரணமென்ன என்பதை ஏழைமக்கள் நினைக்க முற்படுவர். அப்பொழுது தான் முதலாளிகளும், முதலாளித்துவ அரசாங்கங்களும் தங்களை எப்படி வஞ்சித்து ஏழைகள் பட்டினியினால் தியங்கும்படி செய்கிறார்கள் என்பதின் உண்மை வெள்ளிடை மலையெனத் துலங்கும்.

## ருஷிய சமுதாய அமைப்பு

உலகத்திலே இன்று நிகழ்ந்து வரும் முறைகளென்ன? கோடிக்கணக்கான மக்கள் தினசரி 8 மணிநேரம், 10 மணிநேரம் வேலைசெய்து வருகின்றார்கள். இதன் பலனை முதலாளி வர்க்கத்தினர் அனுபவித்து வருகின்றனர். இதனால் பெறும் பொருளை என்ன செய்வதென்று முதலாளிகள் அறியாது மனிதனுக்கு அவசியமில்லாத பல தேவைகளை உண்டாக்கிக்கொண்டு வருகின்றார்கள். உதாரணமாக ஒரு மனிதன் ஏறிச் செல்ல ஒரு குதிரை பூட்டிய வண்டி போதுமானது. தன்னிடத்தில் ஏராளமான பணமிருக்கிறது என்ற திமிறினால் அதே வண்டியில் 2 குதிரை, 4 குதிரை, 6 குதிரை பூட்டி யோடும் படியான வண்டியைச் செய்து அதற்கென்று பல மனிதர்களை குறைந்த சம்பளத்தில் வேலையாளாக வைத்துக் கொள்கிறான். உண்மை யான உணவுப் பொருளை உண்டாக்கவேண்டிய பல மனிதர்களை தனக்காக உபயோகித்துக் கொள்கிறான். இவன் தன் அவசியத்திற்கு மேற்பட்ட குதிரை களை உபயோகித்துக் கொள்வதால் குதிரை விலை அதிகமாய் விடுகிறது. இவன் பணக்காரனாவதற்கு உழைத்து உழைத்து தன் உடலைக் கெடுத்து, ஒண்ட இடமின்றி தெருவில் கூடுதலால் கஷ்டப்பட்டுக்கொண்டு படுத்துறங்கும் தொழிலாளி குதிரை வாங்கப் பணமில்லாது மாடு போல் தனது வேலைகளுக்கு தனது வண்டியைத் தானே இழுக்கவேண்டியதிருக்கிறது. பணக்காரன் வண்டியில் பூட்டிய தேவைக்கு அதிகமான குதிரை ஒன்றை இந்த வண்டியில் பூட்டினால் தொழிலாளிக்கு எவ்வளவு உதவியாயிருக்கும். இதன் நுண் பொருளை ஆய்ந்துதான் ரஷ்ய சமதர்மம் ஆட்சி அமைக்கப் பட்டிருக்கிறது.

## பொதுவுடமைத் தத்துவம்

உலகிலேயே உற்பத்தி செய்யும் செல்வத்திலே உற்பத்தி செய்துவரும் தொழிலாளிக்கு சரிசமமான பங்கு கிடைத்திருந்தால் உலகிலே இன்று காணக்கிடக்கும் பொருளாதார நெருக்கடியும் வேலையில்லாத் திண்டாட்டமும் உண்டாயிராதென்பதே பொது உடமை இயக்கத்தினரின் எண்ணம்.

ரஷிய பொது உடமை முறை உலகிலுள்ள ஏனைய நாடுகளும் பின்பற்றி தொழில் உற்பத்தியை அதிகப் படுத்தினால் தொழிலாளியினுடைய உண்மையாண நிலை வெளிப்பட்டுவிடும். உழைப்பதற்கென்று ஒரு வகுப்பும் அதன் பலனை அனுபவிப்பவர் என்றே மற்றொரு வகுப்புமின்றி எல்லோரும் உழைக்க வேண்டுமென்று எல்லா அரசாட்சியாரும் சட்டம் செய்து விட்டால் ஒவ்வொரு மனிதனும் ஒரு நாளைக்கு 1 மணி நேரம் உழைத்து விட்டு உலகிலே தன் உணவிற்கு வேண்டியதைச் சம்பாதித்துக் கொண்டு இன்பமாய் அமைதியோடு வாழமுடியும்.

## பொதுவுடமை என்றால் என்ன?

"எல்லா உயிர்ப் பிராணிகளுக்கும் பொதுவாகவுள்ள இந்த உணவுப் பிரச்சினை தீர்ந்து விட்டால் மக்கள் தங்களிடமுள்ள மனிஷீகத் தன்மையை விருத்தி செய்து கொள்ளமுடியும். பொதுவுடமையின் நோக்கமும் இதுவேயாகும். வருமானத்தை உழைப்பாளிகள் சமமாகப் பங்கிட்டுக் கொள்வதென்பதே இதன் பொருள். வயிற்றுப் பசிக்கு உணவுதேடுங் காலமும் தூங்கும் நேரமும் தவிர மீதமுள்ள நேரம் தன் வயிற்றுக்கும் பிறருக்கும் கட்டுப்படாது சுதந்திரமாய் வாழுங்காலம். அது மக்களெல்லோருக்கும் சமமாக இருக்க வேண்டு மென்பதே பொதுவுடமையின் உண்மையான தத்துவம்" என்று ஒரிடத்தில் பேராசிரியர் பெர்னாட்ஷா பெரிதும் வியாக்கியானம் செய்துள்ளார்.

இந்நிலை அடைய உலகிலுள்ள எல்லா தேசத் தினரும் பொதுவுடமைக் கொள்கையை ஒப்புக்கொண்டு நடந்தால் தான் முடியும். இந்தக் கருத்துடன் தான் இன்றைய ரஷிய ஆட்சி நடந்து வருகிறது. இந் நன்னோக்கம் வெற்றி பெற ஒவ்வொரு நாட்டிலும் எதேச்சாதிகாரமுள்ள தொழிலாளியின் பிரதிநிதிகளிருக்க வேண்டுமென்பதே சோவியத் நிபுணர்களின் கருத்தாதலின் ரஷியாவில் அவர்களுக்குத் தகுந்த தற்போதைய அரசியல் முறையை நிறுவியுள்ளார்கள்.

## முதலாளிகளென்போர் யார்?

ஐந்து வருடத்தில் தொழிலாளிகளின் உடல் நலம், அறிவு விருத்தி முதலான நலனைப் பெருக்க பெரிதும் திட்டங்கள் ஏற்படுத்தினர். அங்குள்ள உற்பத்திப் பொருள்களை எவ்விதத் தடங்கலுமின்றி சர்க்காரே பிற நாடுகளில் கொண்டு விற்பனை செய்தனர். சில தொழிலில் லாபமும், சில தொழிலில் நஷ்டமும் ஏற்பட்டாலும் சர்க்காரே முதலாளியாக இருப்ப தால் நஷ்டத்தை லாபம் வரக்கூடிய பொருளிலிருந்து ஈடு செய்து கொள்ள முடிகிறது. உற்பத்தி செலவுகளை யெல்லாம் கழித்து 100க்கு 10 அல்லது 20 பாகம் தொழிலாளிகளின் அபிவிருத்திக்காகச் செலவழித்து

வருகிறார்கள். ஒவ்வொரு தொழிற்சாலைகளிலும் தொழிலாளர்களுக்கு விளையாடுமிடம், வாசகசாலை, குழந்தைகளுக்குப்பால் கொடுக்கவும், தாலாட்ட அறைகளும், தொட்டிலும், இன்னும் பல வசதிகளும் செய்யப்பட்டிருப்பதோடு, ஆகாய வசனி (ரேடியோ) மூலம் சோவியத் ஆட்சி முறையைப் பற்றி பிரசங்கங்கள் மூலம் அறிவு விருத்தி செய்யப்பட்டு வருகிறது.

சோவியத் ஆட்சியினர் எதையும் ஆராய்ந்தே செய்வர். ஆய்ந்து நலமென்று கண்டால் இன்னதை இவ்வளவு காலத்திற்குள் செய்து முடிக்க வேண்டு மென்று திட்டம் போட்டுக் கொள்ளுகிறார்கள். உடனே அமலுக்குக் கொண்டு வருகிறார்கள். உற்பத்தி அதிகப் படுத்துவதென்றால் அதன் நோக்கத்தை தொழிலாளர்க்கு விளக்கிக் கூறி அவர்களுக்கு உற்சாகமூட்டி எளிதில் தங்கள் நோக்கத்தில் வெற்றியடைந்து கொள்கிறார்கள்.

**விவசாயம்**

ரஷியாவில் எல்லா நிலையங்களையும் சர்க்கார் ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டு மக்களை ஓர் இயந்திரம் போல் பாவித்து வருகிறார்கள் என்பது தவறு. விவசாயத்திற்கு லாயக்கான பூமிகளில் சில பாகம் சர்க்கார் பண்ணைகள்; சில பாகம் பல குடியானவர்கள் கூட்டுறவாகப் பயிரிடும் பண்ணைகள்; மற்றொரு பாகம் தனி விவசாயிகள் தனியாகப் பயிரிடும் நிலம் எனப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இயந்திரக்கலப்பைகளை உபயோகித்தால் தான் அதிகமான விளைவை எதிர்பார்க்க முடியும். சிறு சிறு நிலங்களாக இருந்தால் இயந்திரக் கலப்பையால் உழ முடியாது. எனவே தான் சர்க்கார் பொருளாதாரத்திற்கு அவசியமான இயற்கை மூலங்களும் மூலதனமும் பொதுவாக இருக்கவேண்டு மென்று விதி ஏற்படுத்தியுள்ளார்கள். ஆகவே தான் ஐந்து ஆண்டுத் திட்டம் (1928-1933) ஏற்படுத்தி அதற்குள் நிலத்தில் 100க்கு 20 பாகத்தை கூட்டுறவு விவசாயமாக்கி சிறுசிறு வயல்களாக ஏற்படுத்தியிருந்த வரப்புகளை யெல்லாம் வெட்டி ஒரே சமமான பாகமாக்கி இயந்திர விவசாயத்திற்கு ஏற்ற விதமாக்கி விடவேண்டுமென்று திட்டம் போட்டனர். 4 ஆண்டுகளுக்குள் 100க்கு 60 பாகம் கூட்டுறவு விவசாயத்துக்கு முன் வந்துவிட்டது. விவசாயம் விருத்தியாக வேண்டும், விருத்தியாக வேண்டும் எனக் கூவும் வீண் வெற்றுரைகளை அங்கு காணமுடியாது. இன்ன ஜில்லாவில் இவ்வளவு கோதுமை களை விளைவிக்க வேண்டும் என்று சர்க்கார் திட்டம் போடுவார்கள். உடனே அதை அமுலுக்கு கொண்டு வர ஸ்தல சோவியத்துக்கு உத்தரவு கொடுக்கப்படும். அதை உடனே அவர்கள் நடத்த முனைந்து விடுவார்கள். இதன் பயனாக இன்று அங்கு 100க்கு 80பங்கு விவசாயம் சர்க்கார் பண்ணையாக இயந்திரங்களின் மூலம் நடைபெருகிறது. 40,000 இயந்திர விவசாய கலப்பைகள் அங்கு வேலை செய்து வருகின்றன.

ரஷியா, விவசாயத்தைப் போல் கைத்தொழிலையும் அபிவிருத்தி செய்ய முனைந்து வேலைசெய்து விருத்தி செய்துவருகிறது. அதன் கைத்தொழில் அபிவிருத்தியை கீழ்கண்ட புள்ளிவிபரங்களால் நன்கறியலாம்.

தண்டவாளத்தில் ஓடும் கார்கள் 12,000 என்று திட்டம் போட்டார்கள். 1931க்குள்ளாக 20,000 தயாராகி விட்டன. 1933க்குள் 825 ரயில் வண்டிகள் செய்ய வேண்டுமென்று திட்டம் போட்டார்கள். 1932 க்குள் 812 வண்டிகள் செய்யப்பட்டு விட்டன. 1913ம் வருடத்தில் 170 லட்சம் ஜோடுகள் தயாராயின. 1931ல் 768 லட்சம். இது திட்டத்திலிருந்து 167 லட்சம் அதிகம். 1913ல் 94,000 டன் சோப் உற்பத்தி செய்து விட்டனர். 1931ல் 1,89,000 டன் உற்பத்தி செய்து விட்டனர்.

**முன்னேற்றம்**

உலகத்திலுள்ள பெரிய இரும்புத் தொழிற்சாலை களில் ஒன்று ரஷியாவிலிருக்கிறது. அதன் பிரதம அதிகாரியாய் ஒரு இந்தியரே இருந்து வருகிறார். இங்கிலாந்தில் இரும்பு உற்பத்தி 40 லட்சம் டன்னி லிருந்து 95 லட்சம் டன் ஆக 35 வருடமாயிற்று. அமெரிக்காவில் இத்தகைய முன்னேற்றம் அடைய 8 வருடமாயிற்று. ஜெர்மனியில் 10 வருடம் சென்றது. ஆனால் ரஷியா 1 வருடத்தில் இந்த முன்னேற்றத்தை யடைந்து விட்டது. நிலக்கரியில் 530 லட்சம் டன் உற்பத்தியை செய்யத் திட்டம் போட்டு வேலை ஆரம்பித்தது. வெற்றியும் கண்டுவிட்டது. ரஷியாவில் 1930ம் ஆண்டில் புகை ரதங்கள் (மோட்டார்கள்) செய்யப்படவில்லை. 8550 கார்களுக்குத் தனி பாகங்கள் பொருத்தி வண்டியாகச் செய்யப்பட்டன. இப்பொழுது நாள் ஒன்றிற்கு 65 மோட்டார்கள் ரஷியாவிலே உற்பத்தி செய்யப்படுகிறது.

விவசாயத்திலே 100க்கு 20 பாகம் தவிர மற்றவைகள் சர்க்காருக்கே உரியது. சர்க்காரைத் தவிர தனி மனிதர்கள் ஒருவருக்கொருவர் கடன் கொடுத்து வாங்கினாலும், வியாபாரஞ் செய்தாலும் கிரிமினல் குற்றமாக ரஷியாவில் கருதப்படுகிறது.

எண்ணெய் உற்பத்தி செய்யும் தேசங்களில் ரஷியா இரண்டாவது ஸ்தானத்தையும் இயந்திர உற்பத்தியில் இரண்டாவது இடத்தையும் விவசாய இயந்திரக் கருவிகளில் முதலாவதாகவும் இடம்பெற்று விளங்கு கின்றது.

தங்க உற்பத்தியின் மதிப்பு அவர்கள் திட்டத்திற்கு ஒன்றரை மடங்கு அதிகமாகக் கிடைத்து விட்டது.

**கல்வி**

*1914 ல் 70,00,000 குழந்தைகள் கல்வி பயின்றனர்; 1928 ல் 1,50,00,000 படிக்க வேண்டுமென்றும் 1933ல் 1,70,00,000 படிக்க வேண்டுமென்று திட்டம் போட்டு வேலை செய்து வெற்றிபெற்று விட்டனர்.*

*ரஷியாவில் முதியோர்களுக்கும் கல்வி கற்பிக்கப் படுகிறது. 1928ல் வாசக சாலை 22,000 இருந்தன. 1933 ல் 34,000 ஆக்கி விட்டார்கள். ஊர் ஊராய்க் கொண்டுபோகும் லைபரெரிகள் 40,000-ஏற்படுத்தி விட்டனர். ரேடியோவின் மூலம் பலவிடங்களில் கல்வி கற்பிக்கப்படுகிறது. 1928ல் 3,50,000 ஆகாயவசனிகள் (ரேடியோக்கள்) இருந்தன. 8,250 சினிமா நிலையங் களிருந்ததை இப்பொழுது 50,000 மாக அதிகப்படுத்தப் போகின்றார்கள்.*

*ரஷியாவின் இத்தகைய வெற்றிக்கு முக்கிய காரணம் தாங்கள் செய்யப் போகும் காரியத்தை முதலில் திட்டமிட்டுக் கொண்டு அதில் தொழிலாளருக்கு போதிய ஊக்கமும் கொடுக்கும்படி தங்கள் நோக்கத்தைக் கூறி அவர்களுக்கு உற்சாகமாய் விடுவதால் தொழிலாளி கட்கு என்ன கஷ்ட நஷ்டம் போதிலும் ஊக்கங் குன்றாது வேலையையே கருத்தாகக் கொண்டு வேலை செய்து வருகின்றனர்.*

**இந்திய நாடு**

*பிற நாடுகள் இத்தகைய நோக்கங்களை கையாண்டு திட்டத்தைக் கண்டு வெற்றியடைந்து கொண்டு போகும் பொழுது இந்தியா வாளாவிருக்குமேயானால் சீக்கிரத்தில் பொருளாதார நெருக்கடியென்னும் சூழலில் பட்டு அதோ கதியாய் விடுமென்பது நிட்சயம்.*

*சில மாதங்களுக்கு முன் ரஷியா தோழர் ஒருவர் கவி. ரவிந்தரநாத் தாகூருக்கு நிருபம் ஒன்று எழுதி யிருந்தாராம். அதில் சோவியத் ஆட்சியில் தொழில் முன்னேற்றமடையக் காரணம் என்னவென்று கருது கிறீர்கள்? உங்கள் தேசம் அத்தகைய முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாயிருப்பவை எவைகள்? என்று வினாவியிருந்தார். அதற்கு கவி-தாகூர் “தங்கள் நாட்டில் செல்வப் பெருக்கை தனி மனிதர்களிடமிருந்து எல்லாப் பொது மக்களுமடங்கிய சமுதாயத்திற்கு பயன்படுமாறு செய்திருப்பதுதான் உங்கள் ரஷிய நாட்டின் வெற்றிக்கு காரணம் சமுதாய விசயங்களில் முயற்சியற்று எல்லாம் இறைவன் செயலென்றிருப்பதே எங்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாய் இருக்கிறது” என்று பதில் எழுதியிருந்தார்.*

*(தோழர் பெரியார், குடி அரசு - கட்டுரை - 23.07.1933)*

●


# அஞ்சலி



பெரியார் பெருந்தொண்டரும்
தமிழ் மொழிபால் மாளாத
பற்றுகொண்ட பேராசிரியருமான
தமிழறிஞர் மா.நன்னன்
அவர்களின் மறைவுக்கு
‘நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்’
அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது.

பெரியாரிய வழியில் வாழ்ந்து
எழுத்தறிவித்தலில்
‘நன்னன் முறையை’
வடிவமைத்து இறுதி மூச்சு வரை
தமிழ்த் தொண்டாற்றிய
தமிழறிஞரின் தமிழ்ப்பணி
காலந்தோறும் போற்றுதலுக்குரியது.

# நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடுகள்




₹ 300/-




₹ 70/-





₹ 370/-





₹ 195/-




₹ 130/-




₹ 480/-


De Baptismo Infantum.

Oratio I

# தமிழகத்தில் தொடக்ககால அறிவியல் தமிழ் பரப்பிய அமைப்புகள்

டாக்டர் சு. நரேந்திரன்

**த**மிழ் அறிவியல் பரப்புதல் வரலாற்றைத் தமிழ் அச்சு ஊடக வரலாறு மற்றும் இந்தியக் கிறித்தவச் சமய வரலாறு என்ற இரண்டு நிலைகளுடன் இணைத்தே ஆரம்பிக்க வேண்டும். கிறித்தவச் சமயத்தின் வரவு தமிழ் அச்சு ஊடகத்தைத் தோற்றுவித்தது மட்டுமல்லாமல் ஐரோப்பிய அறிவியலைத் தமிழில் எழுதும் கற்பிக்கும் முறையையும் அறிமுகப்படுத்தியது. ஏனெனில் அறிவியல் செய்திகள் பரவுதல் எனும் போது முதன்மையாக அச்சு இயந்திரங்கள் மற்றும் தமிழ் அச்சு, சமூகப் பொருளியல் சூழல், இலக்கிய படைப்பாளிகள் மற்றும் அதற்கான வாசகர்களும் கிறித்தவ சமய நூல்களை அச்சிடத் தொடங்கிய கால கட்டத்திலேயே ஏற்பட்டது. தொடக்கக் காலத்தில் சீர்திருத்த கிறித்தவ மிசனரிகள் வாழ்நாள் முழுவதும் ஒரு கையில் விவிலியத்தையும், மறு கையில் அறிவியலையும் எடுத்துக் கொண்டனர். இவர்களில் அச்சகம் தோன்றிய தொடக்கக்காலத்தில் அறிவியலை வளர்த்தவர்களில் முக்கியமானவர் சீகன்பால்கு. இவர் தரங்கம்பாடியில் எஸ்.பி.சி.கே. சங்கத்தினர் உதவியால் 1712-இல் அச்சகத்தை அமைத்தார். அதன் பிறகு சில அச்சகங்கள் ஆங்கிலேயர்களால் நிறுவப்பட்டது என்றாலும், இக்காலக்கட்டத்தில் தமிழ்நாட்டு மக்களுக்கு அச்சகம் தோற்றுவிக்கும் வாய்ப்பு இல்லாமல், தமிழர்கள் தாமாகவே நூல்கள் அச்சிட்டு வெளியிடத் தடையும் இருந்தது. இது தவிர இந்திய மொழிகளில் எது எழுதப்பட்டாலும், அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்ய வேண்டும் என்ற சட்டத்தையும் ஆங்கிலேயர் உருவாக்கி இருந்தனர். 1835-இல் இதற்கு ஒரு விடியலாக, தமிழர்களுக்கு அச்சுக்கூடம் நடத்தக் கூடாத உத்தரவு நீக்கப்பட்டதன் விளைவாகப் பல அச்சுக்கூடங்கள் தமிழகத்தில் சென்னை, நெய்யூர் போன்ற நகரங்களில் பரவலாகத் தோன்றின. தொழிற் புரட்சியைத் தொடர்ந்து உலக அளவில் நிகழ்ந்த மாற்றங்கள் தமிழகத்தில் ஐரோப்பியர் வருகைக்குப் பின் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தின. இதில் முக்கியமானது கல்வி பொதுமையாக்கப்

பட்டது ஆகும். தமிழகத்தில் அச்சுக்கூடங்கள் தொடங்கப்பட்டதன் தொடர்ச்சியாக அறிவியல் வாசகர்கள் பல சமூகத்தினரிடையே உருவாயினர். இதன் காரணமாக அறிவியலைப் பரப்பப் பல யுத்திகள் கையாளப்பட்டன.

### ஐரோப்பிய மிசனரிகளின் பணி :

கிருத்தவ அறிவியல் நூல்களைப் பற்றி ஆராய வேண்டுமெனில் 1818-ஆம் ஆண்டு வெளியிடப் பட்ட, "காலரா" துண்டறிக்கையிலிருந்தே ஆரம் பிக்க வேண்டியதாய் உள்ளது. அச்சு ஊடகத்தில் தமிழில் அறிவியல் என்பதன் அடிப்படையில் நோக்கும் போது நண்பர்களுடன் இரேனியஸ் கிறித்தவ அறிவு பரப்பும் சங்கத்தின் சார்பில் ஆரம்பித்த சென்னை துண்டறிக்கைச் சங்கத்தின் (Madras Christian Tract Society) காலரா குறித்த பிரசுரமே முதல் அறிவியல் பரப்புதலுக்கான துண்டறிக்கை ஆகும். இதனை எழுதி வெளியிட்டு இரேனியஸ் விநியோகித்ததுடன் கிறிஸ்தியான் என்ற வாசகர்களையும் அனுப்பி படித்துக் காட்டவும் செய்தார். இரேனியஸ் சென்னையிலிருந்து 1832-இல் திருநெல்வேலிக்குச் சமய ஊழியம் செய்ய மாற்றப்பட்ட நிலையில் அவ்வூரிலும் காலரா பரவி உயிர்களைக் கொள்ளை கொண்டதை அறிந்து, துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டு, நோய்க்கான தடுப்பு முறையைப் பின்பற்ற மக்களுக்கு உதவினார். இது தூத்துக்குடி, திருவில்லிப்புத்தூர், தென்காசி, சிவகாசி போன்ற ஊர்களில் பரவிய காலராவையும் தடுக்க பெரிதும் உதவியது. இத்துண்டறிக்கைச் சங்கத் தாரின் சார்பில், "நிம்மே" என்பாரின் காலரா குறித்த பிரசுரம் 1844-இல் வெளியாகி, மறுபடியும் பிரசுரிக்கப்பட்டது. கிறித்தவ அறிவைப் பரப்பும் சங்கம் அதன் துண்டறிக்கைச் சங்கத்தைத் தாண்டி 1831-இல் தமிழ் மேகசின் என்ற இதழையும் தொடங்கியது. இவ்விதழ் செய்தித்தாள் வடிவில் வெளிவந்த முதல் இதழாகக் கருதப்படுகிறது. இதில் பொதுச் செய்திகளுடன் அறிவியல் கட்டுரை களும் வெளிவந்துள்ளன.

### கிறித்தவ அபிவிருத்திச் சங்கம் :

கிறித்தவ நிறுவனங்களில் நூல் வெளியீட்டில் முக்கிய இடம் வகிப்பது எஸ்.பி.சி.கே. (Society for Promotion of Christian Knowledge) எனப்படும் கிறித்தவ அறிவு விருத்தி சங்கத்தார் ஆவர். இது லுத்தரன் பிரிவு சீர்திருத்த கிறித்தவ சார்புடைய சங்கம். இதன் முக்கியக் குறிக்கோள் மதமாற்ற மல்ல, மாறாகப் பள்ளிக்கூடங்கள் நடத்துவது, நூல்கள் வெளியிடுவது என்பதுதான் என்றாலும், முக்கியமாக இத்தகைய செயல்பாடுகள் மூலம் மக்களிடம் கிறித்தவ அறிவினை வளர்ப்பது என்பது, அதன் அடிப்படைக் கொள்கை, 1712-இல் கி.அ. சங்கத்தார் துணையுடன் சீகன்பால்கு அச்சகத்தை நிறுவி, பொறையாற்றில் காகித ஆலை, மை தயாரிப்பு எனப்பல துணை நிறுவனங்களையும் நிறுவினார். தொடக்கக் காலத்தில் பிரதிகள் அதிகம் அச்சாகவில்லை என்றாலும், இந்த நூல் களுக்குக் கற்றவர் மத்தியில் வரவேற்பு இருந்தது. மேலும் இந்நூல்கள் இலங்கைக்குக் கூடச் சென்றது. கி.அ. சங்கத்திற்கு 1830-களிலேயே ஐந்திற்கும் மேற்பட்ட அச்சுக்கூடங்கள் உடைமை யாக இருந்தன.

இச்சங்கம் மத நூல்கள், அறிவியல் நூல்கள், பள்ளிக் கல்விக்கான நூல்கள் ஆகியவற்றை வெளி யிட்டது. இச்சங்கத்தின் வழியாக "எரிமலையும், பூமியதிர்ச்சிகளும் சிருஷ்டிப்பின் வேறு அதிசயங் களும்" எனும் நூல் 1894-இல் வெளிவந்தது. இந்துக் களின் பாரம்பரிய புராணக் கருத்துக்களை மறுத்து அறிவியல் ரீதியாகப் புவியியல் நிகழ்வுகளை விளக்க வேண்டும் என்பது இந்நூலின் நோக்கமாகும். இது போலவே "பூகோள சாஸ்திரம் ஜோதி சாஸ்திரம்" என்ற நூலும் (1891) ஜோதிட சாஸ்திரத்தைச் சாடுவதாக எழுதப்பட்டுள்ளது.

### சென்னை பள்ளிப் பாடப்புத்தக சங்கம் (1820) :

ஆரம்ப காலங்களில் மிசனரிகளே நவீன பள்ளிகளைத் தமிழகத்தில் நிறுவினாலும், பிறகு கிழக்கிந்திய கம்பெனியும் பள்ளிகளை நிறுவத் தொடங்கி, பின் பாட நூல்கள் தேவைக்காக, சென்னைப் புத்தகச் சங்கம் (Madras School Book Society) எனும் நிறுவனத்தை 1820-ஆம் ஆண்டு ஆளுநர் மன்றோ ஆதரவினால் நிறுவியது. பாட நூல்களோடு டி.வெங்கடாச்சாரி மொழிபெயர்த்த கணித நூல்களையும் வெளியிட்டுள்ள இச்சங்கம், பிறகு புதிப்பிக்கப்பட்டு வட்டார மொழிச்சங்கமாக மாறியது. இப்புத்துயிர்ப்புக்குக் காரணம், இந்திய சீர்திருத்தவாதிகள் ஆவர்.

நீராவி இயந்திரத்தினை வடிவமைத்த ஜார்ஜ் ஸ்டிவென்ஜன் குறித்து தமிழிலும் மற்றும் நீராவி இயந்திரம் குறித்து தமிழிலும் தெலுங்கிலும் நூல்களை 1868-இல் இச்சங்கம் வெளியிட்டது. இந்நூலின் முதல் பகுதியில் நீராவியைப் பற்றியும், இரண்டாம் பகுதியில் நீராவி இயந்திரம், மற்றும் நீராவிக்கப்பல் பற்றியச் செய்திகளும் கூறப்பட்டு உள்ளன.

ஓர் அறிக்கையின்படி வட்டார மொழி இலக்கியச் சங்கம் சுமார் 30-க்கும் மேற்பட்ட நூல்களை வெளி யிட்டுள்ளது என்பது புலனாகிறது. இச்சங்கம்

ஜனவினோதினி இதழை வெளியிட்டதோடு, அதில் வெளியான சுவையான கட்டுரைகள் மறுபதிப்பு செய்யப்பட்டு விற்பனைக்கு வந்து 1875-இல் 8000-த்திற்கும் மேற்பட்ட பிரதிகள் விற்பனையாகி உள்ளன. வட்டார மொழிச்சங்கம் என்ற சென்னை பாடநூல் நூல் நிறுவனம் முதல் முதலான கிறித்தவ மத நிறுவனம் அல்லாது பொதுப் பொருண்மைகளுக்கான நூல் வெளியீட்டிற்கான நிறுவனம் என்று நினைத்தாலும் இதில் பல நூல்கள் கிறித்தவ பாதிரியார் எழுதிய நூல்களுக்குப் பதிலுரைப்பதாகவே காணப்படுகிறது. 1867-லிருந்து 1900 வரையிலான காலத்தில் வெளியான தமிழ் நூல்களில் அறிவியல் நூல்கள் சரிபாதி மிசனரிகள் எழுதியது. ஆனால் நான்கில் ஒரு பகுதி சென்னை புத்தக சங்கம் வெளியீடு ஆகும். கி.அ. சங்கத்தைப் போன்று இச்சங்கம் "பூகம்பம், எரிமலை இவைகளின் வரலாறு" எனும் நூலினை 1884-ஆம் ஆண்டு வெளியிட்டது. இந்நூலை கி.அ.ச. வெளியிட்ட நூலுடன் பொருத்திப் பார்க்கும் போது அந் நூலின் புராண, பாரம்பரிய கருத்துக்களை மறுதலிப்பதாக அமைந்துள்ளதை அறிய முடிகிறது. இதுபோலவே திருவேங்கட ராமானுஜ ஐயர் 1889-இல் எழுதிய "பூகோள பகோள சாஸ்திரம்" எனும் நூலும் மிசனரிகள் பாரம்பரியக் கலாச்சாரத்யைும் அறிவு வடிவையும் விமர்சிப்பதை எதிர்க்கும் விதமாக, பூகம்பம், எரிமலை இவைகளைப்பற்றி மக்களிடம் உள்ள அச்சத்தை நீக்கும் நோக்குடன் எழுதப்பட்டுள்ளது.

**கிறித்தவ வட்டார மொழிக் கல்விச் சங்கம் :**

இந்தியப்பள்ளி ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கவும், இந்தியாவின் முதன்மை மொழிகளில் கிறித்தவ இலக்கியங்களை வெளியிடுவதையும் குறிக்கோளாகக் கொண்டு இச்சங்கம் தொடங்கப்பட்டது. இதற்கு ஜான்முர்டாக் தலைமைப் பொறுப்பேற்ற பிறகு தென்னிந்திய கிறித்தவ பள்ளிப்பாட நூல் சங்கத்தை (South Indian Christian School Book Society) 1854-இல் உருவாக்கினார்.

இச்சங்கத்தின் அறிக்கையில் "அரசு நிதியுதவியினை எதிர்நோக்கும் கிராமப் பள்ளிகளில் தற்பொழுது பயன்பாட்டிலுள்ள நூல்கள் ஒதுக்கப்பட்டு புவியியல், வரலாறு மற்றும் அறிவியல் நூல்கள் புகுத்தப்படும்" என்று குறிப்பிடப்பட்டு உள்ளது. அவரது அறிவியல் நோக்கைப் பிரதிபலிக்கிறது. 19-ஆம் நூற்றாண்டின், நடுப்பகுதியில் இச்சங்கம் மிகப் பெரிய அச்சு சக்தியாகவும், பிற்பகுதியில் கல்வி குறித்த நூல்கள் வெளியிடுவதில் முதன்மை நிலையையும் வகித்தது. இவைகள் மிசனரிகளின் பள்ளிகளில் படித்த சமூகத்தின் அடித்தட்டு மக்களைச் சென்றடைந்தன. இப்பள்ளிகள் பெரும்பாலும் தாய்மொழிக் கல்வியையே ஆதரித்தன. இச்சங்க வெளியீட்டு நூல்கள் ஏனையோர் நடத்தும் பள்ளிகளிலும் பயன்படுத்தப்பட்டது.

பள்ளி நூல்களைத் தவிர பொது அறிவியல் நூல்களையும் இச்சங்கம் வெளியிட்டது. எ.கா. : 1872-இல் சாற்ஜென்றையர் (Sargent) "இயற்பியல் குறித்த நூல் தத்துவ சாஸ்திரம் விளங்கிய பல வகைத் தோற்றங்களுடைய பிரகிருதி பிரமாணங்களை விளக்கிய நூல்." இது டாக்டர் ஆர்னப் என்பவர் ஆங்கில மொழியில் எழுதிய நூல்களிலிருந்து செய்திகளைத் தொகுத்து தமிழர்களுக்கு விளங்கும்படி தெளிவாக எழுதப்பட்டுள்ளது.

இந்த நிறுவனம் ஒரு கால கட்டத்தில் சரியாக நடைபெறாத காரணத்தால் 1857 முதல் 1859 வரையான காலத்தில் வட்டார மொழிச் சங்கம் (Vernacular Society) என்பதை முர்டாக் நிறுவினார். பிறகு இதனையே நாளடைவில் (1891) கிறித்தவ இலக்கிய சங்கம் (CLS) என்று பெயர் மாற்றம் செய்தார். இது இன்று வரை தொடர்ந்து பல நூறு நூல்களை வெளியிட்டு சிறப்பாகப் பணியாற்றி வருகிறது.

**அறிவை பரவச் செய்யும் சபை :**

இலக்கிய பதிப்பியலில் உ.வே.சாமினாதையர் வரலாறு படைத்ததைப் போல் தமிழ் இதழியல் துறையில் விவேக வசிந்தாமணி இதழின் மூலம் அறிவைப் பரப்பச் செய்யும் நோக்கத்தில் வெற்றி கண்டவர் சி.வி. சாமிநாதையர். 1892-ஆம் ஆண்டு திருவல்லிக்கேணியில் தொடங்கிய இவ்விதழ் சி.வி. சாமிநாத ஐய்யரால் 1892-இல் தொடங்கப்பட்ட "அறிவை பரவச் செய்யும் சபை" என்ற அமைப்பின் சார்பில் வெளிவந்தது. "நாட்டுப் புறங்களில் பத்திரிகைகளைப் பரவச்செய்து அது மூலமாக ஜனங்களுக்குப் படிப்பில் பிரியமுண்டாகும்படி செய்ய வேண்டும் என்பதும் கிராமாந்தரங்களிலுள்ள ஜனங்கள் படிப்பதில் பிரியம் வைத்துப் பத்திரிகைகளையும், சிறு புஸ்தகங்களையும் வாசிக்க ஆவல் கொண்ட பின் அவைகள் சுலபமான விலைக்குக் கிடைக்கும்படி செய்து பத்திரிக்கைகளாலும் சிறு புஸ்தகங்களாலும் ஜனங்களுக்கு அறிவூட்டும்படி, விவேகத்தை விசாரிக்கச் செய்து பொது விஷயங்களில் அவர்களுக்கு அக்கரையுண்டு பண்ண வேண்டும் என்பதும் இன்றும் பல விதத்திலும் கிராமாந்திர ஜனங்கள் நிலைமையை அவர்கள் சொந்த முயற்சியால் விருத்திக்குக் கொண்டுவர என்ன, என்ன வழி வகைகளுண்டோ

அவைகளையெல்லாம் தேட வேண்டும்'' என்ற பிரகடனத்துடனேதான் அறிவை பரவச் செய்யும் சபையினால் விவேக சிந்தாமணி இதழ் தொடங்கப் பட்டது.

**கட்டுரைகளைப் படித்து ஒப்புதல் அளிக்கக்குழு :**

விவேக சிந்தாமணி சுகாதாரம், இயற்பியில், வேதியல், தாவரயியல், தொடர்பான கட்டுரைகள் பலவற்றை வெளியிட்டுள்ளது. இவ்விதழில் வெளியான அறிவியல் இலக்கியக் கட்டுரைகள் 1896-ஆம் ஆண்டு முதல் “விவேக சிந்தாமணி பிரசுரங்கள்” என்ற தலைப்பில் அரசு உதவியுடன் வெளியிடப் பட்டுள்ளன. சுகாதாரம் தொடர்பான கருத்துக் களை மக்களிடம் கொண்டு செல்வதை விரிவு படுத்த விரும்பி 1899-ஆம் ஆண்டு அறிவு பரப்பு வதற்கான சபையின் ஆலோசனைக் குழுவில் அப் போதைய ஸானெடரி கமிஷனர், டாக்டர்கள், வித்தியா இலாக்கா தலைவர் போன்றோர் இடம் பெற்றுள்ளனர். இவ்வாலோசனைக்குழு பொது சுகாதாரம் குறித்த கட்டுரைகளைப் படித்து ஒப்புதல் அளித்த பின்னரே வெளியிடப்பட்டு உள்ளன.

**சபைக்குக் கிளைகள் :**

விவேக சிந்தாமணியின் வாசகர்கள் இந்தச் சபையின் கிளைகளை, தமிழகம் முழுவதும் தொடங்கி யுள்ளனர். அங்கு இவ்விதழில் வெளி வரும் கட்டுரைகள் பொது மக்களுக்கும், சிறுவர் களுக்கும் வாசித்துக் காட்டப்பட்டுள்ளன. கட்டுரை களை வாசிக்கும்போது புரியாத இடங்களுக்குக் கிளை உறுப்பினர்கள் விளக்கம் அளித்துள்ளனர். இக்கூட்டங்களுக்கு வரும் சிறுவர்களிடம் வாசித்துக் காட்டப்படும் செய்திகளின் அடிப்படையில் கேள்விகள் கேட்கப்பட்டுச் சிறு பரிசுகள் உள்ளூர் கிளைச் சங்கங்களால் வழங்கப்பட்டுள்ளன. கிளைச் சங்கங்கள் தங்களின் பணிகளைப் பற்றிய அறிக்கைகளை அனுப்பி உள்ளனர். இவ்வறிக்கை களை விவேக சிந்தாமணி வெளியிட்டுள்ளது. உள்ளூர் சங்கங்களின் அறிக்கைகளில் சுகாதாரம் பற்றிய உரைகள் அதிக எண்ணிக்கையில் இடம் பெற்று உள்ளன. இந்த அறிவைப் பரப்பும் சபைக்கு முன்பே கூட வெளியீடுகளும் வெளியீட்டு நிறுவனங்களும் இருந்தது எனினும் இச்சபையே முதன் முதலில் கிளைகளைத் தோன்றுவித்து இயக்கமாக இயங்கியது. இந்த அமைப்பின் நோக்கம் அக்காலக்கட்டத்தில் அறிவு பரப்புதலுக்கு எடுத்துக் கொண்ட மிகப் பெரிய செயல் என்றால் மிகையில்லை.

**சபையின் நோக்கங்கள் :**

1. உபயோகமான விஷயங்களைப் பற்றி ஜனங்களுக்கு அறிவுண்டாகும்படி செய்வது.
2. தற்காலம் ஆங்கிலவித்தை பரவி வருவதால் கற்றவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பிரிவுண்டாகி பேதம் அதிகரித்து வரு வதைத் தடுத்து; ஒருவர் கற்ற கல்வியின் சாரத்தை மற்றவன் அறியப் புகட்டு வதற்கு உற்றதோர் உதவியாக விருந்து இருதாரருக்கும் ஒரு மனப்பட்டு வாழும் படி செய்ய வேண்டுமென்பது.
3. இந்நோக்கங்களைக் கொண்டுழைக்கும் இதர சங்கத்தாரோடு ஒத்துழைக்க வேண்டு மென்பது.
4. பொது அறிவை மக்களிடம் பரப்பத் தமிழில் இதழ் நடத்துவது, சங்கத்தின் கருத்துக்களைக் கிராமப்புறங்களுக்கும், நகர் புறங்களுக்கும் எடுத்துச் செல்ல உதவியாளர்களைக் கொண்ட அமைப்பைத் தோற்றுவிப்பது.
5. சங்கத்தின் கருத்துக்களைப் பரப்ப குறிப் பிட்டத் துறை சார்ந்தவர்களை பயன் படுத்திக் கொள்வது. கிராம அமைப்புகள் வழி. கிராம, நகர் புறங்களில் படிப்பறை களை நிறுவுவது, விரிவுபடுத்துவது, ஏற் பாடு செய்வது போன்றவைகள் ஆகும்.

அந்நாளில் புகழ்மிக்க தமிழ் அறிஞர்கள் வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரி, பி.ஆர். ராஜம் அய்யர், அ. மாதவைய்யா எனப் பலரும் விவேக சிந்தாமணியோடு தொடர்புடையவராகத் திகழ்ந்தனர். இவ்விதழ் தொடர்ந்து நாட்டுப்புறக் கல்விக்காவும், நகர்புற இலக்கியத்திற்காகவும் வாழ்வியல் சார்ந்த ஆன்மீகத்திற்காகவும் முழுமை யாகத் தன்னை அர்பணித்துக் கொண்டு அறிவு பரப்பும் சபை மூலம் தமிழர்களின் அறிவியலை மேம்படுத்தியது என்பதில் சந்தேகமில்லை.

**தமிழர் கல்விச்சங்கம் :**

தமிழர் நேசன் திங்களிதழாக மெட்ராஸ் ஸ்கூல் புக் அண்ட் வெர்னாகுலர் லிட்டரேச்சர் சொசைட்டியின் சார்பாக இது (1917) தமிழர் கல்விச் சங்கத்தால் வெளியிடப்பட்டது. இது வெளிவந்த முழுமையான அறிவியல் இதழ் என்றாலும், இதில் சில இலக்கியக் கட்டுரைகளும் இடம் பெற்றிருந்தது. ஆனால் தமிழின் முழுமை யான அறிவியல் இதழ் என்று கூறும் அளவுக்கு, அனைத்துப் பக்கங்களிலும் அறிவியல் செய்திகள்

இடம்பெற்று, சென்னையில் அறிவியல் விழிப் புணர்ச்சி வேண்டி வெளிவந்த மாத இதழ் தமிழ் நேசனே ஆகும்.

**ஆங்கிலம் அறிந்தவர்களின் அக்கரை :**

தமிழர் கல்விச்சங்கம், ஆங்கிலத்தில் எழுதி னாலும், பேசினாலும் பெருமை என்று எண்ணியக் காலத்தில், ஆங்கிலம் நன்கறிந்த சிலர் தமிழர் மீது மிகுந்த அக்கரைக்கொண்டு, அவர்கள் மேன்மை யடைய பரந்த கல்வி அறிவுடன் மேனாட்டாரைப் போல் பல துறை அறிவுப்பெற்றுத் திகழ வேண்டும் என்ற சிந்தனையின் விளைவாகவே, "தமிழர் கல்விச் சங்கம்" உருவானது. இச்சங்கத்தில் தீவிரம் காட்டியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் சி.வி.சாமி நாதையர் நடத்திய இதழான விவேக சிந்தா மணியில் "சாவித்திரியின் சரிதை" அல்லது "ஒரு பிரமாணப் பெண்ணின் சுயசரிதை" என்ற விதவைப் பெண் குறித்த சீர்திருத்த நாவலை எழுதி, பிறகு அதன் காரணமாக, சுவாமிநாத அய்யருடன் கருத்து முரண் ஏற்பட்ட அ. மாதவையாவும், இச்சங்கத்தில் தலைவராய் இருந்த ஜஸ்டிஸ் சதாசிவ அய்யரும் ஆவார். இச்சங்கத்தின் முத்திரையுடன் வெளி வந்தது தான் "தமிழர் நேசன்." இச்சங்கத்தின் நோக்கம் "தமிழில் பத்திரிக்கைகள், புஸ்தகங்கள், பிரசங்கங்கள் முதலியவற்றின் மூலமாய் இங்கிலிஸ் தெரியாத தமிழ் நாட்டாருக்குத் தற்காலத்து நவீன அறிவைப் பரவச் செய்வதுதான்."

இக்கருத்து, மேனாட்டில் வளர்ந்து வந்த அறிவியல் தொடர்பான சிந்தனைகளை ஆங்கிலம் அறியாதோரும் ஓரளவே அறிந்தோரும் பெற வேண்டும் என்பதையே தெரிவிக்கிறது எனலாம்.

இந்த நோக்கத்திற்கான காரணம் என்ன என்பதை அக்காலக் கட்டத்தில் படித்த ஆண்கள் மற்றும் ஆங்கிலம் தெரிந்தவர்கள் மிகக் குறைந்த விழுக்காடுகளில் இருந்துள்ளனர் என்பதை மக்கள் கணக்கெடுப்பின்படி நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகின்றது.

| | படித்த ஆண் | | | ஆங்கிலம் தெரிந்தவர் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1901 | 1911 | 1921 | 1901 | 1911 | 1921 |
| பிராமணர் | 73.6 | 71.9 | 71.5 | 17.88 | 22.27 | 28.21 |
| செட்டியார் | 32.0 | 39.1 | 39.5 | 0.15 | 0.98 | 2.34 |
| நாடார் | 15.4 | 18.1 | 20.0 | 0.05 | 0.30 | 0.75 |
| வெள்ளாளர் | 06.9 | 24.6 | 24.2 | 0.14 | 2.12 | 2.37 |
| அகமுடையர் | 14.9 | 20.8 | 20.8 | 0.15 | 0.33 | 0.72 |
| கள்ளர் | 10.9 | 15.7 | 16.3 | 0.13 | 0.21 | 0.38 |
| மறவர் | 10.6 | 13.6 | 13.7 | 0.04 | 0.13 | 0.23 |
| வன்னியர் | 14.8 | 31.7 | 29.8 | 0.04 | 1.12 | 1.22 |

(Source Complied from the Census of India, Madras 1922 XIII Part 1. pp. 128-129)

ஆசிரியர் மாதவையா குழந்தை மணத்தால் விளையும் விதவையர் நிலையையும், சாதிக்கட்டுப் பாடுகளுக்கு அப்பாற்பட்ட கருத்துக்களையும் அவ்வப்போது எழுதி வந்தாலும், சங்கத்தினர் மேல்நாட்டாரின் பல துறை கட்டுரைகளை மொழிபெயர்த்துத் தருவதையே விரும்பினர்.

தமிழர் நேசன் அறிவியல் செய்திகளுக்கே முதன்மை அளித்து வந்ததால், அறிவு சார்ந்தவர் களின் இதழாகத் திகழ்ந்தது. தமிழ் இதழ் வழியே தமிழ் மக்களை நவீன அறிவியலில் தடம் பதிக்கச் செய்த பெருமை இவ்விதழுக்கு உண்டு.

அறிவியலுக்கு மட்டுமின்றித் தமிழ் மொழிக்கும் தமிழர் நேசன் அருங்கொடை நல்கியுள்ளது. தமிழில் கலைச் சொற்களைத் தொகுத்து உயிரியல், வேதியல், இயற்பியல் வெளியிட்டுள்ளாமை யையும் காண முடிகிறது.

**முடிவுரை**

1835-ஆம் ஆண்டு சுதேசிகளுக்கான அச்சாக்கம் என்பது இயலும் என்ற காலக்கட்டத்தில் அறிவியல் எழுத்தாளர்கள் தலை தூக்கினர். இதன் பிறகு 5 ஆண்டுகள் கழித்துத் தனிப்பட்ட எழுத்தாளர்கள் அறிவியல் நூல், இதழ்களை வெளியிடுவதில் ஆர்வம் காட்டியதோடு அவைகள் படிப்பறிவு இல்லாதவர்களுக்குக் கூட அறிவியலை எடுத்துச் செல்ல பல அமைப்புகளால் வழியமைத்தனர். அறிவு ஜீவிகள் ஒரு கட்டத்தில் ஆங்கிலம் நன்கறியாத் தமிழர் மீது மிகுந்த அக்கரை கொண்டு தமிழர் கல்விச் சங்கத்தைத் தொடங்கி ஆங்கிலம் தெரியாத தமிழர்களுக்கு "மெத்த கலைகள் வளருது மேற்கே அந்த மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை" என்ற பாரதியின் கூற்றை ஏற்று அக்கவலையை நீக்க உதவினர்.

"பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால்" என்ற படி இச்சங்கங்களிலிருந்து வெளிவந்த இதழ்கள் மக்களுக்குப் பயன்பட்டன. மக்களின் அறிவு வளர்ச்சியே அவற்றின் நோக்கமாக இருந்தன; தொழிலாக அல்ல; ஆதாய நோக்கமற்ற தொண்டாக இதழ்கள் நடத்தப்பட்டன. பொழுது போக்குக்காக அல்ல; அறிவு ஆக்கத்துக்காக இதழ்கள் உலா வந்தன என்றால் மிகையில்லை. ●



# விரைவில்...

## ராகுல் சாங்கிருத்யாயன் நூல்கள் அனைத்தும் புதிய வடிவமைப்பில்

# என்.சி.பி.எச். மறுபதிப்பாக...

1. இந்துத் தத்துவ இயல்
2. இஸ்லாமியத் தத்துவ இயல்
3. ஐரோப்பியத் தத்துவ இயல்
4. பௌத்தத் தத்துவ இயல்
5. விஞ்ஞான லோகாயத வாதம்
6. ஊர் சுற்றிப் புராணம்
7. சிந்து முதல் கங்கை வரை
8. மனித சமுதாயம்
9. ராகுல்ஜியின் சுயசரிதை (மூன்று பாகங்கள்)
10. வால்கா முதல் கங்கை வரை



# ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளோ

ஆ. கார்த்திகேயன்

அழுகை தொல்காப்பியர் குறிப்பிடும் எண் வகை மெய்ப்பாடுகளுள் ஒன்று. ஏதாவது சோக நிகழ்வைக் கண்டோ அல்லது கேட்டோ தோன்றுவது அழுகையாகும். இழவை நிலைகளனாகக் கொண்டு அழுகை என்னும் மெய்ப்பாடு தோன்றும். நெருக்க மான ஒருவர் இறந்துபட்டால் மனிதர்க்கு அழுகை தோன்றுவது இயல்பன்றோ? தலைவன் போரில் இறந்துபட்டான். அவன் திரும்ப வராததால் பெருந் துயருற்ற மனைவி அவன் வீழ்ந்த இடத்துக்குச் செல்கிறாள். அப்பகுதி புலிகள் நடமாடும் இடம். கணவனின் உடலைக் கண்டு ஓவென்று அரற்றி அழ நினைக்கிறாள். அவள் அழும் சப்தத்தைக் கேட்டுப் புலி வந்து கணவனின் உடலையும் எடுத்துச் சென்று விடுமோ என்று அச்சப்படுகிறாள். அற மில்லாத கூற்றுவன் என்னைப் போலவே பெருந் துயர் உறுக என்று சபிக்கிறாள். என் கையைப் பிடித்து நடப்பாயாக என்று இறந்த உடலை நோக்கிப் புலம்புகிறாள். வன்பரணர் பாடிய இப்புறநானூற்றுப் பாடல் (255) அழுகை என்னும் மெய்ப்பாட்டிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகச் சொல்லலாம்.

இழவில் அழுகை தோன்றலாம். ஆனால் உவகை என்ற மெய்ப்பாடு தோன்றுதல் உலக இயற்கைக்கு மாறானதன்றோ? போர் அறம் என்ற அடிப்படையில் எதிரிகளோடு போரிட்டு மடிதல் மகிழ்ச்சியானதாக அக்காலத்தில் கருதப்பட்டது. இந்த அடிப்படையில் அமைந்த ஓர் அபபிரம்சா பாடலையும் ஒரு புறநானூற்றுப் பாடலையும் ஒப்பிட்டுக் காண்போம். முதலில் அபபிரம்சா பாடலைக் காண்போம். ஒரு தலைவி தலைவனைப் போருக்கு அனுப்பிவிட்டு அவனது வரவுக்காகக் காத்திருக்கிறாள் என்று கூறலாம். அனைவரும் போர் முடிந்து வீடு திரும்பி விட்டனர். இன்னும் தன் தலைவன் மட்டும் வீடு திரும்பியபாடில்லை. தலைவியின் உள்ளத்தில் எதிர்பார்ப்பும் அச்சமும் சூழ்ந்து கண்களில் கலவரம் வெளிப்பட்டது. பக்கத்துத் தோழிமார்களெல்லாம் அவளது

வீட்டுக்கு வந்து ஆறுதலாகச் சூழ்ந்து நின்றனர். கணவன் உயிரோடு இருப்பதற்கு வாய்ப்பில்லை. மனதில் பலவித எண்ணங்கள் சரம்போல தோன்றி மறைந்தன. இறுதியாகத் தலைவன் போர்க் களத்தில் வீரத்துடன் போரிட்டு மடிந்தான் என்ற செய்தி தலைவியின் செவிகளுக்கு எட்டியது. இதனைக் கேட்ட தலைவி, "என் தலைவன் இறந்து விட்டான் என்ற நல்ல செய்தியைச் (யாரோ) சொன்னார்கள். தோழி அவர் புறமுதுகிட்டு உயிரோடு வீட்டுக்குத் திரும்பியிருந்தால் நண்பர் களுக்கு மத்தியில் அவமானப்பட்டிருப்பேன்" என்று கூறுகிறாள்.[1]

'செய் அல்லது செத்துமடி' என்று இக் காலத்தில் கூறுதல் போலவே 'வெற்றி அல்லது வீரமரணம்' என்று அக்காலத்தில் கூறினர். இப் பாடல் தலைவியின் கூற்றாக அமைந்துள்ளது. இளைய மனைவியின் தோற்றம் குறித்தோ, தலை வனுக்கும் தலைவிக்குமான உறவுநிலை குறித்தோ இப்பாடலில் எந்தச் செய்தியும் இடம்பெற வில்லை. அவன் வீட்டுக்கு வராததால் வீரத்தோடு போரிட்டான் என்று அமைதி கொள்கிறாள். அச்செய்தியை நல்ல செய்தியாக அவள் நினைக் கிறாள். உவகை கொள்கிறாள். இதே தொனியில் சற்று வீரியமாக அமைந்துள்ள பாடல் ஒன்றைப் புறநானூற்றில் காணமுடிகிறது. பாடல் தாயின் கூற்றாக அமைந்துள்ளது. அப்பாடல் பின்வருமாறு:

> **நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்**
> **முளரி மருங்கின் முதியோள் சிறுவன்**
> **படையழிந்து மாறின னென்றுபலர் கூற**
> **மண்டமர்க் குடைந்தன னாயி னுண்டவென்**
> **முலையறுத் திடுவென் யானெனச் சினைஇக்**
> **கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்**
> **செங்களம் துழவுவோள் சிதைந்துவே றாகிய**
> **படுமகன் கிடக்கைக் காணுஉ**
> **ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே. (புறம். 278)**

முளரி மருங்கு - தாமரை இலை போன்ற அடிவயிறு, படையழிந்து - படைக்கு அஞ்சி, மாறினன் - புறம் கொடுத்து (இறந்து படுதல்), மண்டமர் - நெருங்கிச் செய்யும் போர், உடைந்தனன் - அஞ்சி இறத்தல், சினைஇ - சினந்து கோபப்பட்டு, படுபிணம் - இறந்து கிடக்கும் பிணங்கள், செங்களம் - இரத்தம் படிந்த போர்க்களம், காணுஉ - கண்டு, ஈன்ற ஞான்று - பெற்றெடுத்த நாள்.

நரம்புகள் வெளியே தெரியுமாறு இளைத்துப் போய் மெல்லிய தோள்களையுடைய தாமரை யிலையின் அடிப்பகுதியைப் போன்ற வயிற்றை யுடைய முதிய தாய் தன்னுடைய மகன் எதிரிகளின் படைக்குப் பயந்து புறமுதுகிட்டுப் போரில் மடிந்தான் என்ற செய்தியைப் பலர் கூறக் கேட்டு மிகவும் வெகுண்டு பலரும் நெருங்கிச் செய்யும் போரில் என் மகன் புறமுதுகிட்டு இறந்திருப் பானேல் அவனுக்குப் பால் தந்த என் மார்பகங் களை அறுத்து விடுவேன் என்று சபதமிடுகிறாள். உடனே கையில் கொண்ட கத்தியோடு போர்க் களம் விரைந்து செல்கிறாள். அங்கே ஒவ்வொரு பிணமாகப் பெயர்த்துப் பெயர்த்துத் துழாவித் தன் மகனைத் தேடுகிறாள். எதிரிகளால் இரு கூறாகச் சிதைக்கப்பட்டு இறந்து கிடக்கும் தன் மகனைக் கண்டு பேருவகை கொள்கிறாள். உவகை எவ்வாறு எனின் தன் மகனைப் பெற்றெடுத்த அன்று அடைந்த மகிழ்ச்சியைவிடப் பெரிதாக விருந்தது.

அபபிரம்சா பாடலை ஒப்பிட இப்பாடல் வீரியத்துடன் வெளிப்பட்டுள்ளது என்று ஏற்கனவே கூறினோம். மென்றோள், மண்டமர், செங்களம், படுபிணம், படுமகன் போன்ற தொகைச் சொற்கள் விரிந்த பொருளைக் கச்சிதமாக உணர்த்துகின்றன. வீரர்களின் இரத்தத்தால் சிவந்த போர்க்களம் 'செங்களம் எனப்படுகிறது. படுபிணம், படுமகன் ஆகிய தொகைகள் பிணமாகிக் கிடக்கின்ற காட்சி யினைச் சுருக்கமாக உணர்த்துகின்றன. இக்காலத்திலும், தெருக்கூத்துகளில் படுகளம் என்ற சொல் பயன் பாட்டில் உள்ளது. தாயின் வருணனை பெரிய அவலத்தை உணர்த்துவதாகவும், கொண்ட வாளொடு போர்க்களம் செல்வது வீரச்சுவையை உணர்த்துவதாகவும் முரண்பட்டு அமைந்துள்ளன. வயதான காலத்தில் தனக்குப் பற்றுக்கோடாக விளங்க வேண்டிய மகனை அதுவும் சிறுவனாக இருக்கின்றவனை இழந்து நிற்கிறாள். தனியே போர்க்களம் சென்று பிணங்களைத் துழாவிக் காணுதல் முதியோளின் துணிவை, மறக்குடி மாண்பை உணர்த்துகின்றது.

புறநானூற்றுப் பாடலில் தாயின் தோற்றம், சிறுவன் படையழிந்து மாறினன் என்ற செய்தி, தாய் வஞ்சினம் கூறுதல், அவன் வாளொடு போர்க் களம் சென்று செங்களம் துழாவுதல், படுமகன் கண்டு பெரிதுவத்தல் ஆகிய கருத்துக்களைக் காண முடிகின்றது. அபபிரம்ச பாடல் சற்று எளிமையாக உள்ளது. இரண்டு பாடல்களையும் தும்பைத் திணையினுள் தானைமறம் என்ற துறைக்குள் அடக்கமுடியுமன்றோ?

---

1. "It is well, O, sister! that my husband was killed in the battle, (for) if he had fled and returned home, I would have been put to shame amongst my friends" (P.67).



# மண்ணின் மணமும் மக்களின் மனமும்

## முனைவர் நா.சுலோசனா

**சி**றுகதை எனக்கு எழுதத் தெரியும் என்றே எனக்குத் தெரியாது என்று வெள்ளந்தியாகப் பேசும் கரிசல் படைப்பாளி மேலாண்மை பொன்னுசாமி அவர்கள். கரிசல் இலக்கியத்திற்கு கி.ரா முன்னத்தி ஏர் என்றால் இவரைப் போன்றவர்கள் அவரைப் பின்பற்றி வந்தவர்கள் எனலாம். வட்டார வழக்குகளின் வழி மண்ணின் மணமும் மக்களின் மனமும் மொழி வளமும் புலப்படுகிறது.. வெள்ளந்தியான மனசும், பாடுபடும் சிந்தனையும், சக மக்களின் மீதான பரிவும் இருந்தால் மட்டுமே அவன் எழுத்தாளனாக பரிணமிக்கமுடியும் என்பதை தனது எழுத்துகளின் மூலம் நிரூபணம் செய்துள்ளார்.

23 சிறுகதைத் தொகுப்புகள் (இருநூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள்), 6 புதினங்கள், 6 குறும் புதினங்கள், ஒரு கட்டுரைத் தொகுப்பு என 36 படைப்பு களைத் தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தந்துள்ளார். தான் எழுத வந்த சூழலைச் சொல்லும்போது இப்படி சொல் கிறார் என்னுடைய பதினொரு வயதில் தமது தந்தையை (செல்லச்சாமி) இழந்த இழப்பின் காரணமாக அவருக்குள் இருந்த வலி. "அப்போது ஐந்தாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்தேன். படிப்பை இடையில் நிறுத்த வேண்டிய சூழல். எல்லோருக்கும் அது சம்பவம் எனக்கோ அது வலி." வயித்துப் பாட்டுக்காகவும் குடும்பச் சுமையைப் போக்கவும் அந்த வயதில் தான் நடத்தி வந்த சிறு பெட்டிக் கடையையும் பார்த்துக்கொண்டு படித்ததில் வகுப்பில் முதல் தர மாணவனாக இருந்துள்ளார். படிப்பை இடையில் நிறுத்தியதால் ஏற்பட்ட காயத்தை மாற்ற அதி தீவிரமாக புத்தகங்களை வாசித்துள்ளார். வாசிப்பு என்பது வெறி; நிரந்தர வாசிப்பு; வயதை மீறிய வாசிப்பு, இறுதித் தேர்வு எழுதும் மாணவனைப் போன்றே வாசிப்பு எனத் தேடி தேடி புத்தகங்களை வாசிப்பதின் வழி தனது வலியை ஆற்றிக்கொண்டவர். வாசிப்பு ஒரு எழுத்தாளனுக்கு

உணர்வைப் போன்றது மட்டுமல்ல. உயிரைப்போன்றது என்கிறார். முழுக்க முழுக்க புத்தகங்களால் கட்டமைக்கப்பட்டவர். புத்தகங்கள் உயிரை வளர்ப்பது, அனுபவங்களை வளர்ப்பது என்கிறார். நூலகங்களே கல்விச்சாலைகளாக்கின மேலாண்மையாரை. வாசிப்பு ஒரு கிராமத்து மனிதனை, கிராமமே உலகம் என வாழ்ந்த மனிதனை உலகமே வியக்கச் செய்தது என்றால் அதற்குக் காரணம் வாசிப்பு என்பதை உணர்த்தியுள்ளார்.

அன்னபாக்கியன், அன்னபாக்கியச் செல்வன், ஆமார் நாட்டான் என்ற புனைபெயர்களில் எழுதியவர். முதன்முதலில் மர்ம நாவல்களையும் பின்பு அகிலன், சாண்டில்யன், மு.வா., ஜெக சிற்பியன் போன்றோரின் வரலாற்று நாவல்களை வாசித்தவர். பின்பு பொது வுடைமைக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு சோவியத் இலக்கியங்களை வாசித்து பொதுவுடைமைச் சித்தாந்தங் களைத் தமது படைப்பாக்கங்களில் கொண்டுபோவதற்கு ஜெயகாந்தனின் ‘யுகசக்தி’ சிறுகதைத் தொகுப்பு உந்து சக்தியாக இருந்திருக்கிறது.

1970, 80 களில் அதிக வாக்கியங்கள், குழப்பமான வாக்கியங்கள் என எழுதியவர் 80களுக்குப் பிறகு எழுத்து நடையில் மாற்றம், எளிய சொல்லாடல்கள், அழகு, எளிமை எனத் தமது மொழிநடையை சிறுகதையின் வளர்ச்சிக்காக மாற்றிகொண்டவர். செம்மலர், சிகரம், விழிப்பு போன்ற பொதுவுடைமைக் கருத்தாக்கம் கொண்ட இதழ்களுக்கு எழுதியவர் தினமணிகதிர், குமுதம், ஆனந்த விகடன், கல்கி போன்ற வெகுஜன பத்திரிகைகளிலும் எழுதினார். வெகுஜன பத்திரிகைகளில் எழுதுவதெல்லாம் இலக்கியம் அல்ல எனும் விமரிசனம் வரும்போது அவரே செல் கிறார். "இலக்கியங்களே பிரச்சாரக் கருவிகள்தான்". "புராணக் கதைகளைப் பொதுமக்களிடையே கொண்டு செல்லும் நோக்கில் இதிகாசங்களும், சைவ, வைண வத்தைக் கொண்டுசெல்லும் நோக்கில் பக்தி இலக்கியங் களும், சமண, பௌத்த மதக் கருத்துக்களைக் கொண்டு செல்லும் நோக்கில் காப்பியங்களும் இருந்தன. கரிசல் மக்களின் வாழ்வியல், சமூக நீதி, சமூகக் கருத்தாக்கம், கிராமத்து மாந்தர்கள், கறுத்த மனிதர்கள், உறங்கும் போதும் கூட வேர்வையுடன் கூடிய மனிதர்களின் விடியலை பரந்து விரிந்து கிடக்கும் மக்களிடம் கொண்டு சேர்க்க எழுதினேன். இது நான், என் எழுதும் எழுத்தின் மீது வைத்திருக்கும் கருத்து நம்பிக்கையாகும். எனது மக்களின் பாடுகளைச் சொல்வதற்கு ஊடகம் தேவைப்பட்டது. அதற்குத் தேவைப்பட்ட ஊடகத்தைப் பயன்படுத்திக் கொள்கிறேன்" என்கிறார். திராவிட இயக்கச் சிந்தனையாளர்களும் தங்களது படைப்புகள் யாவையும் அன்றைய காலகட்டத்தில் திராவிட இயக்கக் கொள்கைகளைப் பரப்பும் பிரச்சாரக் கருவிகளாக இலக்கியத்தைப் பயன்படுத்திக்கொண்டனர். பிரச்சாரத் தொனி இருக்கலாம். பிரச்சார நெடி இருக்கக்கூடாது என்கிறார். நாசிகளை வருடும் வாசம் இருக்கலாம் மனத்தை முகம் சுளிக்கிற நெடியாக இருக்கக்கூடாது இதுவே எனது பிரச்சாரத்தின் நோக்கம் என்கிறார்.

பிழைப்புக்காக தஞ்சாவூர் சென்றார். தான் சந்தித்த விவசாயி, விவசாயம் செழிக்க உரம் வாங்க பணமில்லாமல் பரிசுச் சீட்டைக் கிழித்து கிழித்து இருந்த பணத்தையும் இழந்த மனநிலையை வைத்து கதை எழுதினார். அதுதான் 1972 இல் செம்மலர் இதழில் வெளிவந்த ‘பரிசு’ எனும் சிறுகதை. இதுவே இவர் எழுதிய முதல் சிறுகதையாகும். தமது எண்ணத்தை முதன் முதலில் அச்சாக்கத்தில் பார்த்தவுடன் அவர் கண்ட மகிழ்ச்சி அளவில்லாதது. அதுதான் அவருக்கு நம்மாலும் சிறுகதை எழுத முடியும் என்பதை உணர்த்தி யிருக்கிறது. அதற்குப் பிறகு தொடர்ந்து ஜனரஞ்சக பத்திரிகைகளில் எழுதி வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் பரிசு, பாரத மாநில வங்கியின் இலக்கிய பரிசு, தமிழ்நாடு அரசின் இலக்கிய பரிசு, 1985 இல் ஜனரஞ்சனியில் இளைஞர் சிறுகதைப் போட்டியில் அன்னபாக்கியன் எனும் புனைபெயரில் எழுதிய ‘சுயரூபம்’ எனும் கதை முதல் பரிசு பெற்றது. கல்கி சிறுகதை போட்டி பரிசு, ஆனந்த விகடன் பவழ ஆண்டில் முத்திரை பரிசு இவையாவும் அவர் எழுத்துக்குக் கிடைத்த மரியாதையாகும்.

2007 இல் ‘மின்சாரப் பூ’ என்னும் சிறுகதைத் தொகுப்பிற்கு சாகித்ய அகாதமி பரிசு எனப் பல பரிசு களைப் பெற்றிருக்கிறார். கிராமத்து எழுத்தாளருக்குக் கிடைத்த பெரிய அங்கீகாரம் இந்த விருது கிடைத்தது. இந்த விருதை நான் எதிர்பார்க்கவில்லை. விருதைத் தேர்வு செய்யும் குழுவிற்கு எனது நூல்கள் எதையும் நான் அனுப்பவில்லை, யார் அனுப்பியது என்பதும் எனக்குத் தெரியாது. எனத் தனக்குக் கிடைத்த விருது குறித்துத் தினமணி நிருபரிடம் கூறியுள்ளார். ‘இந்த உயரிய விருது நான் சிறிதும் எதிர்பாராதது. இப்போது கிடைத்து இருப்பது மகிழ்ச்சி. இந்த விருதை கிராமத்து ஒடுக்கப்பட்ட மக்களைப் பற்றிய இலக்கிய வெளிப் பாட்டுக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதுகிறேன்’ என்கிறார்.

கல்கியில் வெளிவந்த ‘ஆகாயச் சிறகுகள்’ கதையில் கம்யூனிஷ்ட் கட்சியைச் சேர்ந்தவராக மாரிச்சாமி எனும் கதாபாத்திரம். ஜனநாயக மாதர் சங்கத் தலைவி பிரேமா எனக் கதாபாத்திரங்களைப் படைத்து தமது பொது வுடைமைச் சித்தாந்தங்களைப் பதிவுசெய்துள்ளார். ஊரைக் கூட்டி சாதி சனம் அழைத்து தாய்மாமன் சீர்செனத்தி யோடு தன் மகளுக்குத் தாவணி போட வேண்டும் எனும் தாயின் கனவு, தன்னுடைய கிழிந்த சேலையை இரண்டாகக் கிழித்து தாவணி போட்டு தீப்பெட்டி ஆலைக்கு அனுப்ப வேண்டிய கட்டாயச் சூழல். குழந்தைத் தொழிலாளர் நிலையைப் போக்கவேண்டும் என்ற சூழலில் எழுதிய கதை. குடும்ப வறுமை ஒரு

பக்கம், விவசாயம் வறண்டு போக, தீப்பெட்டி ஆலையும் பட்டாசு ஆலையுமே வாழ்வாதாரமாகக் கொண்ட மக்களின் நிலைப்பாடு, சிவகாசிக்கும் மேலாண் மறை நாட்டிற்கும் காலை, இரவு என நேரம் பார்த்து தான் பேருந்துகள் இருக்கும் நிலையில் தூர ஊரான மதுரைக்குப் போய் திரும்பும் மக்கள், தங்கள் ஊரின் பேருந்து கணக்குப் பார்த்து வந்துவிடுவார்கள். பேருந்து எடுக்கும் ஓட்டுநர் மதுரை பேருந்து வரும் நேரம் என்றால் அதைப் பார்த்துவிட்டுத்தான் பேருந்தை இயக்குவார். அப்படிப்பட்ட ஓட்டுநரின் மனித நேயத்தையும் கிடைக்கும் போதெல்லாம் மேடைகளில் சொல்ல மறக்காத மாந்த நேயப் படைப்பாளி. அவரது கதைகளை வாசிக்கும் போது ஒவ்வொரு கதாபாத்திரமும் உயிர்பெறுகிறது.

அம்மா அய்யாவுக்கு வாங்கி வந்த தின்பண்டங் களை எடுத்துக் கொடுக்கும் போது தான் வாங்கி வந்த பழங்களையும் சேர்த்துக் கொடுக்கிறாள் பரமு. "அம்மா கேட்பாள் இந்த பழமெல்லாம் யாருக்குமா? எனும் போது மகள் சொல்வாள் ஏன்மா நாமெல்லாம் பழம் சாப்பிடக்கூடாதா". இது பழங்களை வைத்து வர்க்கத்தை அறிந்துகொள்ளச் செய்கிறது. உயிரில் விழுந்து உணர்வில் கலந்த கதைதான் "மௌனக் கேள்வி" எனும் கதை.

"தலைமுடியிலிருந்து வரிவரியாய் கசிந்து நெளிந்து வருகிற வியர்வைக் கோடுகள்" என உழைப்பாளியின் வியர்வையையும், சமுத்திரம் வத்துனாலும் சம்சாரி பிச்சை கேட்டு கையேந்தமாட்டான்." என சம்சாரியின் சுயமரியாதையும், குருசாமி கதாபாத்திரத்தின் வழி வியாபார குணத்தையும் மனித குணத்தையும் வெளிப் படுத்துவது "சீனிக்கொய்யா" கதை. ஆட்டு வியாபாரியின் மொழியைப் பதிவுசெய்வது 'மனித மனசு' எனும் கதை. "எளைச்சு எலும்பான மாடு கசாப்புக் கடைக்கு வருமா? என்று நினைக்கிற மமதை வந்தால் சாதி, சாதி என்று அறுத்துக் கூறுகட்டி வித்துவிட நினைப்பு" நீயானு ஆளு, நானானும் ஆளு. எதுக்கு பட்சம், நீயானு பத்து மாசம், நானானு பத்து மாசம், நாமள்ளாம் சகாக்கள்னு" சொல்ற கேரளத்து மனிதர்களை வைத்து சமத்துவ பண்பாடு, சுயமரியாதை இவற்றை சமுத்திரம் வழியாகக் காட்டியுள்ளார். "உள்ளூர்ல வெலை போகாத வேர்வையை வித்துப் பிழைக்க அயலூர்களுல அலைந்து சீரழியுறதுதான் தலையெழுத்தான பிறகு. மேல்சாதி, கீழ்சாதி என்ன இருக்கு? எல்லாம் வேர்வை சாதிதான்." "மூத்தவுகளை 'அண்ணாச்சி'ம்பாக, இளையவுகளா இருந்தா 'தம்பி'ம்பாக. நீ பேசாம என்னை அண்ணாச்சின்னே கூப்பிடு" "எல்லோரையும் சமத்துவமா அண்ணாச்சினு கூப்புடலாம். நா என்னெ மனுசனா மதிக்கலாம். மனுசனா என்னை மத்தவுக மதிக்கறதை நான் அனுபவிக்கனும்" சீனிப் பலகாரம் கிடைத்த ஏழைப்பிள்ளை மாதிரி ருசித்து, ருசித்து, ஒரு ரசனையுடன் சொன்னான். "சம்முகம் (சண்முகம்) கதாபாத்திரத்தை வைத்து "சித்தாள் சாதி" (2012) எனும் கதையில் சமத்துவத்தைப் படைத்துள்ளார்." மின்சார மோட்டார் மூலம் நீர் பாய்ச்சினால் பயிருக்கு ஆபத்து எனக் கருதும் அப்பாவி பரமசிவம். குடும்பம், வெள்ளாமை இதைத் தவிர சிந்திக்கத் தெரியாத கிராமத்து மனுசனின் கதை தான் "உயிர்நிலம்". வெள்ளாமை இல்லாமல் வறுமைக்குத் தள்ளப் பட்டு வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தமுடியாமல் மானத்துக்குக் கட்டுப்பட்டு உயிரைப்போக்கிய விவசாயி களின் நிலைப்பாட்டைச் சித்திரிக்கிறது. முற்றுகை, அச்சமே நகரம், ஆகாயச் சிறகுகள் போன்ற புதினங் களைப் பெண்ணியத்தைச் சித்திரித்தாலும், குடும்ப அமைப்பு உடைபடாத பெண்ணியத்தையே இவர் ஆதரித்துள்ளார். பொருளாதாரத்தாலும் சமூகத்தாலும் நசுக்கப்பட்ட மக்களின் சுயமரியாதையை மீட்பது,, தொழிலாளி - முதலாளி, ஆண்டான் - அடிமையை மாற்றுவது, நிலமற்றவர்களின் நிலை, விளிம்பு நிலை மாந்தர்கள், விவசாயிகளின் நிலை ஆகியவற்றைத் தமது எண்ணங்களோடு பிரதிபலிக்கச் செய்துள்ளார். ஐந்தாம் வகுப்பைத் தாண்டாதவரின் எழுத்துக்கள் எல்லாம் பட்டத்திற்குரியதாகி பல்கலைக் கழகங்களிலும் கல்லுரிகளிலும் படிக்கிறவர்களுக்கு வாழ்வாதாரமாகத் திகழ்கின்றன. "சிபிகள்" சிறுகதைத் தொகுப்பு, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திலும், "பாட்டையா" சிறுகதை பன்னிரண்டாம் வகுப்பிற்குத் துணைப்பாட மாகவும் வைத்து படைப்பாளிக்குப் பெருமை சேர்த் துள்ளன. சப்போட்டா, நிலக்கடலை, கொய்யா வியாபாரிகளையும், சீமைக்கருவேலம், நாட்டுக் கருவேலம், வேப்பமரங்களும், அவர் பிறந்து வாழ்ந்த தனது கிராமமான மேலாண்மறைநாடு (விருதுநகர் மாவட்டம்) மக்கள் சார்ந்தும் அதைச் சுற்றியுள்ள ஆலங்குளம், திருவேங்கடம், திருவில்லிபுத்தூர், எட்டக்காப்பட்டி, குறிஞ்சாக்குளம், புதுப்பட்டி, என அனைத்து கிராமங்களையும் கதைக்குள் அடக்கியவர். அகத்தி, ஆமணக்கு, பருத்தி, மிளகாய், கம்பு, சீமைப்புல், சவுண்டல் கொழை, போன்றவற்றையும், அருவாள், துரட்டி, கோடாரி போன்ற கருவிகள், ஏர்க்கலப்பை, டிராக்டர், சோத்தாங்கைப் பக்கம் (வலப்பக்கம்) நொட்டாங்கைப் பக்கம் (இடப்பக்கம்) 'கூனை' (நீர்ப்பாசன விவசாயத்திற்குப் பயன்படும் கருவி) இவையெல்லாம் இனிவரும் சந்ததியினருக்கு அகராதி கொண்டும், காட்சிப் படுத்தியும் தான் விளக்கமுடியும். அனால் படைப்பாளி தான் குருதியில் கலந்த உணர்வாக மண்ணின் மணம் மாறாது மக்களின் மனத்தைப் பதிவுசெய்துள்ளார்.

மண்ணின் மணம் மறையவில்லை. மழை பொழியும் போதெல்லாம் மணம் வீசும். அதுபோல அவரின் படைப்புகளை வாசிக்கும் போதெல்லாம் அவரை நினைவுபடுத்திக் கொண்டேயிருக்கும் நெஞ்சின் நினைவலைகள். ●

மதிப்புரை



# புதிய பயணவெளி : கல் மேல் நடந்த காலம்

## இராமசாமி வெங்கடேசன்

பன்மைப் பண்பாட்டுத் தன்மை கொண்ட இந்திய தேசமெங்கும் ஒற்றைப் பண்பாட்டை நிறுவக்கூடிய சூழல் இன்று உருவாகிக்க கொண்டிருக்கிறது. குறிப்பாக தமிழரின் மொழி, பண்பாடு, உணவு, உறவு முறைகள் சார்ந்த பண்பாட்டை மாற்றியமைக்கும் முயற்சியை வெளிப்படையாகவே நடுவண் அரசு செய்து வருகிறது. நம் பண்பாட்டை நம் கண்முன்னரே அழிக்க எண்ணும் எதேச்சகர பாசிச அரசிற்கு நம் வேர்களின் முகத்தைக் காட்டுவது காலத்தின் தேவையாக அமைகிறது. நம் பண்பாட்டின் பழமையை கீழடி காட்டிக்கொண்டிருக்க இன்னும் பண்பாட்டின் அடித்தளத்தின் பழமையை அவர்களுக்குக் காட்டுவது நமது கடமையாகும். சு.தியடோர் பாஸ்கரனின் ‘கல் மேல் நடந்த காலம்’ நூல் தமிழர் பண்பாட்டு வெளியை அச்சமின்றி காட்டியிருக்கிற முக்கியமான நூலாகும்.

கல்வெட்டுக்கள், கோயில் சார்ந்த ஆய்வுகளைப் பலர் முன்னெடுத்துச் சென்றுள்ளனர். வேலூருக்கு அருகிலிருக்கும் மகாதேவமலை, புதுக்கோட்டையருகே ஆளுருட்டு மலை, குற்றாலத்திலுள்ள பரதேசிக்குகை, ஆம்பூருக்கருகில் உள்ள ஆர்மா மலைக்குகை தொல் லெச்சங்கள், தஞ்சாவூர் கோவிலுள்ள புத்த சிற்பங்கள் குறித்த கட்டுரைகளில் புதிய பார்வையைத் தருகிறார். மேலும் தமிழில் அறியப்படாத பர்ப்பொலாவின் நேர் காணலும் திராவிட உறவுமுறை பற்றி வரலாற்றாசிரியர் ட்ரவுட்மனின் பதிவும் தமிழக ஓவியங்கள் குறித்துப் பேசிய தாம்ஸன், தமிழறிஞர் கால்டுவெல், கோட்டையூர் முத்தையா, தேவதேவி பாலாமணி போன்ற ஆளுமைகள் குறித்த அறியப்படாத செய்திகளைத் தருகிறார்.

தியோடர் பாஸ்கரன் வரலாறு குறித்து நமக்கு ஏற்கனவே சொல்லப்பட்ட கற்பிதங்களை உடைக்கிறார். நமக்கு ஏற்கனவே வரலாற்று ஆசிரியர்களால் சொல்லப்பட்ட வரலாற்றைப் பற்றிக் குறிப்பிடும்போது,

“துறவிகள் குகைகளில் வாழ்ந்த இந்த ஆயிரம் ஆண்டு வரலாறு ஆய்வாளர்களின் சரியான கவனத்தைப் பெறவில்லை. குகையை ஆராய்ந்தவர் களும் அவற்றிலுள்ள கல்வெட்டுக்களை மட்டுமே ஆய்விற்கெடுத்துக் கொண்டார்கள். மற்ற தொல் லெச்சங்கள் கவனிக்கப்படவில்லை. துறவிகள் இருந்த குகைகள் பற்றிய முழுமையான ஒரு பட்டியல்கூட நம்மிடம் இல்லை. இந்திய தொல்லியல் ஆராய்ச்சியில் கல்வெட்டுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கும் பாரம்பரியம் ஆங்கில ஆய்வாளர்களால் துவக்கப்பட்டது. இம்முறையில் ஒரு வசதி என்னவென்றால் கள ஆய்வு செய்யாமல் நூலகத்தில் அமர்ந்தே வரலாற்றை எழுதிவிடலாம் அல்லவா” (ப.5)

எனக் குறிப்பிடுகிறார். சித்தன்னவாசல் குறித்த செய்திகளைத் தரும் ஆய்வாளர்கள் அதன் மேலே அமைந்த ஏழடிப்பட்டம் பற்றிப் பேச மறுத்துள்ளனர். தியோடர் அந்தக் குகை குறித்த செய்திகளை விரிவாகவே பதிவு செய்கிறார்.

வேலூர் மாவட்டத்தில் ஆம்பூருக்கருகே உள்ள ஆர்மா மலைக்குகையைப் பற்றி மதராஸ் ராஜதானியி லுள்ள தொல்லெச்சங்களை 1882 இல் ஒரு நூலில் பட்டியலிட்ட வரலாற்றாசிரியர் ராபர்ட் சிவல் (Robert Swell) ஆர்மா மலைக் குகையைப் பற்றி மூன்றே வாக்கியங்களில் ஒரு குறிப்பை எழுதி வைத்தார். இக்குறிப்பைக் கண்டு 1916 இல் இந்த இடத்தைப் பார்வையிட்ட தொல்லியலாளர் ழுவோ துப்ராயில் (Zovueau Dubreuil) இந்த குகையில் சில ஓவியங்கள் தெரிகின்றன. ஆனால் தாமரை இலை தவிர அவை என்னவென்று தெரியவில்லை என்று மட்டும் பதிவிட்டார். 1970 இல் மன்கோமேரி என்ற நண்பரோடு சென்ற தியோடர் இம்மலையைப் பற்றி விரிவாகவே பதிவு செய்கிறார். தமிழகத்தில் சமண சமயம் செழித்தோங்கியிருந்த காலத்தில் தேவ, சிம்ம, சேனா, நந்தி என நான்கு கிளைப் பிரிவுகள் இருந்தன. ஆர்மா மலைக் குகை நிறுவனம் நந்தி கணத்தைச் சேர்ந்தது என்றறிய முடிகின்றது. இந்த நந்தி கணத்திலிருந்துதான் பின்னர் மதுரையில் 10 ஆம் நூற்றாண்டில் தோன்றிய திராவிட சங்கமும் உருவானது (பக்.16-17) என்ற செய்தியைத் தருகிறார். எல்லோரா, சித்தன்ன வாசல், ஆர்மா மலை ஓவியப் பாணிகளில் காணப்படும் ஒற்றுமைகளை எடுத்துக்காட்டும் அதே நேரத்தில் ஆயிரம் ஆண்டுகள் இயங்கிய பாறைக் குடில்கள் பற்றிய ஆய்வுகள் இல்லாததை தெரிவிக்கிறார். இக்குகைகளைப் பற்றிய ஆய்வுகளை முன்னெடுத்துச் செல்வது காலத்தின் தேவை என்ற தியோடரின் கருத்து முக்கியமானதாகும்.

சிவனுக்குப் பல கோயில்களை எழுப்பிய சோழ கற்றளிகளில் நடராஜர் காணப்படுவதைப் போல பல்லவ ஆலயங்களில் கங்காதரரை சிற்ப வடிவில் காண முடிகிறது. கங்காதரர் பற்றிய கட்டுரையில் பல்லவ கங்காதர சிற்பங்களில் நாய் இடம்பெறுவதைச் சுட்டிக்காட்டுகிறார். கங்காதரர் கதையில் நாய் எங்கிருந்து வந்தது என்பதற்கு சான்றில்லை என்று கூறுகிறார். தக்கோலப் போரில் ராஷ்டிரகூட படையை நடத்திச் சென்று வெற்றி கண்ட மன்ரேல என்ற தளபதியின் திறமையை மெச்சி, மன்னன் கிருஷ்ணன் தான் போற்றி வளர்த்து வந்த காளி என்ற நாயைப் பரிசாக அளிக்கிறார். இந்த நாய் காட்டுப்பன்றியோடு நடந்த சண்டையில் காயம் பட்டு இறக்கிறது. இந்த இரண்டு செய்திகளைக் குறிப்பிட்டு சிற்பங்களில் ஓவியங்களில் இடம்பெற்றுள்ள விலங்குகளைப் பற்றிய ஆய்வு மிக முக்கியமானது எனக் குறிப்பிடுகிறார்.

பெண்தெய்வ வழிபாடு குறித்து ஏழு கன்னிமார்கள் கலையும் கதையும் என்ற கட்டுரையில் பேசுகிறார். கர்நாடகா அய்ஹோலேயில் உள்ள சாளுக்கிய குடவரைக் கோயிலிலும் எல்லோராவிலும் தமிழகத்தில் சில பல்லவ ஆலயங்களிலும் சோழர் கோவில்களிலும் சப்தமாதர் என்று குறிப்பிடப்படும் இவர்களுக்கு சிற்றாலயங்கள் எழுப்பப்பட்டன. சிவன் வழிபாட்டை போற்றிய நாயன்மார்கள் காலத்திற்குப் பின் சப்தமாதர் வழிபாடு பின்னடைவு பெற்று பின் மறைந்து போனது. சோழர் காலத்திற்குப் பின் சப்தமாதர்களின் சிற்பங் களையோ ஆலயங்களையோ காண்பது அரிது என்கிறார். தாய்த்தெய்வ வழிபாட்டின் எச்சமாக இருந்த சப்தமாதர் வழிபாடு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு





**கல் மேல் நடந்த காலம்**

சு. தியடோர் பாஸ்கரன்

***வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லி.,***

***41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்.,***

***அம்பத்தூர், சென்னை - 600098***

***₹ 160/-***

காணாமல் போனதன் பின்னணி குறித்த ஆய்வின் தேவையை இக்கட்டுரையில் வலியுறுத்துகிறார்.

தஞ்சாவூர் பெரிய கோயில் இருக்கும் இடம் புத்தக் கோயில் இருந்த இடம் என்ற முக்கியமான செய்தியைத் தருகிறார். தஞ்சை பெரிய கோவிலைப் பற்றிய நூல்களில் சிற்பங்களில் சொல்லப்படும் செய்தி என்னவென்றால் ஒரு புத்த விஹாரம் இருந்த இடத்தில்தான் இன்று பெரிய கோயில் இருக்கின்றது என்பதுதான் என்ற செய்தியைத் தருகிறார். இந்தச் செய்தியை எந்த வரலாற்று ஆசிரியரும் இதுவரை சொல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கல்வெட்டுகள், கோயில்கள் குறித்த வரலாறுகள் நிலவுடைமை சார்ந்த மையமாகவே மாறிப்போய் விட்டது. இது சமயம் சார்ந்த வரலாறுகள் அனைத்தும் அதிகார மையத்தை மையமிட்டே வரையறுக்கப் பட்டுள்ளன. இந்த மையத்தை உடைப்பதற்கான சூழ்நிலை இன்று எழுந்துள்ளது. இந்த உடைப்புக்கான தொடக்கப் புள்ளியாக, புதிய வெளிச்சமாக இந்நூல் அமைந்திருக்கிறது என்பது மிகையில்லை. திருக்குறளை எழுதியவர் யார் என்ற கட்டுரையில் ‘எவ்வாறு பழந் தமிழகத்தில் சமண நூல்கள் வெள்ளத்தில் எறியப்பட்டும் தீக்கிரையாக்கப்பட்டும் அழிக்கப்பட்டனவோ அதே போலவே உரை என்ற பெயரில் திருக்குறளில் பொதிந் திருக்கும் சமணக் கருத்துக்கள் இன்று அழிக்கப் படுகின்றன. புதுப்புது பொருள்கள் கொடுக்கப்பட்டு மைய அடையாளம் சிதைக்கப்படுகின்றது’ என்ற கருத்தினைக் கூறுகிறார். இந்த கருத்து மிக முக்கியமானதாகும். மேலும் திருமலையில் ஜீனாலயத்தைக் கட்டிய சோழ இளவரசு குந்தவி பற்றிய குறிப்புகளைத் தருகிறார்.

இந்நூல் நெடுகிலும் நாம் அறிந்திராத வரலாற்றின் புதிய வெளிச்சங்களை நமக்குத் தருகிறார். முதல் உலகப் போரில் பயன்படுத்திய ஜெர்மனியின் போர்க்கப்பல் எம்டன் குறித்த செய்திகள் பலருக்கும் அறிமுக மில்லாதது. அந்தப் போர்க்கப்பல் சென்னைமீது தாக்குதல் நடத்தியபோது மக்கள் மனநிலை எவ்வாறு இருந்தது என்பனவற்றை இயல்பாக எடுத்துரைக்கிறார். வரலாறு சார்ந்த கட்டுரைகள் என்றாலே சோர்வை ஏற்படுத்தும். ஆனால் இந்நூலில் தியோடர் விறு விறுப்பாக அதேநேரத்தில் எதார்த்தமாக எப்பக்கமும் சாய்வின்றி எழுதுகிறார். தமிழ்ச் சமூகத்தில் நிகழ்த்த வேண்டிய ஆய்வுகள் குறித்து பல கட்டுரைகளில் பேசுகிறார். தியோடர் சொல்லுகிற ஆய்வுகளை நிகழ்த்தினால் புதிய பண்பாட்டு வெளிச்சம் தமிழ்ப் பண்பாட்டில் விழும். ஆய்வுலகில் பண்பாட்டில் மாற்றத்தை விரும்புவோர் கண்டிப்பாக படிக்க வேண்டிய நூல் இது. தமிழர் வரலாற்றுப் பண்பாட்டு வெளியில் இந்நூலுக்கு தனித்த இடம் உண்டு. ●

# அஞ்சலி



தமிழ் இலக்கிய வரலாற்றில்
பின்நவீனத்துவப் படைப்பாளியாக
தனது காத்திரமான
எழுத்துச் செயல்பாடுகளால்
நவீனத் தமிழ் புனைவுலகிற்குச்
செழுமிய பங்காற்றிய
எழுத்தாளர் எம்.ஜி.சுரேஷ்
அவர்களின் மறைவுக்கு
‘நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்’
அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது.



# அதிசயமான மகாவீரன்

பெ. சிதம்பரநாதன்

உலக நாடுகளின் வரலாறுகளில் போராட்டங்கள் ரத்தம் தோய்ந்த பக்கங்களாகவே உள்ளன. 50 ஆண்டு களுக்கு முன்பு 39 வயதில் சுட்டுக் கொல்லப்பட்ட ஒரு ராஜாளிப் பறவையை நினைவுகூர்வது, நமது ஆன்மாவின் பசிக்கு அமுதத்தையே வார்ப்பது போன்றது.

அந்த ராஜாளிப் பறவை யார்? தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான அர்ஜென்டைனாவில் பிறந்த அவர், 'சே' என்று செல்லமாக அழைக்கப்பட்ட சே - குவேரா. அக்காலகட்டத்தில் இவரைப்போல இன்னும் இருவரின் பெயர்கள் கதனை வெடிமருந்து போலக் கெட்டிக்கப்பட்டு 'மா' என ஒருவரும், 'ஹோ' என இன்னொருவரும் அழைக்கப்பட்டனர்.

அவர்களில் சே'யின் வாழ்க்கை, சாகசங்கள் நிறைந்த சரித்திரம். சே யின் சம்பவங்கள் ஒவ்வொன்றையும் கற்பனை செய்து கணநேரம் பார்த்தால் போதும், நமது ரத்த ஓட்டத்தையே உறைந்து போகச் செய்யும், மயிர்க் கூச்செரிய வைக்கும் வீர தீர விளையாட்டுகளாகும்.

மருத்துவ மாணவராக இருந்தபோதே அவர் அர்ஜென்டைனாவில் தமது ஊரை விட்டுவிட்டு வெளியேறினார். 1950-களில் லத்தீன் அமெரிக்க நாடுகளில் நடந்து வந்த மக்கள் எழுச்சிகளைப் பற்றி யெல்லாம் அந்த 17 வயதிலேயே அறிந்து வைத்திருந்தார்.

லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஒன்றான பெரு நாட்டில் வாழ்ந்து வந்த புரட்சிவாதி 'ஹில்டா காடியா அகஸ்டா' மூலமாக மார்க்சீயக் கோட்பாடுகளைக் கற்றதோடு, சோசலிசத்தைப் பரப்பவும் சேகுவேரா தன்னை அர்ப்பணிக்கத் திட்டமிட்டார்.

உருகுவே நாட்டின் பத்திரிகையாளர், சே குவேராவைப் பற்றிக் கூறுகையில், அவரை ஓர் அதிபுத்திசாலி என்றும், அவருக்கு உயர் கணிதத்தில் அபார ஞானம் இருந்தது என்றும், சிக்கல் நிறைந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படிப்பது அவருக்குப் பிடித்திருந்தது என்றும், தொல்லியல் அகழ்வாராய்ச்சியிலும் ஈடுபாடு காட்டினார் என்றும் குறிப்பிட்டுள்ளது ஒருவிதக் குறைவு நவிற்சிதான்.

அவரோ, பிறவி ஆஸ்துமா நோயாளி. ஆனாலும், அதைப் பொருட்படுத்தாமல் புரட்சிகரச் சிந்தனை களிலும் செயல்பாடுகளிலும் உற்சாகமாக ஈடுபட்டவர். மருத்துவக் கல்விக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 17 வயதில் மாணவராக இருந்தபோதே தனது ஊரைவிட்டு வெளியேறினார்.

மருத்துவக் கல்லூரி மாணவனாக இருந்தபோது தன் சொந்த நாடான அர்ஜன்டைனாவில் 4500 கி.மீ. தூரம் எந்திர சைக்கிளில் பயணம் செய்து, தமது கிராமங்களைப் பற்றிய புரிதலைப் பெற்றுள்ளார். அவர் கடைசியாகச் சென்ற கார்டோபா நகரில் "புத்தகத்தில் நமது நாட்டைப் பார்த்தது போதும் - தேசத்தை நேரில் பார்க்கப் புறப்படுவோம் வா" என்று தனது நண்பர் டாக்டர் ஆல்பர்ட்டோவுடன் இணைந்து பயணத்தைத் தொடர்ந்துள்ளார்.

இருவரும் 8 ஆயிரம் கி.மீ. இந்த இரண்டாம் பயணத்தில் மோட்டார் பைக்கில் போனார்கள். அதனைப் பற்றி அவர் எழுதிய நாட்குறிப்பு, 'மோட்டார் சைக்கிள் டயரி' நூல்.

அப்பயணத்தில் ஓர் ஊரில் வீடில்லாத தம்பதிகளைப் பார்க்க நேரிட்டது. அவர்கள் சொன்ன செய்தி, இவர்களை உலுக்கிவிட்டது. போலீஸ்காரர்கள் தங்களைக் கம்யூனிஸ்ட்டுகள் என்று ஊரிலிருந்தே அடித்துத் துரத்தி விட்டனர் என்பது அச்செய்தியாகும். அதிர்ச்சியடைந்த சே குவேரா, முதலாளித்துவத்தின் ஈவு இரக்கமற்ற சுரண்டல் முறையை உணர்ந்தார்.

இதனை எதிர்க்க வேண்டும் என அவருடைய மனம் எரிமலையானது. அங்கிருந்து அதே மோட்டார் சைக்கிளில் சிலி நாட்டின் செம்புச் சுரங்கப் பகுதி களுக்குப் போனார்கள். அச்சுரங்கத் தொழிலாளர்கள் இரக்கமில்லாமல் சுரண்டப்படுவதைக் கண்டு கோப மடைந்தார்கள். சுரங்கத்தின் மேலாளரிடம் அத் தொழிலாளிகளுக்குக் குடிக்கத் தண்ணீர் தருமாறு கேட்டனர். அந்த மேலாளரோ, "எப்போது கொடுப்பது என்று எனக்குத் தெரியும். இப்போது அவர்கள் சாகப் போவதில்லை" என்று பதில் கொடுத்தாராம்.

1952களில் ஆண்டஸ் மலைப்பிரதேசத்தில் நிலவிய கொடிய வறுமை பற்றி சே குவேரா அறிந்தபோதுதான் மகத்தான ஒரு போராட்டத்திற்கு மக்களைத் திரட்டத் திட்டமிட்டார். புரட்சிக்கு முதல் தேவை ஆயுதமே என்பதையும் உணர்ந்தார். பின்னர் அவர்கள் 'பெரு' நாட்டிற்குப் பயணமானார்கள். அங்கு அவர்களின் பைக் விபத்துக்குள்ளாகி, இருவரும் கீழே விழுந்து காய மடைந்தனர். பிறகு, மோட்டார் காரில் அவர்களின் பயணம் தொடர்ந்தது.

பெரு நாட்டில் உள்ள தொழுநோயாளிகள் மையத்திற்குச் சென்று இருவரும் அங்கு சேவை செய்தனர். அந்நோயாளிகள் தந்த மூங்கில் படகில் அமேசான் நதியில் பயணித்து வெனிசுலா நாட்டிற்குச் சென்று சேர்ந்தனர்.

அங்கேயே அம்மக்களுக்குச் சேவை செய்வதற்காக டாக்டர் ஆல்பர்ட்டோ தங்கி விட்டார். அதனால் சே குவேரா மட்டும் அங்கிருந்து மியாமிக்குப் புறப்பட்டார். அங்கிருந்து தனது தாயாருக்கு எழுதிய ஒரு கடிதத்தில், தென் அமெரிக்க நாடுகளில் அடக்குமுறை அதிகமாக இருப்பதாகவும் வீதிகளில் எப்போதும் மக்களை அச் சுறுத்தும் துப்பாக்கி ஏந்திய ராணுவத்தினரின் நட மாட்டங்களைக் கண்டதாகவும் இதற்கு எதிர்வினையாக மக்கள் புரட்சி வெடிக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மியாமியிலிருந்து புறப்பட்டுப் போய் பாதியில் விட்டு வந்த தனது மருத்துவக் கல்வியை முடித்து 1953-இல் டாக்டராக வெளிவந்தார்.

பின்னர் கவுட்டிமாலா நாட்டிற்குப் போனார். அங்கிருந்த அமெரிக்கப் பழ நிறுவனம் ஒன்று, பழங்களைப் போலவே தொழிலாளர்களையும் பிழிந்து வந்ததை அறிந்து, அதற்கு எதிராகப் போராடத் தொடங்கினார்.

அப்போது கவுட்டிமாலா அதிபர், அப்பழ நிறுவனத்தின் நிர்வாகத்தை அடக்கும் நோக்கில்

விவசாய பூமி முழுவதும் அரசுக்குச் சொந்தமென அறிவித்தார். கவுட்டிமாலாவில் சே இருந்தபோது பெரு நாட்டைச் சேர்ந்த பொருளாதார நிபுணர் ஹில்டா என்ற பெண்ணுடன் நேசமும் நெருக்கமும் கொண்டார். இருவரும் திருமணம் செய்து கொண்டனர். அவர்களுக்கு ஒரு மகள். ஆனாலும் விவாகரத்துச் செய்து கொண்டனர்.

பின்னர் அங்கிருந்து சே மெக்சிகோவுக்குப் பயணமானார். மெக்சிகோவில் ஒரு தேநீர்க்கடையில் தான் பிடல் காஸ்ட்ரோ சகோதரர்களைத் தற்செயலாகச் சந்தித்தார். காஸ்ட்ரோ சகோதரர்கள் கியூபா சர்வாதிகாரி பாட்டிஸ்டாவிடமிருந்து தப்பித்து மெக்சிகோவில் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். பாடிஸ்டா சர்வாதிகாரியைத் தூக்கி எறிவதற்கான திட்டத்தைக் காஸ்ட்ரோ சகோதரர்களுடன் சேர்ந்து சே தான் தீட்டினார்.

மெக்சிகோவிலிருந்துதான் கொரில்லாப் போர் முறைப் பயிற்சியை, சே தனது புரட்சிப் படைக்குத் தந்தார். சர்வாதிகாரி பாடிஸ்டாவுக்கு அமெரிக்காவின் ஆதரவு உண்டு. அவரை எதிர்த்து 'கிரான்மா' என்ற கப்பலில் கியூபாவுக்கு 49 புரட்சிப் படையினருடன் இம்மூவரும் புறப்பட்டனர்.

சர்வாதிகாரி பாட்டிஸ்டாவை ஒழிப்பதற்காகக் கியூபாவில் வெடித்த புரட்சியில் பிரதானப் பங்கு வகித்தவர் சே. உயிரைக் காப்பாற்றிக்கொள்ள முயன்ற சர்வதிகாரி பாடிஸ்டா அங்கிருந்து தப்பித்து வெளியேறினார்.

1959-இல் புரட்சி அரசு கியூபாவில் ஆட்சியைக் கைப்பற்றியது. பிடல் காஸ்ட்ரோ சே குவேராவுக்குக் கியூபா குடியுரிமை அளித்ததுடன், அவரைக் கியூபா அரசில் தொழில் அமைச்சராகவும் நியமித்தார். தேசிய வங்கியின் தலைவராகவும் ஆக்கினார்.

பின்னர் சே, காங்கோவில் புரட்சி செய்யத் திட்டமிட்டார். அது எதிர்பார்த்த வெற்றி தரவில்லை. அதனால், 1966-இல் காங்கோவிலிருந்து திரும்பிய சே, அங்கிருந்து பொலிவியாவில் போராடப் புறப்பட்டார். சி.ஐ.ஏ. உளவு நிறுவனம் இவரைத் தொடர்ந்து கண்காணித்து வந்தது.

பொலிவியாவில் அமெரிக்காவின் பொம்மை ஆட்சியின் ராணுவத்திடம் சே கைதாக நேர்ந்தது. பொலிவியாவில் உள்ள ஒரு கிராமப் பள்ளி வீட்டில் கைதியாகச் சிறை வைக்கப்பட்டார். அவருடன் இருந்த புரட்சிப் படையினரும் அங்கு அடைக்கப்பட்டிருந்தனர்.

சி.ஐ.ஏ. உத்தரவின்படி அமெரிக்க ராணுவத் தளபதி டெரான் என்பவன், சே இருந்த வகுப்பறைக்குள் புகுந்து எந்திரத் துப்பாக்கியால் சே குவேராவைச் சுட்டுக் கொன்றான். சே குவேராவைச் சரியாக அடையாளம் காண, சே வின் இரண்டு கைகளும் துண்டிக்கப்பட்டு சி.ஐ.ஏ. வுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

தென்னமெரிக்க நாடுகள் பலவற்றிலும் சே குவேரா புரட்சித்தீயைக் கொண்டு சென்று, அந்த நாடுகளுக்குப் புதிய விடுதலையை உருவாக்கியதில் பெரும்பங்கு ஆற்றிய அசாதாரணமான மாவீரன்.

முதல் மனைவிக்குப் பிறகு அலைடா மார்ச் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு நான்கு குழந்தைகள். மனைவி, குழந்தைகளுடன் பாசம் மிக்க ஒரு குடும்ப வாழ்க்கை வாழ்ந்து வந்துள்ளார்.

அக்குழந்தைகளில் ஒருவர்தான் டாக்டர் அலைடா குவேரா மார்ச் என்ற சே குவேராவின் மகள். 57 வயதான அப்பெண், மருத்துவராகப் பணியாற்றி வருகிறார்.

அவர் தனது தகப்பனாரைப் பற்றிக் கூறுகையில், அவர் ஒரு சிறந்த எழுத்தாளர் என்றும், தொடர்ந்து எழுதி வந்தவர் என்றும் அவருடைய உரைநடை படிப்பதற்குச் சுவையாக இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார். அவரது மொத்தப் படைப்புகளும் அவருடைய பெயரில் அமைந்துள்ள மையத்திலிருந்து வெளியாகி வருகின்றன. சே குவேரா தன் வீட்டில் 3 ஆயிரம் நூல்களுக்கு மேல் வைத்திருந்தார். அவர் ஒரு மிகச்சிறந்த புகைப்படக்காரருமாவார் என்றெல்லாம் மகள் டாக்டர் அலைடா கூறியுள்ளார்.

இவ்வாறு, ஓர் அறிவாளியாகவும், துல்லியமான ராணுவத் தாக்குதலுக்குத் திட்டமிடக்கூடியவராகவும் சாகசங்களை நேசிக்கக்கூடியவராகவும், அதே நேரத்தில் தொழில் ரீதியாக ஒரு மருத்துவராகவும், ஓய்வு நேரங்களில் கணிதச் சமன்பாடுகளில் காலத்தைச் செலவழித்து மகிழ்ந்தவராகவும் சே விளங்கியுள்ளார் என்பது அவரைப் பற்றிய சிறப்பான சரித்திரப் பதிவுகளாகும்.

அவருடைய கடைசி நேர வாழ்க்கைக் கட்டம் நம்மைக் கண்கலங்க வைக்கிறது. பொலிவியாவில் ஒரு கிராமப் பள்ளிக்கூட இல்லத்தில் அவரைக் கைது செய்து வைத்திருந்த ராணுவம், சி.ஐ.ஏ.வுடன் தொடர்பு கொண்டு அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டது.

அதற்கு முன்பு, அந்தப் பள்ளிக்கூடத்தில் பணிபுரிந்து வந்த ஆசிரியரின் மகள் ஜூலியா என்பவள் அந்தக் கைதிக்குக் கடலை சூப் எடுத்துச் சென்ற அப்பெண் கூறுகிறாள், "அவர் யார் என எனக்குத் தெரியாது. அக்கைதியின் வலது காலில் ரத்தம் வடிந்து கொண்டிருந்தது. தீராத வலியைத் தாங்கிக் கொண்டு அந்த மனிதன் இருந்துள்ளார்" என்று. அழுக்கடைந்த கிழிந்த ஆடைகளில் அவருடைய முகத்தைக் கண்ட

ஜூலியா, அந்த மனிதர் பார்ப்பதற்கு அவ்வளவு கவர்ச்சிகரமாக இருந்தார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த சூப்பைச் சாப்பிட்டு விட்டு, மெல்லப் புன்னகை செய்து, "இது அருமையான சூப்" என்று அச்சின்னப்பெண்ணிடம் கூறியுள்ள அந்தக் கைதிதான் சே குவேரா. அது பின்னர்தான் அவளுக்குத் தெரியும்.

அசப்பில் அந்த அழகான முகத்தைப் பார்த்தவர்கள் அவரை ஏசுநாதர் என்றே குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால், சே குவேரா சிறந்த அறிவாளி மட்டுமல்ல, அதற்குச் சமமான அழகானவரும்கூட. அவருடைய முகம் அப்படியொரு ஞானசூரியனாக ஜொலித்திருக்கிறது.

சூப்பைக் கொடுத்துவிட்டுத் தன் தாயாரிடம் அந்தப் பெண் வந்து சேர்ந்த சில நிமிடங்களில், திடீரென்று துப்பாக்கிக் குண்டு வெடித்த சத்தம் கேட்டது. அப்போது இரவு *1* மணி. அக்டோபர் மாதம் ***9*** ஆம் தேதி ***1967.***

துப்பாக்கி சுடும் சத்தத்தைக் கேட்டு நடுங்கிப் போன அந்தப் பெண், அப்பள்ளிக்கூட இல்லத்திற்கு ஓடினாள். கைது செய்யப்பட்ட சே குவேரா வெறும் தரையில் ரத்த வெள்ளத்தில் சாய்ந்து கிடந்தார். அவருடைய கண்கள் அரைவாசி திறந்தும் அரைவாசி மூடியுமிருந்தன.

சே குவேராவைப் பற்றி இப்படிப்பட்ட செய்தி களைச் சேகரிக்கச் சேகரிக்க, நமது உடல் முழுவதும் புல்லரிப்பதை உணர முடிகிறது. அவர் இறந்தபோது அவருக்கு *39* வயதுதான்.

உலக நாடுகளே போற்றும் கியூபாவின் மருத்துவச் சேவையை உருவாக்கியவர் டாக்டர் சே குவேராதான் என்பதை நினைவுகூர்ந்து, கியூபாவின் தலைநகரான ஹவானாவில், சே குவேராவின் திருப் பெயரில் ஒரு பண்பாட்டு மையத்தை (Musolium) எழுப்பி, அதைக் கியூபா நாட்டுக்கு அதிபர் பிடல் காஸ்ட்ரோ அர்ப்பணித்திருக்கிறார்.

சே குவேரா ஒரு மகத்தான தலைவர், மாவீரர். சோசலிசமே அவருடைய வேதம். சேவையே அவருடைய பொழுதுபோக்கு. வரலாறு, இலக்கியம், பொருளா தாரம், அரசியல், மருத்துவம் எனப் பல துறைகளிலும் சாகசம் புரிந்த வித்தகர்.

அர்ஜன்டைனாவில் பிறந்து, தென்னமெரிக்க நாடுகளின் சுதந்திரத்திற்கான சூரியனாகக் கொதித்து உதித்தவர். புரட்சிக்காகத் தேச எல்லைகளைக் கடப்பதில் தமது கால்களுக்குக்கூட அவர் சிந்திக்கக் கற்றுத் தந்தவர். சே குவேராவைக் கணித முறையில் சுதந்திரத்திற்கான சூத்திரம் என்றே கூறலாம். அந்தச் செஞ்சூரியனுக்கு அஸ்தமனமில்லை. அவருடைய ***50***-ஆவது ஆண்டு நினைவு தினம் கடந்த ***9.10.2017.*** ●



சென்னை எம்.ஐ.டியில் (MIT) Madras Insitute of Technology
9-10-2017 முதல் 13-10-2017 வரை என்.சி.பி.எச். புத்தகக் கண்காட்சி நடைபெற்றது.
நிகழ்ச்சியில் எம்.ஐ.டி. டீன் டாக்டர் ஏ. ராஜதுரை அவர்கள் என்.சி.பி.எச். பொது மேலாளர் தி. ரத்தினசபாபதி அவர்கள் மற்றும் முதுநிலை மேலாளர் எஸ்,மணவாளன் ஆகியோர் கலந்து கொண்டனர்.


# திருப்பூர் தியாகிகள்

## சுப்ரபாரதிமணியன்

திருப்பூரைச் சார்ந்த 114 தியாகிகளின் வாழக்கை வரலாறுகளைக் கொண்டிருக்கிறது இந்நூல். விடுதலைப் போராளிகள் யார் என்ற தமிழ்நாடு அரசு வெளியிட்ட 1972ம் ஆண்டுக்குறிப்பு நூல், கொடிகாத்த குமரன் என்ற தியாகி பி எஸ். சுந்தரம் எழுதிய நூல் மற்றும் தியாகி பி ராமசாமி எழுதிய நூல்களின் அடிப்படையில் இந்நூல் உருவாக்கப்பட்டிருக்கிறது. 10 ஆண்டுகளுக்கு மேல் சுதந்திரப்போராட்ட வீரர்கள் சமிதியின் பொதுச் செயலாளராகப் பணியாற்றி வரும் பி ஆர். நடராஜன் இந்நூலை எழுதியுள்ளார். ஏறத்தாழ 90 ஆண்டுகால சுதந்திரப்போராட்டத்தில் திருப்பூர் பகுதியில் பங்கு பெற்ற தியாகிகள் பற்றிய விபரங்கள் இதில் உள்ளன.

தியாகி பி எஸ். சுந்தரம் முதல் தியாகி சுந்தரம்பாள் வரை அந்த 114 தியாகிகள் இதில் உள்ளனர். இதில் இப்போதும் உயிரோடு இருக்கிற தியாகி ஜி.முத்துச்சாமி போன்றோர் சுதந்திரப்போரில் மட்டுமின்றி பின்னர் பொதுவுடமை இயக்கங்களிலும் பத்திரிக்கைத் துறையிலும் பணியாற்றிய அனுபவங்கள் குறிப்பிடத் தக்கவை. வெளி மாநிலங்களிலிருந்து இடம் பெயர்ந்து வந்து பஞ்சு வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த ஆஷர் தம்பதி போன்றோரின் மொழிப்பற்று, தேசப்பற்று போன்றவை குறிப்பிடப்படுகிறது. சுந்தரம்பாள், லட்சுமி அம்மாள் உட்பட பெண்கள் தங்கள் பங்கை குடும்பச் சூழ்நிலைகளில் இருந்து கொண்டு சுதந்திரத்திற்காக ஆற்றி இருக்கும் பங்கு பற்றிய கண்ணோட்டம் விசேசமானது.


குமரனுக்கு முன்னோடியான பிஎஸ் சுந்தரம் சுதந்திரப்போராட்டத்தில் ஈடுபட பள்ளிப்படிப்பைக் கைவிட்டவர். ரங்கூன் சென்று செய்த வந்த வேலையை உதறித்தள்ளியவர் 1932ல் தேசபந்து வாலிபர் சங்கம் அமைத்து ஈடுபட்டவர். திருப்பூர் கதர் உற்பத்தியில் முன் நின்றவர். சட்டமறுப்புப் போராட்டத் தடியடியின் போது 19 இடங்களில் அவரின் உடம்பு எலும்புகள் முறிந்து சிரமப்பட்டவர். பி ராமசாமி அவர்கள் வாழ்க்கை பற்றிய விவரமான குறிப்புகள் இதில் உள்ளன. 1919 ஏப்ரல் 12ம் நாள் சேவியத் யூனியனின் நிர்மாணப்பணிக்காக நடந்த உழைக்கும் மக்களுக்கான நினைவாக உழைப்பை இலவசமாகத் தந்த நாளில் பிறந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவரின் மில்வேலை, ஜனசக்தி விற்பனை, பொதுவுடைமைப் பணிகள் பற்றி விரிவாகவே சொல்லப்பட்டிருக்கிறது. அவர் திருப்பூர் குமரன் நூற்றாண்டை ஒட்டி எழுதிய நூலில் இருந்து குமரன் பற்றி எழுதிய நூலின் பகுதி இந்நூலில் முக்கியமானதாக அமைந்திருக்கிறது.




**சுதந்திரப் போரில் திருப்பூர் தியாகிகள்**
பி.ஆர்.நடராஜன்
**வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41-பி, சிட்கோ இண்டஸ்ரியல் எஸ்டேட்., அம்பத்தூர், சென்னை - 600098**
**₹ 150/-**

ஆர்கே கண்ணன், சி ஏ பாலன் போன்றோரின் வாழ்க்கைக்குறிப்பும் இலக்கியப்பணிகளும் இன்றைய இளையதலைமுறை அறிந்து கொள்ள வேண்டிய முக்கிய விசயங்களாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. இருவரின் திருப்பூர் வாழ்க்கையை விரிவாய் பி.ஆர். நடராசன் போன்றோர் எழுதுவதற்கு முதல்படியாக இந்த நூலைக் கொள்ளலாம்.

இப்போதும் உயிருடன் இருப்போர் முகவரிகள், தொலைபேசி எண்கள தரப்பட்டிருக்கின்றன. வாரிசுகள் பற்றிய தகவல்கள் முறைப்படுத்தப்பட்டிருக்கின்றன. அபூர்வமான புகைப்படங்கள்... குறிப்பாக காந்தியின் திருப்பூர் வருகையின் போது குமரன் கூட இருப்பது முதற்கொண்டு இந்தத் தலைமுறைப் பிரமுகர்களுடனான தியாகிகளின் படங்களைச் சொல்லலாம். திருப்பூருக்கு இது 100 வது வயது. இந்தாண்டில் இத்தொகுப்பு வெளி வருவது ஒரு சிறப்பு. இந்தச்சிறப்பை வணிக நகரத்தின் அதிவேக செயப்பாடுகளூடே உணர்த்தியிருக்கும் பி.ஆர். நடராஜனின் பொதுவுடைமை இயக்கப்பணிகளின் மத்தியில் இதுவும் நினைவு கொள்ளத்தக்கது. ●



உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

பிரெடெரிக்
எங்கெல்ஸ்


லுத்விக் ஃபாயர்பாகும்
மூலச்சிறப்புள்ள
ஜெர்மன் தத்துவஞானத்தின் முடிவும்

பிற்சேர்க்கை:
கார்ல் மார்க்ஸ் எழுதிய
ஃபாயர்பாக் பற்றிய ஆய்வுரைகள்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

0-50 nP.

1977-ஆம் ஆண்டு வெளியான நூலின் முகப்புப் பக்கம்



லுத்விக் ஃபாயர்பாக்

# நன்றிக்கடன் செலுத்தல்

லுத்விக் ஃபாயர்பாக்கும்
ஜெர்மன் செவ்வியல் தத்துவத்தின் விளைபொருளும்

## க. காமராசன்

"லுத்விக் ஃபாயர்பாக்கும் மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் முடிவும்" என்ற தலைப்பில், தமிழில் வெளியாகியுள்ள எங்கெல்சின் நூல் ஒரு நூறு பக்கங்களுக்குள் அடங்கிவிடக்கூடிய சிறுநூல். ஆனால் இந்நூலின் பேசுபொருள் இன்றுவரை உலகம் முழுவதுமுள்ள ஆய்வாளர்களை அலைக்கழித்து வரும் பேசுபொருள் ஆகியுள்ளது. ஹெகலுக்கும் மார்க்சுக்கும் - மார்க்சியத்திற்கும், ஃபாயர்பாக்குக்கும் மார்க்சுக்கும் - மார்க்சியத்திற்கும் உள்ள உறவு என்ன என்பதே அப்பேசுபொருள். ஏன் இந்தப் பேசுபொருள் அந்த அளவுக்கு அறிவுலகை அலைக்கழித்து வருகின்றது ? என்ற கேள்விக்கான பதில் மிக நீளமானது. அந்நீளமான பதிலின் ஒரு பகுதி இந்தப் புத்தகத்தின் கதையில் கிடைக்கலாம்.

### ஒரு புத்தக மதிப்புரையே ஒரு புத்தகமாக

கார்ல் நிக்கோலா ஷ்டார்க்கேயின் “லுத்விக் ஃபாயர்பாக்” (1885) என்ற நூலுக்கு எங்கெல்ஸ் எழுதிய ஒரு புத்தக மதிப்புரைதான் இந்நூல். ஷ்டார்க்கே (1858-1926) டென்மார்க் நாட்டைச் சேர்ந்த சமூகவியலாளர்; தத்துவியலாளர்; ஃபாயர்பாக் பற்றி ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர்; பேராசிரியர்; சுதந்திர ஜனநாயகவாதி; சோசலிஸ்டுகளுக்கும் சுதந்திரவாதி களுக்கும் இடைப்பட்ட பாதையில் பயணிக்க முற்பட்டவர்; ஐரோப்பாவிலேயே முதன்முதலாக உயர்நிலைப் பள்ளிக்கல்வியைக் கட்டணமில்லாமல் அளிப்பதற்காக 1899-ல் டேனிஷ் கல்விச் சங்கத்தை நிறுவியவர். இவர் எழுதிய ஃபாயர்பாக் பற்றிய நூலுக்கு எங்கெல்ஸ் விருப்பார்வத்துடன் மதிப்புரை எழுத முனையவில்லை; ஷ்டார்க்கேயின் நூல் தாம் மதிப்புரை எழுதுவதற்குத் தகுதியானது என்று எங்கெல்ஸ் கருதிய தாகவும் தெரியவில்லை. இதை எங்கெல்ஸ் எழுதிய மதிப்புரையில் ஷ்டார்க்கேயின் நூலை மிகச்சில இடங்களில் மட்டுமே சுட்டி விமர்சிப்பதன் மூலம் புரிந்துகொள்ள முடியும்.

எங்கெல்ஸ் இம்மதிப்புரை எழுத நேரம் ஒதுக்கிய காலத்தில் மார்க்சின் மூலதனம் நூலின் இரண்டாம், மூன்றாம் பாகங்களை அச்சுக்குத் தயாரிக்கும் மிகக் கடினமான பணியை மேற்கொண்டிருந்தார்; அதனால் அவர் தம் சொந்த நூல் வேலைகளைக்கூட முடிக்க முடியவில்லை.

“புதிய காலம்” என்ற ஜெர்மன் சோசலிச ஜனநாயக வாதிகளின் இதழ். அவ்விதழ் ஆசிரியர்கள் ஷ்டார்க் கேயின் நூலுக்கு ஒரு மதிப்புரை எழுதித் தருமாறு, அந்நூல் 1885-ல் வெளிவந்த உடனே எங்கெல்சை வேண்டினார்கள். புதியதாகக் கட்டியெழுப்பப் பட்டிருந்த ஜெர்மன் சோசலிச ஜனநாயகக் கட்சிக்குள் வந்திருந்த “மக்கள் திரளுக்கு” எந்த வகையிலாவது எங்கெல்சை எழுத வைத்துவிட வேண்டும் என்பது புதிய காலம் இதழ் ஆசிரியர்களின் ஆசை. எங்கெல்ஸ் வேறொரு உள்நோக்கத்துடன் மதிப்புரை எழுத இசைந்தார். 1886ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மதிப்புரையை ஒரு சிறுநூல் அளவுக்கு எழுதியும் கொடுத்துவிட்டார். எங்கெல்ஸ் மனதில் கொண்டிருந்த அந்த உள்நோக்கத்தை, இரண்டு ஆண்டுகள் கழித்து 1888-ல் இந்த மதிப்புரையை ஒரு நூலாக வெளியிடும் போது எழுதிய முன்னுரையில் பின்வருமாறு குறிப் பிட்டார் : “ஹெகலுக்குப் பின் வேறெந்த தத்துவ வாதியையும்விட ஃபாயர்பாக் எங்கள் மீது செலுத்திய செல்வாக்கு முழுமையாக ஏற்கப்படாமலே இருந்துவரும் நன்றிக்கடன் என எனக்குத் தோன்றியது. எனவே... நான் இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டேன்.” சரி, மார்க்சும் எங்கெல்சும் ஃபாயர்பாக் என்ற மனிதருக்குப் பட்ட நன்றிக்கடன் என்ன?.

### நன்றிக்கடன்

லுத்விக் ஆண்டரஸ் ஃபாயர்பாக் (1804-1872) மார்க்சுக்கும் எங்கெல்சுக்கும் ஏறத்தாழ 15 வயது மூத்தவர். ஒரு நீதிபதியின் மகனாகப் பிறந்தவர்; மூன்று சகோதரர்கள்; மூன்று சகோதரிகள்; சகோதரர்களில் ஒருவர் தொல்பொருள் அறிஞர்; மொழியியலாளர்; மற்றொருவர் தத்துவவாதியும் மொழிநூல் அறிஞரும் ஆவார். ஃபாயர்பாக் மானிடவியல் அறிஞர்; தத்துவவாதி; கிறிஸ்தவ மதத்தை விமர்சனம் செய்வதில் ஆர்வம் காட்டிவந்தவர். 1831-ல் ஜெர்மனின் மாபெரும் தத்துவவாதி ஹெகல் இறந்த பிறகு, ஹெகலைப் பின்பற்றிய சீடர்கள் இரு கோஷ்டிகளாகப் பிரிந்தனர். அதில் ஒரு கோஷ்டி இளம் ஹெகலியர்கள் அல்லது இடது ஹெகலியர்கள் என்று அழைக்கப்பட்டனர். அதில் தாவித் ஷ்ராவுஸ், ஆர்னால்ட் ரூகே, மாக்ஸ் ஸ்டின்னர் முதலானோருடன் ஃபாயர்பாக் பங்கு கொண்டார். இக்கோஷ்டியில் பின்னாளில் மார்க்சும் சேர்ந்து கொண்டார். இளம் ஹெகலியர்களில் வயதில் மிக இளையவர் மார்க்ஸ். ஆனால் சிந்தனை ஆற்றலாலும் அறிவுசார் கடும் உழைப்பாலும் மார்க்ஸ் எல்லோரையும் வியக்க வைத்தர்.

இளம் ஹெகலியர்கள் அனைவரும் ஜெர்மனி ஒன்றுபடுவதற்கும் முன்னேறுவதற்கும் தடையாக விளங்கிய முடியாட்சி முறையும் அம்முறைக்குப் புனித நீர் தெளித்து ஆசீர்வாதம் செய்த கிறிஸ்தவ சமயத் தையும் தாக்கி எழுதிவந்தனர். கிறிஸ்தவத் தொன்மங்கள் ஆதாரமற்ற, முன்னுக்குப் பின் முரணான, அறிவுக் கொவ்வாத குப்பைகள் எனத் தோலுரித்துக் காட்டினர். இந்தப் போக்கில் ஃபாயர்பாக் 1841-ல் கிறிஸ்தவத்தின் சாரம் என்ற நூலை வெளியிட்டார். இந்த நூல் இளம் ஹெகலியர்களிடையில் பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியது. இந்நூலைப் படித்து முடித்தவுடன், ‘நாங்கள் (எங்கெல்சும் மார்க்சும்) ‘ஃபாயர்பாக்வாதி’ ஆகிவிட்டோம்’ என்று எங்கெல்ஸ் எழுதியுள்ளார். எங்கெல்சின் இந்தக் கூற்றை மிகைக்கூற்று என்று மறுக்கும் மார்க்சிய அறிஞர்களும் உண்டு. எவ்வாறாயினும் ஃபாயர்பாக்கினுடைய கிறிஸ்தவத்தின் சாரம் என்ற நூல் பற்றி 1845 வசந்த காலத்தில் எழுதிய பதினொரு சிறுகுறிப்புகளில்தான் மார்க்ஸ் வரலாறு பற்றிய பொருள்முதல்வாத விளக்கம் - மார்க்சியம் என்னும் தத்துவத்தின் மையஅச்சு - குறித்த கோட்பாட்டுச் சிந்திப்பை உருப்படுத்தி முடித்தார்.

ஃபாயர்பாக் மனிதனை மையப்படுத்திச் சிந்தித்தவர்; அவர் சமயம் குறித்த விமர்சனத்தில், மானிடவியல் புலம் வழங்கிய வெளிச்சத்தில், கிறிஸ்து என்ற தொன்மம் மனித சாரத்தின் பிரதிபலிப்பே என்ற முடிவுக்கு வந்தடைந்தார். இவ்வாறு விண்ணுலகில் இருந்துவந்த கிறிஸ்துவையும் அந்தரத்தில் ஊசலாடிக் கொண்டிருந்த ஹெகலின் “பரம்பொருளையும்” மண்ணுக்கு இழுத்து

வந்துவிட்டார். ஆனால் அவர் மண்ணில் மனிதர் ஏன் தானாகவும், கிறிஸ்துவாகவும் பிளவுண்டநிலை அடைந்தனர் என்ற கேள்வியை நோக்கிப் பயணிக்க முற்படவில்லை. அவ்விடத்தில் ஃபாயர்பாக், அன்பினால் குறைகள் களையப்பட்டு நிறைவு எய்த வேண்டிய மானிட உலகம் பற்றிய போதனையில் இறங்கிவிட்டார். அந்தக் கேள்வியை மார்க்ஸ் எழுப்பிக் கொண்டார். பதிலையும் கண்டடைந்தார். அதுதான் மார்க்சியமாக உருவானது. இதுதான் மார்க்சும் எங்கெல்சும் ஃபாயர் பாக்குக்குப் பட்ட நன்றிக்கடன் ஆகும்.

இந்த நன்றிக்கடனைக் கணக்குத் தீர்க்க, இளம் ஹெகலியர்களைப் பற்றி "ஜெர்மன் கருத்துநிலை" என்ற தலைப்பில் இரு பகுதிகள் கொண்ட நூலை மார்க்சும் எங்கெல்சும் சேர்ந்து 1845 நவம்பரில் எழுதத் தொடங்கி 1847 ஏப்ரல் மாதம் வாக்கில் முடித்தார்கள். போலிஸ் கெடுபிடிகள், பதிப்பக ஒழுங்குமுறைகள் ஆகியவற்றால் அந்நூல் முழுமையாக மார்க்ஸ் - எங்கெல்ஸ் வாழ்நாளில் வெளியாகவில்லை. 1932ஆம் ஆண்டுதான் ஜெர்மன் மொழியில் முழுமையாக வெளியானது. தம் வாழ்நாளில் இந்த நூல் வெளிவரவில்லை என்ற மனக்குறை அவர் களின் எழுத்துகளில் ஆங்காங்கே காணமுடியும். நிற்க, இந்தச் சூழலில்தான் பெரும் பணிச்சுமைக்கிடையிலும் ஃபாயர்பாக் பற்றி எழுதக் கிடைத்த வாய்ப்பை எங்கெல்ஸ் பயன்படுத்திக் கொண்டார். 1888-ல் தனிநூலாக வெளியிடும்போது பழைய கையெழுத்துப்படிகளைத் தேடியெடுத்து, மார்க்ஸ் எழுதிய ஃபாயர்பாக் மீதான பதினோரு ஆய்வுக்குறிப்புகளையும் எங்கெல்ஸ் பின்னிணைப்பாகச் சேர்த்தார்.

### ஜெர்மன் செவ்வியல் தத்துவமும் மார்க்சியமும்

ஃபாயர்பாக் குறித்த குறித்த எங்கெல்சின் சிறுநூல் ஜெர்மனில் 1888-ல் வெளியானது. 1889-ல் ல்வோவிச் செய்த மொழியாக்கமும் 1892-ல் பிளக்கானோவ் செய்த மொழியாக்கமும் என இரண்டு ருஷ்ய மொழியாக்கங்கள் அடுத்தடுத்து வெளிவந்தன. பிரெஞ்சு மொழியாக்கம் மார்க்சின் மருமகன் லாப்பாக் செய்து, எங்கெல்ஸ் பார்வையிட்டு 1894-ல் வெளியானது. 1892-ல் பல்கேரிய மொழியாக்கமும், 1899-ல் உக்ரேனிய மொழியாக்கமும் வெளிவந்தன. 1902-ல் இத்தாலி மொழியாக்கமும் 1903-ல் ஆங்கில மொழியாக்கமும் வெளிவந்தன. இவ்வாறு, நூல் வெளியான பத்து ஆண்டுகளுக்குள் ஐரோப்பக் கண்டத்து முக்கியமான மொழிகளில் தொழிலாளர்களுக்கான பிரசுரமாகப் பரவலாக மீண்டும் மீண்டும் வெளியிடப்பட்டது. பரவலாக வாசிக்கப்பட்டது.

மார்க்சியத் தத்துவம் என்பது பற்றிய புரிதலை இந்நூல்தான் உலக அளவில் கட்டியமைத்தது. இந்நூலில் பிஹ்டே, காண்ட், ஹெகல், ஃபாயர்பாக் முதலானோரின் எழுத்துகளையும் கருத்துகளையும் தண்ணீர் பட்டப்பாடாக எங்கெல்ஸ் எடுத்து விவாதிக் கின்றார்; அத்துடன் கொஞ்சம் மார்க்ஸ்-எங்கெல்சின் தன்வரலாறு ஊடுபாவாகப் போகின்றது. ஆயினும், ஜெர்மன் செவ்வியல் தத்துவத்திற்கும் மார்க்சியத்திற்கும் உள்ள உறவு பற்றி எங்கெல்ஸ் கொடுத்த பன்முகமான விவரணைகள், பிற்காலத்தில் கருத்து வேறுபாடுகளையும் தோற்றுவிக்கச் செய்தது. அவ்வேறுபாடுகளின் ஒருமுகம் இந்நூலின் தலைப்புகள்.

Ludwig Feuerbach und der Ausgang der klassischen deutschen Philosophie என்ற ஜெர்மன் மொழித் தலைப்பு ஆங்கிலத்தில் மூன்றுவிதமாக மொழியாக்கம் மொழியாக்கம் செய்யப்பட்டது. முதலில் 1903-ல் அகஸ்டின் லூயிஸ் Feuerbach: the roots of the socialist philosophy என்று தலைப்பிட்டார். இரண்டவதாக இண்டர்நேசனல் பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட போது, Ludwig Feuerbach and the Outcome of Classical German Philosophy என்று தலைப்பிடப்பட்டது. மூன்றாவதாக, நாமறிந்த ருஷ்ய ஆங்கிலப் பதிப்புகள் Ludwig Feuerbach and the End of Classical German Philosophy என்ற தலைப்பில் வெளிவந்தன.

முதல் தலைப்பு மிக வெளிப்படையாக, "ஃபாயர்பாக்: சோசலிசத் தத்துவத்தின் வேர்" என்கிறது. அதாவது மார்க்சியத்தின் வேர் ஃபாயர்பாக் என்கிறது. இதை மார்க்சிய அறிஞர்களில் ஒரு தரப்பினர் மிக மோச மான எளிமைப்படுத்தல் என்கின்றனர். இரண்டாவது தலைப்பு "லுத்விக் ஃபாயர்பாக்கும் ஜெர்மன் செவ்வியல் தத்துவத்தின் விளைபொருளும்". மூன்றாவது தலைப்பு "லுத்விக் ஃபாயர்பாக்கும் ஜெர்மன் செவ்வியல் தத்துவத்தின் முடிவும்". இந்தத் தலைப்புகளில் ஜெர்மன் செவ்வியல் தத்துவத்தின் "விளைபொருள்", "முடிவு" என்று குறிக்கப்படுபவை மார்க்சியத் தத்துவம்தான்; ஃபாயர்பாக்கும் மார்க்சியமும் உம் விகுதி கொண்டு இணைக்கப்படுகின்றது. ஆனால் இவற்றிலும் ஒரு பிரச்சினை இருக்கின்றது. அது மார்க்சியம் ஜெர்மன் செவ்வியல் தத்துவத்தின் விளைபொருளா, முடிவா...? பெரும்பாலான ருஷ்ய அறிஞர்கள் ஜெர்மன் செவ்வியல் தத்துவத்தின் முடிவு, அதன் கொடுமுடி என வாதித்தனர். ஆனால் ஆங்கில உலக அறிஞர்கள் மார்க்சியம் விளைபொருள் என வாதித்தனர். இவ்வாறு நூலுக்குள் போகாமல் இப்படி இந்நூலின் அட்டைகளைச் சற்று உன்னிப்பாகத் திருப்பிப் பார்த்தாலே போதும், பெரும் தத்துவப் பிரச்சினைகள் வந்து முட்டிக் கொள்ளும்.

### தமிழ் மொழியாக்கங்கள்

இந்நூலுக்கு இரண்டு தமிழ் மொழியாக்கங்கள் உண்டு. முதல் மொழியாக்கம், "லுத்வின் பேயர்பாக்கும் தரமான ஜெர்மானிய தத்துவத்தின் முடிவும்" என்ற

தலைப்பில் தொ.மு.சி. ரகுநாதன் செய்தார். இம் மொழியாக்கம் 1963-ல் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் வெளியிட்ட "மதம் பற்றி" என்ற மார்க்ஸ்-எங்கெல்ஸ் தொகைநூலில் இடம்பெற்றுள்ளது. இத்தொகைநூல் நீண்ட காலமாக அச்சில் இல்லாமல், 2014-ல்தான் மீண்டும் வெளியிடப்பட்டுள்ளது. ரகுநாதன் மொழி யாக்கம் வெளிவந்து ஏறக்குறைய பதினைந்து ஆண்டு களுக்குப் பின் மற்றொரு மொழியாக்கம் வெளிவந்தது.

மற்றொரு மொழியாக்கம், "லுத்விக் ஃபாயர்பாகும் மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் முடிவும்" என்ற தலைப்பில் தனிநூலாக 1977ஆம் ஆண்டு மாஸ்கோ முன்னேற்றப் பதிப்பகம் வெளியிட்டது. அப்போது 104 பக்கங்கள் கொண்ட இத்தனிநூலின் விலை 50 பைசாக்கள். இம்மொழியாக்கத்தை செய்தவர் ஆர்.கே. கண்ணன் ஆவார். இம்மொழியாக்கத்தின் திருத்தப்பட்ட ஒரு வடிவமே, முன்னேற்றப் பதிப்பகம் வெளியிட்ட மார்க்ஸ்-எங்கெல்ஸ் தேர்வுநூல்கள் 10ஆம் தொகுதியில் இடம்பெற்றுள்ளது. திருத்தப்பட்ட வடிவம், அதற்கு முன் வெளியான வடிவத்தைவிடக் கடினமாக்கப்பட்டுள்ளது. இத்திருத்தப்பட்ட வடிவத்தில் தனித்தொடர்கள் கூட்டுத்தொடர்கள் ஆக்கப்பட்டு உள்ளன; ஒருசில கலைச்சொல் திருத்தங்கள் செய்யப் பட்டுள்ளன. குறிப்பாக, alienation என்ற கலைச்சொல் அந்நியமாதல் என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தொ.மு.சி. ரகுநாதன், ஆர்.கே. கண்ணன் ஆகிய இரண்டு மாபெரும் ஜாம்பவான்களின் மொழி பெயர்ப்புகள் உள்ளன. ஆயினும் இந்நூலின் பேசுபொருள், மொழியாக்கம் குறித்து தமிழில் பெரிய அளவு விவாதங்கள் நடந்த மாதிரி தெரியவில்லை.

### ஃபாயர்பாக்கும் பெரியாரும்

இச்சிறுநூலை தனிப்புத்தகமாக, 1971ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை 33 மொழிகளில் 121 முறை, 48,06,000 படிகளை சோவியத் ஒன்றியம் வெளி யிட்டதாக The Great Soviet Encyclopedia சொல்கிறது. இந்தக் கணக்கு இந்தப் புத்தகத்தின் பிரமாண்டமான பரவலைக் காட்டுகின்றது. எப்படியாயினும் இந்தக் கணக்குக்கு வெளியில்தான் தமிழ் மொழியாக்கங்கள் உள்ளன.

1977ஆம் ஆண்டுக்குப் பிறகு இச்சிறுநூல் தனிப் புத்தகமாக வெளியிடப்பட்டதா என்று தெரியவில்லை. 2000ஆம் ஆண்டுகளுக்குப் பின் மார்க்சிய நூல்களை நாமே வெளியிடத் தொடங்கிய பின்கூட இந்நூல் திரும்ப அச்சிடப்படவில்லை. இந்நூலுக்கு வாசகத் தேவை எழவில்லை போலும்.

நான் 2003 ஆம் ஆண்டுக்குப் பின் மார்க்சியம் பற்றி வாசிக்கத் தொடங்கினேன். அக்காலத்தில் 1977ஆம் ஆண்டுப் பதிப்பைப் பழைய புத்தகக் கடை களிலிருந்து வாங்கியுள்ளேன். இத்தனிநூலும் தேர்வுநூல் தொகுதி 10-ல் இந்நூல் வாசகமும் ஒன்றெனவே முதலில் நினைத்தேன். பிறகுதான் வாசகங்கள் வேறுபடுவதை உணர்ந்தேன். மார்க்சிய வகுப்புகளிலும் மார்க்சியம் குறித்த வாசிப்பு நூல்பட்டியலில் இச்சிறுநூலும் தவறாமல் இடம்பெற்றுள்ளதைக் கண்டுள்ளேன். முதிய, இளம் தோழர்கள் அனைவரும் இந்நூலை வாசிக்க முயற்சிப்பதைக் கண்டுள்ளேன்.

தோழர்களுடனான பொதுவான பேச்சுகளின் போது, ஃபாயர்பாக்கின் கொச்சைப் பொருள்முதல் வாதத்தை விமர்சனம் செய்து அழித்து மார்க்ஸ்-எங்கெல்ஸ் இயங்கியல் பொருள்முதல்வாதத்தைப் படைத்தனர் என்று வாதம் முன்வைக்கப்படுவதைக் கேட்டுள்ளேன். இந்நூலில் வரும் கருத்துமுதல்வாதம், பொருள்முதல்வாதம் என்னும் வகைப்பாடு, நவீன அறிவியல் கண்டுபிடிப்புகளின் விளைவாக இயங்கியல் பொருள்முதல்வாதம் தோன்றியது என்ற எங்கெல்சின் வாதம் போன்றவை நம் தோழர்களுக்கு வேத வாக்கியங்கள் போன்றவை; மீற முடியாதவை; கூடாதவை. மற்றபடி, காண்ட், ஹெகல், ஃபாயர்பாக் ஆகியோருக்கும் மார்க்சியத்திற்கும் இடையிலான சிக்கலான உறவும் வரலாறு பற்றிய பொருள்முதல்வாத விளக்கம் பற்றிய எங்கெல்சின் விவரணைகளும் தோழர்களின் கவனத்தை ஏனோ ஈர்க்கவில்லை. இயோசிஃப் டித்ஸ்கென் என்ற ஜெர்மன் தொழிலாளி தன் சொந்த வழியில், ஹெகல் போன்ற ஜெர்மன் செவ்வியல் தத்துவவாதிகளின் துணையின்றி - மார்க்சின் துணையின்றியும்கூட - இயங்கியல் பொருள்முதல்வாதத்தைக் கண்டடைந்தார் என்று எங்கெல்ஸ் போகிற போக்கில் குறிப்பிடுகிறார். இப்படியான அதிர்ச்சியான தகவல்களும் ஜெர்மன் செவ்வியல் தத்துவமும் அதன் கலைச்சொற்களும் தோழர்களின் வாசிப்பில் கவனத்தைப் பெற்றதாகவும் தெரியவில்லை.

ஃபாயர்பாக்குக்கு இணையாக இங்குப் பெரியாரைக் குறிப்பிடுவார்கள். பெரியார் ஒரு கொச்சைப் பொருள் முதல்வாதி என்ற தருக்கத்தில் வாதிக்க இந்த ஒப்பீடு. மார்க்சியத்துக்கு முன்பு இருந்த பொருள்முதல்வாதங்கள் அனைத்தும் கொச்சைப் பொருள்முதல்வாதம் என்று விவாதத்தில் சடாரென ஒரு பாய்ச்சல் நிகழும். அப்புறம் தத்துவ வரலாற்றை முழுவதும் சுவையற்ற வகையில் பொருள்முதல்வாதம், கருத்துமுதல்வாதம் என்று முத்திரை பதிக்கும் வாய்ப்பாடு ஆகிவிடுகின்றது. மார்க்சியம் தத்துவ வரலாற்றின் முடிவு, கொடுமுடி, உச்சி. அதாவது ஹெகலின் "பரம்பொருள்" என்ற வகையினம் போல. இப்படித்தான் இந்நூலைத் தோழர்கள் புரிந்துகொண்டுள்ளனர் என்பது என் அனுபவம். அதனால்தான் நம் சொந்த தத்துவ மரபு குறித்த ஆழ்ந்த பயிலுதலும் அதற்குள்ளாக நின்று

மார்க்சியத்தை விளங்கிக் கொள்ளுதலும் நம் தோழர்களிடம் காணமுடியவில்லையோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

இதற்கு மாறாகவும் இச்சிறுநூலை விளங்கிக் கொண்டுள்ள பல தோழர்களையும் பார்த்துள்ளேன். அவர்கள்தாம் இந்த நூலை ஆழ்ந்த பயிலுதல் நோக்கி என்னை இட்டுச் சென்றவர்கள். மார்க்ஸ்-எங்கெல்சின் சொற்பயன்பாட்டில் கொச்சை என்ற சொல்லுக்கு, தத்துவத்தின் திரட்சியை நீர்த்துப்போகச் செய்தல் என்பது பொருள். இந்தப் பொருளில் ஃபாயர்பாக்கும் பெரியாரும் கொச்சைப் பொருள்முதல்வாதிகள் அல்லர். மற்றபடி இந்த இருவருக்கும் எண்ணற்ற சமூக, அரசியல், பண்பாட்டு, அறிவுசார் சூழல் வேறுபாடுகள் உண்டு. ஆனால் ஒன்று, ஃபாயர்பாக்குக்குப் பின் மார்க்ஸ் வந்தது போல, இங்குப் பெரியாருக்குப் பின் அந்தளவுக்கு தத்துவ "நடைமுறை"யைக் கைகொண்ட எந்த மனிதரும் தோன்றவில்லை. இச்சிறுநூலை வாசித்தலும், இதனோடு தொடர்புடைய பொருள் பற்றிய தேடலும் இயங்கியலைப் போல நிறைவடையாது, முழுமை பெறாது தொடர்ந்து கொண்டே செல்கின்றது.

வ.நி. குஸ்னித்ஸோவ் என்ற ருஷ்ய அறிஞர் இந்நூலுக்கு எழுதியுள்ள "பி.எங்கெல்ஸ் எழுதிய லுத்விக் ஃபாயர்பாகும் மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவ ஞானத்தின் முடிவும்" என்ற தலைப்பிலான கையேட்டை முன்னேற்றப் பதிப்பகம் 1989ஆம் ஆண்டு வெளியிட்டு உள்ளது. இக்கையேடு ஹெகல், ஃபாயர்பாக் பற்றியும் அவர்களது தத்துவங்கள் பற்றியும் அறிமுகநிலையில் விளக்கம் தருகின்றது. இது இப்பேசுபொருள் குறித்த முதல்நிலை வாசகருக்கு மிக பயனுடையது. இந்நூல் ஆசிரியர், மார்க்ஸ் மீது ஹெகல் செலுத்திய செல்வாக்கை அதிகமாகவும், ஃபாயர்பாக் செலுத்திய செல்வாக்கைக் குறைத்தும் மதிப்பிடுகின்றார்.

எம்.எஸ். முஹம்மது அனஸ் என்ற இலங்கைத் தத்துவப் பேராசிரியர் அவர்கள் நாவாவின் ஆராய்ச்சி இதழ் 44-45ல் எழுதியுள்ள "மார்க்சின் பாயர்பாஹ் ஆய்வுரைகளில் மனிதநலவாதச் சிந்தனை - ஒரு மெய்யியல் நோக்கு" என்ற ஆய்வுக் கட்டுரை மிகமிக சிறந்த தத்துவ ஆய்வு ஆகும். இக்கட்டுரை இந்நூலின் பேசுபொருளோடு தொடர்புடையது. மிக விரிவாகவே மார்க்ஸ்-எங்கெல்ஸ் மீது ஃபாயர்பாக் செலுத்திய செல்வாக்கை வலியுறுத்துகின்றார். மார்க்ஸ்-எங்கெஸ் ஆகியோருடைய பொருள்முதல்வாதம் நமது தத்துவமரபில் உள்ள சடவாதம் போன்றது அன்று, சுபாவவாதம் - இயல்புநெறி போன்ற ஒன்று என்னும் அனஸ் அவர்களுடைய கருத்து ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டுகிறது. ●



சென்னையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலத் தலைமை அலுவலகமான பாலன் இல்லத்தில் 07-11-2017 அன்று என்.சி.பி.எச். வெளியீடான எஸ்.வி.ராஜதுரையின் 'லெனின் எனும் மனிதர்' நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.
நிகழ்ச்சியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்தத் தலைவர் தோழர் இரா. நல்லகண்ணு, தோழர் தா.பாண்டியன், தோழர் இரா. முத்தரசன், தோழர் மு.வீரபாண்டியன் மற்றும் என்.சி.பி.எச். முதன்மை மேலாளர் ஆ. சிவக்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# முல்லைப் பாட்டும் அதன் தனித்துவமான திணை மயக்கமும்

மு.செல்லா

பத்துப்பாட்டுள் ஒன்றாகிய ‘முல்லைப்பாட்டு’ மறுவாசிப்புச் செய்யப்படவேண்டும் என்ற சிந்தனை எனக்குத் தோன்றுவதற்கு வேறு சில காரணங்கள் இருந்தாலும், முதன்மைக் காரணமாக அமைந்தது அதனுடைய குறுகிய அடியெல்லை எனலாம்.

நெடும் பாடல் பத்தினுள்ளும் முல்லைப்பாட்டு மட்டுமே *103* வரிகளால் ஆகிய சிறிய பாடல் ஆகும். மாங்குடி மருதனார் இயற்றிய மதுரைக் காஞ்சி *782* வரிகளுடன் கூடிய பெரிய பாடல் என்பதை மனதில் நிறுத்தி முல்லைப் பாட்டின் அளவை ஒப்புநோக்கி அறியலாம்.

வரிகளால் சிறியது ஆனாலும், அதனுள் பொதிந்து கிடக்கின்ற தரவுகள், காட்சிச் சித்திரங்கள், பண்பாட்டுச் சித்திரிப்புக்கள், உவமைகள் போன்றவை நயமிக்கவை என்பதும், இப்பாடல் எனது இரண்டாம் ஆண்டு பட்டப் படிப்பிற்கான பகுதி இரண்டு தமிழ் பாடத்தில் பயின்று வந்தது என்பதுடன், எனது தமிழ்ப் பேராசிரியர் முல்லைப் பாட்டின் மீது எனக்கு ஆர்வம் வர பயிற்றுவித்திருந்தார் என்பவையே இதனை ஆய்வு நோக்கில் மறுவாசிப்பு செய்ததற்கான வேறு சில காரணங்கள் ஆகும்.

தனது ஒப்பற்ற தமிழ்ப் பணியாக பழைய ஓலைச் சுவடிகளைத் தேடிக் கண்டுபிடித்து, ஆய்வு செய்து, பதிப்பித்து எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சீவகசிந்தாமணி என அரும்பெரும் புதையல்களை மீட்டெடுத்துத் தமிழுக்குத் தந்த 'தமிழ்த் தாத்தா' உ.வே.சா அவர்களின் தொண்டினை, முல்லைப் பாட்டை மறு வாசிப்புச் செய்யும் போது நன்றியுடன் நினைத்துக் கொண்டேன்.

பத்துப்பாட்டின் திருத்தமுள்ள ஓலைச் சுவடிகள் தேடியும் கிடைக்கப் பெறாமல், அதனைப் பதிப்பிக்க முடியாமல் கவலை மீதுற்று கடைசி முயற்சியாக ஸ்ரீ வைகுண்டம் வக்கீல் சுப்பையா முதலியார் அவர்களைத் தஞ்சம் அடைந்ததையும், அவர் ஆழ்வார் திருநகரியில் உள்ள தன் நண்பர்கள், கவிராயர்களின் வீடுகளி லெல்லாம் கேட்டுப் பார்த்தும் பயனற்றவராக; அன்று ஆலய விசேட நாள் ஆகையால், வீதி உலா வந்த பெருமாளையும் சடகோபாழ்வாரையும் தரிசித்து தான் வந்த காரியம் கை கூட வில்லை, 'ஆழ்வாரே நீர் தான் தமிழின் துயரைப் போக்க வேண்டும்' என்று வேண்டிக் கொண்டதையும் தனது 'என் சரித்திரம்' என்ற நூலின் நெஞ்சுருகப் பதிவு செய்கிறார் உ.வே.சா.

என்ன ஆச்சரியம் பாருங்கள் உ.வே.சா.வின் பிரார்த்தனை முடிந்த சிறிது நேரத்திலேயே ஆழ்வார் திருநகரியில் உள்ள 'லட்சுமண கவிராயர்' என்பவர் கையில் ஓலைச் சுவடிகளுடன் விரைந்து வந்து, "இந்த புத்தகத்தைப் பாருங்கள் இந்த ஒன்றுதான் என் மாமனாரிடம் உள்ளது. பார்த்துவிட்டுத் திருப்பித் தருவதாக வாங்கி வந்திருக்கிறேன்," என்றவாறு உ.வே.சா.வின் கைகளில் கொடுக்கிறார்.

கைகளில் கிடைத்த ஒலைச் சுவடிகளைக் கண்ணுற்ற உ.வே.சா.வின் பரவசத்தை அவருடைய வார்த்தைகளாலே தருவதுதான் முறையாகும். உ.வே.சா. எழுதுகிறார், "எனக்கிருந்த ஆவலினாலும் வேகத்தி னாலும் நிலா வெளிச்சத்திலேயே அதைப் பிரித்துப் பார்த்தேன். சட்டென்று 'முல்லைப் பாட்டு' என்ற பெயர் என் கண்ணிற்பட்டது அப்போது எனக்கு உண்டான சந்தோசத்திற்கு எல்லையில்லை".

முல்லைப் பாட்டின் இன்பமும், பயனும் எப்படித் தேடிக் கிடைக்க வந்தது என்பதை இதன் மூலம் அறிகிறோம். முல்லைப் பாட்டைப் படிக்கும் போதெல்லாம் மேற்படி உ.வே.சா. அவர்களின் பரவசமும் நம்மையும் தொற்றிக் கொள்வது தவிர்க்க இயலாதது ஆகிறது.

### அறிவியல் உவமையுடன் ஒரு துவக்கம்

குளிர்ந்த கடலைப் பருகி மேலெழுந்த மேகம், மலை முகடு தொட்டு பின் மழையாகிப் பொழிவது என்பது, மகாபலி சக்ரவர்த்தி தாரை வார்த்த நீரானது நழுவித் தன் கையில் விழுந்த மாத்திரத்திலேயே வானில் உயர்ந்து நின்ற வாமன அவதாரம் போல்வது என்ற அற்புதமான அறிவியல் உவமையுடன் முல்லைப் பாட்டைத் துவக்குகிறார் இதன் ஆசிரியராகிய 'காவேரி பூம்பட்டினத்து பொன் வணிகனார் மகன் நப்பூதனார்.

"நீர் செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடு இமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு
கோடு கொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி
பெரும் பெயல் பொழிந்த சிறுபுண் மாலை" (3-6)

இதில் மற்றொரு நுட்பம் என்னவென்றல், முல்லை நிலத்தினுடைய பெரும் பொழுது-கார் காலம், சிறு பொழுது-மாலை. பாடலின் 6-வது வரியிலேயே முல்லைத் திணை விளக்கமுற "பெரும் பெயல் பொழிந்த சிறுபுண் மாலை" என்ற வரியால், காலம் 'கார்' என்பதையும் பொழுது 'மாலை' என்பதையும் பாங்குற விளக்கிவிடுகிறார் ஆசிரியர்.

அவ்வாறெனில் தனித்துவமான திணை மயக்கம் என்பது எங்கிருந்து வந்தது? என்ற கேள்வி எழுகிறது.

### அகப்பாடலா? புறப்பாடலா?

சங்க இலக்கியங்கள் அனைத்தும் பரந்துபட்ட இரண்டு திணைகளால் அமைகின்றன. ஒன்று, வீரமும் வீரம் சார்ந்த புற வாழ்வு குறித்த புறப்பாடல்கள். மற்றொன்று, காதலும் காதல் சார்ந்த களவு, கற்பு குறித்த அகப்பாடல்கள்.

இவற்றுள் முல்லைப்பாட்டு எத்திணையில் அமைகிறது? என்று பார்க்குமிடத்து, இந்தப் பாடலிலே அகத்திணையும் அடக்கம், புறத்திணையும் அடக்கம். தலைவி, தலைவனைப் பிரிந்து தனித்திருப்பதைப் பற்றி கூறுவதால் இப்பாடல் அகத்திணையாம். மற்றும் போர்களத்துப் பாசறை பற்றியும் அதில் தலைவனுடைய பங்கு பற்றியும் கூறுவதால் இப்பாடல் புறத்திணையுமாம்.

உள்ளடக்கத்தால், முல்லைப்பாட்டு அகமும் புறமுமான திணை மயக்கத்தில் இருந்தாலும், திணைகளின் கூட்டு விகிதங்கள் சரியாய் அமைவதால், இத்திணை மயக்கமே முல்லைப்பாட்டுக்குச் சிறப்பாய் அமைவதைக் காண்கிறோம். தலைவியின் தவிப்பை முதலாவதாகக் கொண்டு பாடல்கள் துவங்குவதால் அகத்திணை சார்ந்த தலைப்பாக 'முல்லைப் பாட்டு' என அமைந்தாகக் கருதலாம்.

### இடைப் பிறவரலான காட்சியமைப்பு

இப்பாடலுக்கான கதை அமைப்பின் மற்றுமொரு சுவையான அமைப்பியல் உத்தியை அறிஞர் சாமி சிதம்பரனார் தனது 'பத்துப் பாட்டும் பண்டைத் தமிழரும்' என்ற நூலில் சுட்டிக்காட்டுகிறார்.

போர் முடித்துக் கார் காலத்தில் திரும்புகிறேன் என்று வாக்களித்துச் சென்ற தலைமகன் கார் காலம் துவங்கியும் வந்தானில்லை, என்ற தவிப்பில் துவண்டிருக் கிறாள் தலைவி அவளது வாட்டத்தைப் போக்க பெரு முது பெண்டிர் அருகில் உள்ள கோவிலுக்குச் சென்று நெல்லொடு மலரும் கலந்து படைத்து இறைவனை வணங்குகிறார்கள். தலைவியின் வாட்டம் போக்க நல் நிமித்தம் கேட்டு நிற்கிறார்கள். கோவிலுக்குப் பக்கத்தில் உள்ள ஆயர் சேரியில் பெண் ஒருத்தி, பசுவைப் பிரிந்த கன்றுக்குச் சொல்வதாக 'இதோ, மேய்ச்சலுக்குச் சென்ற உன் தாய் வருகிறாள், கவலை கொள்ளாதே!' என்ற நன்மொழி கேட்கிறது. அதனையே தலைவனைப் பிரிந்த தலைவிக்கான நல்ல சகுனமாய் எடுத்தியம்பி தலைவியைத் தேற்றுகிறார்கள். அவளோ தேறுதல் அடையாதவளாய் கலங்கி நிற்கிறாள் என்பதை 1 முதல் 23 வரையிலான வரிகளில் காட்சிப்படுத்தி நிறுத்துகிறார் நப்பூதனார்.

இனி தலைவியின் துன்ப நிலையை இத்துடன் விட்டு, தேர்ந்த திரைக் கலைஞன் போல, இடைப் பிறவரலாக (deviation of sequence) ஆசிரியர் வினை மேற்சென்ற தலைவன் நிலையை 24 முதல் 79 வரையிலான வரிகளில் விவரித்துக் காட்டுகிறார். போர் பாசறையின் அமைப்பு அதன் ஒழுங்கு சிறப்பாக சித்தரிக்கப்படுகின்றன.

மீளவும், "இன்துயில் வதியுநற் காணாள் துயர் உழந்து" (வரி-80) எனத் தலைவிக்கே இத்துணைப் பொருளையும் அடையாளமாக மேற்படுத்தி, மீண்டும் இடையறுத்து காட்சிகளை அமைத்து காட்டியது காணலாம். இது வாசிப்பவர் உள்ளத்தில் தேர்ந்த உத்தியிலான இன்பத்தை தருவதாக அமைகிறது.

### மயங்கும் திணை ஒழுக்கம்

ஒவ்வொரு நிலத்திற்கும் ஒரு வகை ஒழுக்கமாக, ஐவகை நிலத்திற்கும் ஐவகை ஒழுக்கத்தை இலக்கண மிட்டுக் காட்டுகிறது தொல்காப்பியம்.

குறிஞ்சியில் புணர்தலும் புணர்தல் நிமித்தமும், முல்லையில் இருத்தலும் இருத்தல், நிமித்தமும், மருதத்தில் ஊடலும் ஊடல் நிமித்தமும், நெய்தலில் இரங்கலும் இரங்கல் நிமித்தமும், பாலையில் பிரிதலும் பிரிதல் நிமித்தமும் என நிலத்திற்கான ஒழுக்கங்களாக வரையறுத்துள்ளனர் நம் முன்னோர்.

அவ்வாறே, முல்லை நிலத்தில் தலைவியும் தலைவனும் பிரிவு வந்துற்ற போது, தலைவியானவள் தலைவன் வரும் வரை அவன் வருகையே நோக்கி ஆற்றி இருத்தல் வேண்டும். அழுது அரற்றுதல் கூடாது. அவ்வாறு அழுது அரற்றுவாள் ஆயின், அத்திணை ஒழுக்கம் இரங்கலும் இரங்கல் நிமித்தமுமாகிய நெய்தல் நிலத்திற்கு உரியதாக மாறிவிடும்.

முல்லைப் பாட்டின் தலைவி கார் காலம் துவங்கியும் வராத தலைவனை நோக்கித் துயர் கொள்கிறாள். அவளது வாட்டத்தைப் போக்க பெரு முது பெண்டிர் பல்வேறு விதமாகத் தேற்றுகிறார்கள். எனினும் தேறாதவளாகிய தலைவியின் கண்களில் கண்ணீர் அரும்புகிறது என்கிறார் நப்பூதனார்.

> "பருவரல் எவ்வம் களை மாயோய் எனக்
> காட்டவும் காட்டவும் காணாள் கலுழ் சிறந்து
> பூப் போல் உண் கண் புலம்பு முத்துஉறைப்ப" (21-23)

இவ்விடத்தே நுட்பமானதொரு திணை மயக்கத்தை ஆய்வு செய்து புலப்படுத்துகிறார் 'உரைவேந்தர்' ந.மு.வேங்கடசாமி நாட்டார். முல்லை ஒழுக்கத்தில் தலைவனை நினைத்து ஆற்றியிருக்க வேண்டிய தலைமகள் அதனையும் தாண்டி துயர் கொள்கிறாள். எனவே அவளது கண்களில் கண்ணீர் பெருகிறது. ஆனால் அக்கண்ணீர் துளிகளாகி சிந்தி விடுமேயாகில் அது நெய்தல் திணைக்குரிய இரங்கல் நிமித்தமாகி விடும். அதனைத் தவிர்க்க முல்லை நிலத்தின் ஒழுக்கத்தை நிறுவிக்காட்ட, தலைமகள் கண்களில் துளிர்ந்த கண்ணீர் வீழ்ந்து படாமல் கண்களில் உருண்டு திரண்டு நிற்பதாகக் காட்டி நிறுத்துகிறார் ஆசிரியர்.

### போர்ப் பாசறையில் பெண்கள்

முல்லைப் பாட்டின் பல்வேறு சிறப்புகளுள், போர்ப்பாசறை அமைப்பு விளக்கத்தையும் அவற்றுள் பயின்று வரும் காவல் முறைகள் பற்றிய பதிவையும் கூறலாம்.

பொதுவாகப் போர்க்களத்திற்குப் பெண்கள் செல்வதில்லை. ஆனால் போருக்குப் பிந்தைய அல்லது போருக்கு முந்தைய பாசறைப் பணிகளில் மகளிர் பெரிதும் ஈடுபட்டுள்ளதை முல்லைப் பாட்டு தெள்ளதின் விளக்குகிறது.

சிறிய வளையல்களை அவர்கள் முன் கையில் அணிந்திருக்கிறார்கள். அவர்களது கூந்தல் அவிழ்ந்து முதுகிலே கிடக்கிறது. அவர்களது இடுப்பிலோ, இரவைப் பகலாகக் காட்டக் கூடிய ஒளி பொருந்திய வாள் தொங்கவிடப்பட்டுள்ளது. பாசறையின் நீண்ட பந்தங்களில் நெருப்பு அணையாமலும், பாவை விளக்கின் கையிலே எரிக்கின்ற விளக்கு அணையாமலும் நெய்வார்த்துப் பார்த்துக் கொள்கிறார்கள் அவர்கள்.

> "குறுந்தொடி முன் கைக் கூந்தல் அம்சிறு புறத்து
> இரவு பகல் செய்யும் திண்பிடி ஒள்வாள்
> விரிவு வரிக்கச்சின் பூண்ட மங்கையர்" (45-47)

என்பது பாடல் வரிகளாகும். ஆண்களின் வீரத்திற்கு உதவியாக இங்கே பெண்களின் வீரமும், கடமையும் 'நெய்யுமிழ் விளக்கின் வெளிச்சம்' போலப் பரவுவதைக் காண்கிறோம்.

### யவனரும், மிலேச்சரும்

அரசனுக்குரிய போர்ப்பாசறை 'ஈர் அறைப் பள்ளி'யாக அமைக்கப்பட்ட நுட்பமும், அதில் காவல் காக்க வலிமைமிக்க உடலமைப்பு கொண்ட 'யவனர்' களும் உள் அறையில் கண்களாலும், செய்கையாலும் மட்டுமே பேசிக் கொள்ளும் வாய் பேசாத 'மிலேச்சர்' களும் பணியமர்த்தப்பட்ட மதிநுட்பத்தையும் முல்லைப் பாட்டின் வாயிலாக நாம் அறிகிறோம்.

"உடம்பின் உரைக்கும் உரையா நாவின்
படம் புகு மிலேச்சர் உழையர் ஆக" (65-66)

இதில் 'மிலேச்சர்' என்பார் பலுசிஸ்தானத்து, நமது மொழி அறியா வீரர்கள் என்றும், வாய்ப் பேச்சில்லா ஊமைகள் என்றும் பொருள் கொள்வார் உண்டு. எவ்வாறாயினும் போர்த் தந்திர ரகசியங்கள் பகிரப்படும் உள் அறையில் வாய் பேசாதவர் பணியில் இருப்ப தென்பது சிக்கலற்ற போர் நிர்வாகத் திறனாகும். அதில் 'உழையர்' என்ற சொல் அருகில் இருந்து பணியாற்றுபவர் (மிலேச்சர்) என்ற தெளிவை தருகிறது.

### பாட்டுடைத் தலைவன் யார்?

பத்துப் பாட்டுக்களுள், ஏனைய பாடல்கள் (குறிஞ்சிப் பாட்டு தவிர்த்து) யார் மீது பாடப்பட்டவை என்பதற்கான விளக்கம் தெளிவாய் இருக்கிறது. ஆனால் முல்லைப்பாட்டு யார் மீது பாடப்பட்டது என்பதற்கும், பாட்டுடைத் தலைவன் யார்? என்பதற்கும் விளக்கம் ஏதுமில்லை. இது 'தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்' மீது பாடப்பட்டதென சிலர் கருதுவர். ஆனால் அதற்கான அகச்சான்றுகள் அல்லது குறிப்புகள் ஏதும் இப்பாட்டில் இல்லை.

பாட்டுடைத்தலைவன் இவன், என்ற பிம்பம் கட்டமைக்கப்படாமலே வெறும் 103 ஆசிரியப்பா வரிகளில் நிகழ்த்திக் காட்டிய அற்புதம் முல்லைப் பாட்டு என்றால் அது மிகையில்லை.

அள்ள அள்ளக் குறையாத ஆய்வுக் குறிப்புகள் முல்லைப்பாட்டின் நிறைந்து கிடக்கின்றன காலத்தின் கண்ணாடியாகிய முல்லைப்பாட்டு எதிர்கால கூர்ந்தாய்வுகளில் மேலும் துலக்கமுறும் என்பது உறுதி.

### மேற்பார்வை நூல்கள்


1. பத்துப் பாட்டும் பண்டைத் தமிழரும் - சாமி சிதம்பரனார்
2. பத்துப்பாட்டு மூலமும் உரையும் - புலவர் அ.மாணிக்கம்
3. சங்க இலக்கியம் பத்துப்பாட்டு மூலமும் உரையும் - என்.சி.பி.எச். வெளியீடு
4. என் சரித்திரம் - உ.வே.சாமிநாதய்யர்.



**இலங்கை வாசகர்கள்**

**கவனத்திற்கு...**

நியூ செஞ்சுரி புத்தக நிறுவன

வெளியீடுகளை வாங்கவும்,

**மார்க்ஸ் எங்கெல்ஸ் தேர்வு நூல்கள்**

20 தொகுதிகள்

இலங்கையில் உள்ள வாசகர்கள்

முன்பதிவு செய்து கொள்ளவும் அணுகவும்

**பூபாலசிங்கம் புத்தகச் சாலை**

202, செட்டியார் தெரு,

கொழும்பு - 11

தொடர்புக்கு : 011-2422321, 0777271975

1/8 டெமி அளவில்

சுமார் 7600 பக்கங்களுக்குமேல்

அழகிய வடிவமைப்பில், தரமான தாளில்

விலை ₹ ~~5000/-~~

முன்வெளியீட்டுத் திட்டத்தில்

₹ 2500/- மட்டுமே

**31-01-2018 வரை**

**முன்பதிவு செய்து கொள்ளலாம்**



# விவேகானந்தர் பார்வையில் அரசு சமூகம் சோசலிசம்

ஆர். பட்டாபிராமன்

State, Society and Socialism என்கிற தலைப்பில் விவேகானந்தரின் கருத்துக்கள் அவரது நூல் தொகையிலிருந்து சேகரிக்கப்பட்டு புத்தகமாக வெளியிடப்பட்டுள்ளது. கல்கத்தா அத்வைத ஆசிரமம் 25 ஆண்டுகளுக்கு முன்னர் இதை வெளியிட்டனர். இப்புத்தகம் கேள்வி பதில் முறையில் அமைக்கப்பட்டுள்ளது. அவரது நூல்தொகையிலிருந்து ஆதாரம் உள்ள பகுதிகளை சுட்டிக்காட்டியுள்ளனர். அதே நேரத்தில் சகோதரி நிவேதிதா கருத்துக்களும், சுவாமி அவர்களின் மறைவிற்கு 15 ஆண்டுகள் பின்னர் உருவான சோவியத் லெனின் ஆட்சி குறித்தும் இதில் கருத்துக்கள் ஓரிரு இடங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளன. எனவே வாசகர்கள் அவரது சிந்தனைகளையும் - அவரை பின்பற்றி சொல்பவர்கள் எழுத்துக்களையும் பிரித்து அறிய வேண்டியுள்ளது. இப்புத்தகம் சமூகம் - அதன் அம்சங்கங்கள், வரலாறும் முன்னேற்றமும், அரசும் வர்க்க ஆட்சியும், சுரண்டல் வடிவங்கள், ஜனநாயகமும் சோசலிசமும், புரட்சியும் சமூக மாற்றமும் என 7 பகுதிகளில் விவாத வடிவில் தொகுக்கப்பட்டுள்ளது. விவாதத்தின் சில முக்கிய அம்சங்கள் இக்கட்டுரையில் இடம் பெறுகின்றன.

பல்வேறுநாடுகளில் சமூகம் உருவாகி மாறி வருகிறது. கடலை நம்பி வாழ்ந்தவர், காடுகளில் வேட்டையாடி வாழ்ந்தவர், கால்நடை வளர்த்தோர், பயிர்த்தொழில் செய்தோர் என பல்வேறு பகுதியினர் - அவர்களிடம் ஏற்பட்ட பூசல்கள் ஆகியவற்றை ஒழுங்கு படுத்த சிறு ராஜ்யங்கள் தோன்றின. அசுரர் - தேவர் பண்புகளுடன் உருவான மோதல்கள் பின்னர் அரசாங்கத்திற்கு வழிவகுத்தன இவர்கள் மத்தியில் கலப்பும் உருவாகி இந்த fusionலிருந்து நவீனகால இனங்கள், சமூகங்கள், பழக்கவழக்கங்கள் உருவாகின. அறிவியல் கருத்துக்கள் தோன்றலாயின என விவேகானந்தர் சமூகம் - சிற்றரசு - அரசு உருவாக்கம் பற்றி விவரிக்கிறார்.

ஒருவர் வயலில் உழைத்தார். விளைபொருட்களை விற்க வைஸ்யர் வந்தார். மற்றவர்கள் அதை பாது காப்பதாக சொல்லி அபகரித்தனர். உழைப்பவர் காயத் துவங்கினர். நான்கு வர்ண முடிச்சுகள் சமூகத்தில் இறுகின. நாம் பார்க்கும் நவீன சிக்கலான சமூகம் வந்து விட்டது என்கிறார்.

கிழக்கு மேற்கு சமூக உருவாக்கங்கள் - வேறு பாடுகள் குறித்தும் விவாதிக்கிறார். ஆசிய வகைப்பட்ட நாகரீகம் கங்கை, ஈப்ரடிஸ், யாக்டிசியாங் போன்ற ஆற்றங்கரையில் வளர்ந்தன. அய்ரோப்பிய சமூகமோ கடல் கொள்ளையில், குன்றுப் பகுதிகளில் வளர்ந்தது. இதை தேவ அசுர தன்மை என அவர் விவரிக்கிறார். அய்ரோப்பாவில் அரசியல் கருத்துக்களை கொண்ட தேசிய ஒற்றுமை உருவானது. ஆசிய சமூகங் களில் சமய கருத்துக்கள் வடிவில் தேச ஒற்றுமை உருவானது. Introspective என்பது கிழக்கிலும் Scientific/ out seeing என்பது மேற்கிலும் இருந்தன. இந்தியாவில் அத்வைத ஒளியில் சோசியல் கம்யூனிசம் என சகோதரி நிவேதிதா பேசுகிறார். மற்றொரு அம்சத்தை விவேகானந்தர் பளிச்சென விளக்குகிறார். மேற்கில் மனிதன் தனி மனிதனாகவே (as individual) பிறக்கிறான். இந்தியா விலோ அவன் சமூக மனிதனாக தனது சாதியில் பிறக்கிறான். அதன் கட்டுக்குள்ளேயே வளர்கிறான்.

பண்டைய இந்தியாவில் நிலங்கள் பொதுவானது அரசனுக்கு / அரசிற்கு சொந்தம். கிராமத்திற்கு பொது வாக அவை சாகுபடிக்கு கொடுக்கப்படும். விளைச்சலில் ஒருபகுதியை அரசாங்கத்திற்கு தரவேண்டும். கிராம மருத்துவம், பள்ளிகள் வேறு பொது அம்சங்களை நிர்வகித்துக் கொள்ளவேண்டும். அய்ரோப்பிய சமூகம் போர் சமூகம். வாள் கொண்டு ஆளும் சமூகம். வாள் அங்கு நாகரீகம். ஆசியா மைனர் வழியே ஆசிய இனங்கள் சில அங்கே முன்னேறி சென்றிருக்கக்கூடும். இதன்மூலம் கலப்பு நிகழ்ந்தது. ருஷ்யாவின் மொழி கூட்டத்தில் தென்னிந்திய மொழிகூட்ட சாயல் தெரிகிறது என தன் ஆய்வை சுவாமி முன்னெடுக்கிறார் . கிரேக்கத்தில் யவன நாகரீகம் இவ்வாறு ஏற்பட்டது. பலரை வென்றுதான் ரோமராஜ்யம் உருவாக்கப்பட்டது. யூதர்கள் பல்வேறு இடங்களுக்கு செல்ல நேர்ந்தது. அய்ரோப்பாவின் காட்டுமிராண்டி இனம் வாளால் தன்னை உருவாக்கி கொண்டது என்கிறார். பின்னர் கிறிஸ்துவமதம், ராணிக்களின் அதிகார ஆட்சி என வளர்ந்தது. அரேபியர் பாலைவனப்பகுதியிலிருந்து இஸ்லாம் புறப்பட்டது. அது எல்லாவற்றையும் தூக்கி சென்றது. இந்தியாவில் அய்ரோப்பாவில் இஸ்லாம் நுழைந்தது.

ரோம சாம்ராஜ்ய அழிவிற்கு பின்னர் Franks செல்வாக்கு அய்ரோப்பாவில் பரவியது. இப்போது நாம் பரங்கியர் என இச்சொல் மூலம் தான் அவர்களை குறிக்கிறோம். வாள் மூலம் பெர்ஷிய நாகரிகம் பரவியது. கிரீசின் அறிவுத்தாகம், கலை உணர்வுகள் பின்னர் இத்தாலியில் பிளாரன்ஸ் மறுமலர்ச்சியாக வெளிப் பட்டது. நாம் இன்று உணரும் அய்ரோப்பா *16* ஆம் நூற்றாண்டின் உருவாக்க தொடர்ச்சி. இந்தியாவில் அப்போது அக்பர், ஜஹாங்கிர், ஷாஜஹான் முகல் ஆட்சி நடந்திருக்கும். பின்னர் வந்த நூற்றாண்டுகள் பிரஞ்சு புரட்சியின் சுதந்திரம் - சகோதரத்துவம், சமத்துவம் முழக்கங்களை கண்டன. பிரான்சில் அது பேசப்படுகிறதோ இல்லையோ, உலக நாடுகளை அம்முழக்கம் கவ்விப் பிடித்தது.

வடக்கில் இமயம், தெற்கில் சமவெளி, இடையில் காடுகளின் பகுதியாக இந்தியா என்பது உணரப்பட்டது. திராவிடர், பூர்வீக குடிகள் அவர்களது வழக்கம் - சமயம் இருந்தன. ஆரியர் என்ற பெருமித இனம் பல்வேறு அம்சங்களை அவர்களிடமிருந்து எடுத்துக் கொண்டாலும் இவர்களை தனித்தே வைத்திருந்தது. வாளின் வலிமை யிலாது மதிநுட்ப புரோகித வர்க்கம் செல்வாக்கு பெற்றது. உயர்தட்டாக மாறியது. குலத்தொழிலாக தொடர்ந்த குடும்பங்கள் சாதிகளாக இறுகின. எல்லைகளை வகுத்துக்கொண்டன. சாதியை எவரும் தாண்டமுடியாது. பிரிவினையாக சாதிகள் எனவும், சாதிக்குள் உதவிக்கொள்ளும் சமூகம் என்ற ஏற்பாடாக இருந்தது. சாதி என்கிற கட்டுமானம் ஆரோக்கிய போட்டி என்பதை மட்டுப்படுத்திவிட்டது. இதுவே இந்திய அரசியலின் வீழ்ச்சிக்கும் காரணமாகியது. நூற்றாண்டுகளுக்கு முன்னர் உலகின் பெரும் வர்த்தக மையம் இந்தியா. பருத்தி, சணல் சாயப்பொருட்கள், அரிசி, முத்து, பவளம், உயர்தர பட்டு, கம்பளி என ஏற்றுமதி செய்த நாடு இந்தியா. ஆப்கான், பெர்சியா வழியாக வர்த்தகம் செழித்தது.

ஆன்மீக வழியை அனைவருக்கும் திறக்க கிருஷ்ணன், சமூக சமத்துவத்திற்காக புத்தம் - வைஷ்ணவம் என போராட்டங்கள் நடந்தன. ஆன்மீக சமத்துவம் பேசிய நாடு சமூக வேறுபாடுகளை கொண்டே நகர்ந்தது. வடக்கில் குமரிலர், தெற்கில் ஆதிசங்கரர் ராமானுஜர் செக்ட் வகைப்பட்ட கோட்பாடுகள், சடங்குமுறை யிலான இந்துயிசம் உருவாயின. சங்கரரின் இயக்கம் மக்கள் தொண்டு இயக்கமாகாமல் அறிவு இயக்கமானது. சமஸ்கிருத வாகனத்தையும், சாதிய சட்டங்களுடனும் அது பயணித்தது. ராமானுஜர் உணர்வுகளின் எழுச்சி யாய் நடைமுறைத் தத்துவங்களுடன் சாதாரண மக்களை ஈர்த்து பயணித்தார். ராமானந்தர், கபீர், சைதன்யர், நானக் மனிதர்களின் சமத்துவம் என பேசினர். அதே நேரத்தில் பல்வேறு தத்துவதிசைகளில் அவர்களது பயணம் சென்றது.

முகலாயர்கள், பிரஞ்சுகாரர்கள், ஆங்கிலேயர்கள் என நுழைவை கண்டோம். ஆங்கிலேயர் வெற்றி பைபிளின் வெற்றி என பேசப்பட்டது. ஆனால் அவர்களின் உண்மையான யுத்தக்கொடி 'ஆலை

சிம்னிகளில்' பறந்தது. ஒவ்வொரு நாடும் தனக்கென செயல்முறைகளை கொண்டிருந்தன. சில அரசியல் வழி - சில சமூக சீர்திருத்த வழி என அடையாளம் பெற்றன. இங்கிலாந்து அரசியல் மூலம் சமயம் என அறியப் பட்டால் அமெரிக்காவை சமய சீர்திருத்தங்கள் மூலம் சமயம் என புரிந்துகொள்ளவேண்டியுள்ளது. உலக பாதுகாப்பு என்பது தேசங்களின் கருத்தாக இல்லாமல் போனால் அழிவுதான். நமது நாடு பல துயர்களையும் தாண்டி நிற்கிறது எனில் இந்த உலக பாதுகாப்பு எனும் எண்ணத்தால்தான். அய்ரோப்பியர்களுக்கு தாங்கள் இல்லாவிட்டால் உலகம் நகராது என்ற எண்ணம் உள்ளது. இந்த எண்ணம் அவர்களை வலிமைப் படுத்தியும் உள்ளது.

பிரஞ்சு மக்கள் அரசியல் சுதந்திரம் என்பதில் உறுதி பூண்டவர்கள். அரசாங்கத்தின் தாக்குதல்களை கொடுமைகளை கூட அவர்கள் சகித்துக் கொள்வர். ஆங்கிலேயர் give and take என்பர். இந்தியர் சிந்தனை முக்தியாகும் - ஆன்மீக சுதந்திரம் - விடுதலை என்கிறோம். இதை தொடாமல் யார் எதை செய்தாலும் இந்தியர்கள் சகித்துக் கொள்கின்றனர். ஒன்று மட்டும் உறுதி. சமூக, அரசியல், ஆன்மீகம் என்பதில் நானும் என் சகோதரனும் சமம்தான் என்ற பேருண்மை அனைத்து நாடுகளுக்கும் அனைத்து மக்களுக்கும் தேவைப்படுகிற ஒன்று. இந்தியாவின் சீரழிவிற்கு இங்கு நிலவிய பண்டைய பழக்கங்களோ சட்டங்களோ காரணமல்ல. அவற்றை சரியாக பின்பற்றாமைதான் என சொல்லும்போது சுவாமி எந்த சட்டம் - பழக்கத்தை சொல்கிறார் என ஊகிக்க முடியவில்லை. மனுவாக இருந்தால் அது இன்றைக்கு விவாதத்திற்குரியதாக மாறும்.

இந்திய சீன நாகரிகங்கள் உறைந்து போனதற்கு அங்கு நிலவிய வறுமைதான் காரணம் என்றார் சுவாமி. அன்றாட வாழ்விற்கே போராடும் மனிதனால் சிந்தனை புரட்சியை எவ்வாறு மேல் நகர்த்த இயலும் - புதியன காண நேரமேது என வினவினார். தர்மம், துறவு, மோட்சம் என்கிறோம். முதலில் மனிதன் அனைத்து மகிழ்ச்சியையும் பெறட்டும். பின் அவன் அவற்றை துறக்கட்டும். தேசம் முழுதும் ஒரே நேரத்தில் சந்நியாசம் எடுத்திடமுடியாது என்றார். புத்த மதத்தில் இந்த தவறுதான் நடந்தது. அனைவருக்கும் சீருடை என்பதை புகுத்திடமுடியாது என கேலி செய்கிறார். சுயதர்ம்ம் என்கிறோம். மோட்சம் பெரிய விஷயம்தான். ஓரடிகூட எடுத்து வைக்க முடியாதவனை இலங்கைக்கு பாய வைக்கமுடியாது என்கிற எதார்த்தம் உணர்த்துகிறார்.

தர்மம் என்பது செயல் சார்ந்தவை. செயலுக் காகவே வேதம் என்றார் ஜைமினி. அவரவர் கடமை அவசியமாகிறது. மனிதனுக்கு தைரியம் தேவை. நிலைமைகளுக்கேற்ப அவரவர் ஹீரோ ஆகவேண்டும். யாரையும் வதைக்காமல் காரியமற்றிடவேண்டும். ஆயிரம் முறை ஓம் உச்சரித்துவிட்டோம் ஒன்றும் நடக்கவில்லை. பாவம் போகும் என்றார்கள். பல ஆண்டுகள் உச்சரித்தும் பலனில்லை. நாம் சரியாக புரிந்துகொள்ளாததின் விளைவு இது. சித்த சுத்தி என்கிற செயலில் பரிசுத்தமாகும் புத்தி அவசியம். மோட்ச காரியங்கள் வேறு. தர்ம காரியங்கள் வேறு என கீதையில் கிருஷ்ணன் வகைப்படுத்துகிறார். செயல்படும் போது நன்மை தீமைகள் உருவாகும். சும்மாயிருப்பதை விட அது மேலானதல்லாவா என வினவுகிறார் சுவாமி.

கீதையில் விவேகானந்தர் சாரப்படுத்துவது அதன் அத்தியாயம் 2ல் 'களைப்படையாதே பார்த்தா' என்கிற பாடல். எழு செயல்படு என்கிற உற்சாகப்படுத்தும் - செயலுக்கு உந்தித் தள்ளும் முழக்கம் அப்பாடலில் தொழிற்படுவதால் விவேகானந்தர் அதை திரும்ப திரும்ப எடுத்து பேசுகிறார். Arise Acquire Fame என்பார். சமூகம் வலிமை பெற அனைவருக்கும் கல்வி தான் வழி என்கிறார். மக்கள் கற்பிக்கப்படுவதன் மூலம் நமது தேசம் எழட்டும் என்கிறார். நல்லதின் சக்தியை உணர்தல், பொறாமை விட்டொழித்தல், அனைவருக்கும் நன்மை செய்தல் என்ற மூன்று அம்சங்கள் நம் எல்லாருக்கும் வலிமையை தரும் என்கிறார்.

நாம் விதவை திருமணம் என பேசினோம் ஆனால் உண்மையில் ஒரு பெண்ணிற்கு எத்தனை கணவன் கிடைக்கிறான் என்பது அல்ல முன்னேற்றம் - அங்குள்ள வெகுஜன மக்களின் வாழ்வில் என்ன மாற்றம் என்பதுதான் முன்னேற்றம் என சீர்திருத்தம் என்பதை redefine செய்கிறார். இந்த உதாரணத்தை அவர் ஏன் எடுத்துக் கொண்டார் என புரிந்துகொள்ள முடிய வில்லை. மறைமுகமாக வங்க சீர்திருத்தவாதிகள் எவரையாவது விமர்சனம் செய்கிறாரா? அவரது லட்சிய சமூகம் உடல் மற்றும் ஆன்மீக விடுதலையில் இருப்ப தாக சொல்கிறார். எந்திரங்கள் மட்டும் வறுமையை ஒழித்துவிடாது - மாறாக அவை நம் போராட்டத்தை அதிகப்படுத்திவிட்டன என்ற விமர்சனம் அவரிடம் இருந்தது. மனிதனின் தெய்வீகத்தன்மையை உணர்த்தாத எதுவும் நாகரீகமாகாது என்கிறார்.

II

எங்கு போராட்டம் உள்ளதோ, எதிர்ப்புணர்வு இருக்கிறதோ அங்கு விழிப்புணர்வும் உயிரும் உள்ளது. ஒன்றுபடுத்திக்கொண்டேயிருக்கும் சக்தியும், வேறு படுத்தும் சக்தியும் இயற்கையில் உள்ளன. இந்த இருசக்தி தன்மை இயற்கையின் ஒவ்வொரு துறையிலும், மனித வாழ்விலும் நிலவுகிறது.

மனித வளர்ச்சி நாகரீகம் என்பது இயற்கையை கட்டுப்படுத்துவதாகவே உள்ளது. மாறுபட்ட நடவடிக் கைகள் மூலம் இக்கட்டுப்பாட்டை மேற்கொள்ள மாறுபட்ட மனித இனங்கள் முயற்சித்தன. தங்கள்

மக்களின்மீது பேரன்பும், பிறர்மீது வெறுப்பும் என்பது தொழிற்பட்டது. பெர்சியா எதிர்ப்பில் கிரீஸ், கார்த்தேஜ் - ரோம், காபீர் - அரபியர், ஸ்பெயின் - பிரான்ஸ், பிரான்ஸ் - இங்கிலாந்து என ஒன்றை விஞ்சி ஒன்றின் முன்னேற்றம் எட்டப்பட்டன. இவர்கள் ஒன்றுபட்டும், வேறுபட்டு நின்று எதிர்த்தும் கொண்டனர்.

உலக வரலாற்றை பார்த்தால் ஒவ்வொரு கட்டத்திலும் ஒரு பெரும் ஆன்மா, அவரது சிந்தனை களை பின்தொடர்ந்த மக்கள் என்பதை காண்கிறோம். மனிதர்கள் பட்டினியில்லாமல் உயிர்வாழவேண்டும் என்ற தேவை இயக்கிக்கொண்டே இருக்கிறது. பிராமணர்கள் கற்பதுதான் சக்தி என்றனர். சத்திரியர் வாள் என்றனர். வைஸ்யர் மின்னும் தங்கம் என்றனர். ஆனால் கவனிக்கவே பெறாத அடித்தட்டு வர்க்கம் நிலத்தில் உழைத்துக் கொண்டேயிருந்தது. யார் ஆண்டபோதும் அது அமைதியாக எதிர்க்க சக்தியின்றி உழைத்துக் கொண்டேயிருந்தது.

சமூகத்தில் ஒரு கட்டத்தில் சில குடும்பங்கள் கையில் சாதியிடத்தில் அறிவுக் குவிப்பு, வலுப் பெருக்கம், செல்வக்குவிப்பு தேவைப்பட்டிருக்கலாம். ஆனால் அவை சாசுவதாக நீடிக்க வேண்டியதில்லை. அவைகள் diffuse - அதாவது பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்க வேண்டும் என்கிறார். அறிவோ அதிகார குவிப்போ செல்வமோ ஓரிடத்தில் என நிலைப்பெற்று விட்ட சமூகம் அழிந்துவிடும் என்றார்.

“அதிபௌதிகா அதிதெய்விகா அத்யத்மிகா” (Adhibhautika, Adhidaivika, Adhyatmikaa) என்ற மூன்றுவகை துன்பங்கள் பற்றி அவர் குறிப்பிடுகிறார். இயற்கை பேரிடர்கள், சமூக தீமைகள், ஒருவரின் மோச மான உணர்ச்சி தூண்டல்களின் மூர்க்கம் ஆகிய வற்றையே இவ்வாறு குறிப்பிடுகிறார். இந்த மூன்றையும் சமூகம் வெல்லவேண்டும். வெல்லவேண்டியது அவசியம் என்றார்.

அறிவிற் சிறந்தவர் சிலர் இருக்கலாம். உடல் வலு சிலரிடம் இருக்கலாம். ஆனால் இவை சலுகையாகி விடக்கூடாது சமூகப் பயன்பாட்டிற்கு உதவக்கூடியதாக இருக்க வேண்டும் என்றார். இயற்கை சார்ந்த வேறு பாடுகள் இருந்தாலும் சமூகம் எனில் சம வாய்ப்புகள் இருக்கவேண்டும். இன்று பிராமண சிறுவன் கற்க ஓராசிரியர் போதும் எனில் சண்டாள சிறுவனுக்கு பத்து ஆசிரியர் தேவைப்படுகிறது என affirmative action பற்றி அவர் பேசி நம்மை பிரமிக்க வைக்கிறார். அப்போதுதான் வாய்ப்புகள் நேராகும் என்கிறார். நீ அரசாள்கிறாய் - நான் செருப்பு தைக்கிறேன் என்பதற்காக. என்னைவிட நீ உயர்ந்தவன் என ஏற்பதற்கில்லை என்கிறார். எங்கு போனாலும் சாதி குழுக்கள் இருக்கின்றன. இதன் பொருள் சிலருக்கு மட்டும் உயர் சலுகைகள் என்பதாகக் கூடாது. ஒரே கடவுள்தான் நம் இருவரிடமும் உறைந் துள்ளார். பின் எதற்கு தனி உயர் சலுகை என கேட்கிறார். சுதந்திரம் என்பதுதான் வளர்ச்சியின் முதல் நிபந்தனை என திரும்ப திரும்ப அழுத்தமாக எடுத்துரைக்கிறார்.

புரோகித வர்க்கம் நாகரிகத்தின் வருகையாகவும், பொருட்களின் மீதான கருத்துக்களின் ஆதிக்கமாகவும் இருந்தது. மானுட வர்க்கம் அநீதி, சுயநலம், கபடத்திற்கு பலியானது. அதீத இயற்கையின் குரலுக்கு செவிமடுப்பது என்ற பெயரில் அறிவும் ஞானமும் புதியன காண்பதும் முடங்கின. ஆனால் இயற்கை எப்போதும் புத்தாக்கத்தை தான் வரவேற்கும். தானே பின்னிய சிலந்தி வலையில் அவ்வர்க்கம் மாட்டிக்கொண்டது. தாங்க முடியாத எண்ணற்ற சடங்குகள், ஆசாரங்கள், பழக்கங்கங்கள் என சமூகத்தை இரும்பு சட்டகத்தில் வைத்துவிட்டது. அவ நம்பிக்கையின் ஆழ் உறக்கமது. எனவே வலையை அறுத்தெறிய வேண்டும். அதன் அடித்தளத்தை ஆட வைக்கவேண்டும். பிராமணர்கள் மீது சமூகத்திற்கு நம்பிக்கை போய்விட்டது. தனக்கான SEPULCHRE எனும் கல்லறையை தன் கரங்களாலேயே கட்டிக் கொண்டு விட்டது. தனக்கான சிதையை அதுவே மூட்டிக் கொள்வது சரியானதேயாகும்.

அரசனோ பாதி கடவுள் - பாதி மிருகமாக இருந்தான். அவனுக்கு தேவை என்றால் தனது கூரிய நகங்களால் அப்பாவிகளை பிளந்து இரத்தம் குடிக்கும் மிருகமாக இருந்தான். சமூகத்தேவைகள்தான் அரசனை பிறப்பித்தன. சிதறிக் கிடப்பவர்களை திரட்டி ராஜ்யம் அமைக்கும் பணி செய்யப்பட்டது. இன்ப வேட்கைகளில் மட்டும் அவன் ஆழ்ந்துவிடவில்லை. கலை, அறிவியல், சிற்பம், இசை, ஓவியம் என புத்தாக்கங்களும் நடந் தேறின. தங்களின் சாகசங்களை உலகிற்கு உணர்த்த வேண்டிய தேவை இருந்தது. ஒப்பில்லாத இறை அவதாரம், இறைஏற்பாடு என தங்களை அவர்கள் காட்டிக் கொள்ளவும் செய்தனர். அரச கட்டளைக்கு பயந்து பல திறமையாளர்கள் தங்கள் கைவண்ணங்களை ராஜ விசுவாசத்திற்காக செய்யவேண்டியிருந்தது. நகரங்கள் எழுந்தன. குடிகளுக்கு தந்தையெனப்பட்டார் அரசர். கேள்வி கேட்கமுடியாத பணிவு கோரப்பட்டது. எதிர்ப்பு ராஜதுரோகம், பாவம் என்று சொல்லப்பட்டது. தண்டனைக்கு உரியதானது. ஆனால் சமூகம் வலுவாக இருக்குமிடத்தில் ‘கோ’விற்கு எதிராக போராட்டங்கள் வெடித்தன. பல ராஜ்யங்கள் இன்று மியூசியத்தில் என்கிறார் விவேகானந்தர்.

வைஸ்யர்கள் அனைத்து தங்கமும் தங்களிடத்தில் என்றனர். நாங்களும் அதிகாரமிக்கவர்கள் என உரிமை கோரலாயினர். அதே நேரத்தில் பிராமணர். சத்திரியர் குறித்த அச்சமும் அவர்களிடம் இருந்தது. தங்கள் வர்த்தகத்தை நாடு கடந்து எடுத்து சென்றனர். கலாச்சாரம், அறிவுத்திறனும் கூடவே சென்றது.

ருஷ்யா சீனாவில் சூத்திரர் ஆட்சி எழும் என கணித்தவர் விவேகானந்தர் என அவரது சகோதரர் புபேந்திரநாத் தத்தா தனது பதிவாக செய்துள்ளார். சூத்திரர் எனும் உழைக்கும் மக்கள் எழுவர் - shudra hood உருவாகும் என்றார். சோசலிசம், அனார்க்கிசம், நிகிலிசம் என பேசப்படுவதெல்லாம் சமூக புரட்சியின் வாகனகங்களாக அமையும் என்றார் (ருஷ்யா அனார்க் கிஸ்ட்களை சந்தித்து உரையாடியவர் விவேகானந்தர்) சூத்திரர் ஆட்சியில் அனைவருக்கும் கல்வி பரவும். ஆனால் தனித்த அறிவுஜீவிகள் குறைவர் என்றார் சுவாமி.

முகலாயர் ஆட்சியில் குரான் செல்வாக்கு பெற்றது, சமஸ்கிருத செல்வாக்கு குறைந்தது (இந்துக்களில் அரசு வேலைகளில் பெர்ஷியன் தெரிந்தவர் வைக்கப்பட்ட சூழல் இருந்தது) புத்தர்களின் வீழ்ச்சிக்கும் முகலாயர் வருகைக்கும் இடையில் ராஜபுத்திரர் ஆட்சி எழுந் தாலும் அது வெற்றிபெறவில்லை என்கிறார். சங்கரர் ராமானுஜர் தத்துவங்கள் உறங்கின. பின்னர் மாராட்டியர், சீக்கியர் விழிப்புணர்வு ஏற்பட்டது. அக்பர் போன்றவர் மக்களுக்கு நல்வாழ்வை தந்தனர் என சுவாமி குறிப்பிட்டு சொல்கிறார். அதே நேரத்தில் பலர் அவுரங்கசேப் போல இருந்தனர் என்ற குறிப்பையும் தருகிறார். யுதிஷ்ட்ரர், ராமர், அசோகர், அக்பர் ஆகியோரை தெய்வநிகர் அரசர்கள் என பட்டியலிடுகிறார்.

எண்ணிக்கையில் அதிகமிருந்தும் சூத்திரர் ஆட்சி ஏன் அமையவில்லை என்ற விவாதத்திற்கு காரணம் சிலவற்றை பதிலாக தருகிறார். அவர்களுக்கு நண்பர்கள் இல்லை. எப்போது அடி விழும் எனக் கூட அறியாமல் உழைக்க வேண்டும். தாங்களும் மனிதர்கள்தான் என்கிற உணர்வு அவர்களிடமே வற்றிப்போன நிலை. உயர் வர்க்கத்தை அண்டித்தான் வாழ்க்கை என்ற நிலை. மேற்கின் கல்வி வந்தாலும் அவர்களிடம் போகாத நிலை- கற்கவோ, சொத்துரிமை பெறவோ வாய்ப் பில்லாத வாழ்க்கை சூழல் என பல்வேறு தடைகளை அவர் பட்டியலிடுகிறார். நம்பிக்கை இருக்கிறது அவர்கள் எழுவர். காணமால் அடிக்கப்பட்ட அந்த உழைக்கும் மனிதனை மீண்டும் நாம் கண்டறிவோம் என கடமை உணர்த்துகிறார் சுவாமி விவேகானந்தர்.

சுரண்டல் வடிவங்களை பற்றியும் பிராமண வர்க்கம், சத்த்ரிய வர்க்கம், வைஸ்ய வர்க்கம் எவ்வாறு சுரண்டியது என விவரிக்கிறார். எந்த வர்க்கத்தின் சக்தியும் அதிகமாக குவியும்போது சுரண்டல் தீவிரப்படும் என்கிறார். கடவுள் அனைத்து உயிர்களிலும் நீக்கமற நிறைந்துள்ளார். ஓருயிர் மூலம் அவர் பிற உயிரை காயப்படுத்துவதில்லை என்கிற கீதையின் (அத் 18 பாடல் 28) பாடலை உயிர்களை சமநோக்கு கொண்டு பார்க்கவேண்டும் என்பதற்கு மேற்கோள் காட்டுகிறார். ஞானம், பலம், செல்வம் எதுவானாலும் அது பரவலாக ஆக்கப்பட வேண்டும் என்பதை பலமுறை சொல்கிறார். என்னுடையது என முத்திரை குத்திக் கொள்ள வேண்டாம் என உபதேசிக்கிறார்.

சூத்திரர் ஆட்சியில் சுரண்டல் இருக்குமா என்பதையும் அவர் விவாதிப்பது அவரது பார்வை தீர்க்கத்தை உணர்த்துகிறது. பின்வரும் கருத்துக்கள் அப்புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. விவேகானந்தர் இதை சொல்லியிருக்க முடியாது. அவர் அப்போது உயிருடன் இல்லை. ருஷ்ய புரட்சியின் போது லெனின் அனைத்து அதிகாரங்களும் சோவியத்திற்கே என்றார். ஆனால் ஆகஸ்ட் 1918ல் சோவியத்துகள் அரசாங்கத்திற்கு கட்டுப்பட்டவை என உத்தரவு போட்டார். கட்சித் தலைவர்களின் புரட்சிகர குழு சோவியத்துக்களை நடத்தும் என்றனர். தொழிலாளர் சங்கங்கள் கட்சி, அரசாங்க தலைமைக்குள் கொணரப்பட்டன. அவர் களுக்கு அரசாங்கம்தான் வழிகாட்டுகிறது. உழைப்பவர் அதிகாரம் என்பதில் நாம் கவனம் கொள்ளவேண்டிய ஜனநாயக அம்சமாக இதை நாம் புரிந்து கொள்ளலாம்.

இந்திய சமூக மாற்றத்தில் மதத்திற்குரிய பங்கு குறித்து சுவாமி பேசுகிறார். இந்தியாவின் மொழிபோல மதம் இருக்கிறது என்கிறார். சார்வாகர், ஜைனர், புத்தர், சங்கரர், ராமானுஜர், கபீர், நானக், சைதன்யர், பிரம்ம சமாஜ், ஆர்ய சமாஜ் என அனைவருமே சமூக தேவை களுக்காகவே பயணப்பட்டனர். ராமானுஜர், கபீர் போன்றவர்கள் அடித்தட்டு மக்களுக்காக பேசினர். சங்கரர் சாதி ஏற்படுத்துவராக இருந்தார். உலகில் சாதியிருக்கலாம். ஆனால் இங்கு இருப்பது போல் எங்கும் இல்லை. கலாச்சார மேன்மையும், பரிசுத்தமும், தியாகமும் நிறைந்த சமுகம்தான் தேவை என்றார். வேதாந்தத்தில் சாதி ஏற்கப்படவில்லை என்கிறார். Trade Guild வம்சவழி வளர்ச்சியில் சாதி உருவாகி, அரசியல் ஆட்சிகளால் கெட்டிப்பட்டுப்போனதாக விவேகானந்தர் தெரிவிக்கிறார். சாதிகள் இல்லாவிட்டால் நாம் எங்கே நின்றிருப்போம் - முகலாயர் அழித்திருப்பர் - அய்ரோப்பியர் ஆய்வேது எனவும் பேசுகிறார். அதே நேரத்தில் சாதி பிறப்பில் புனிதம் என்பது மாயைதான் என்பதை உறுதிபட தெரிவிக்கிறார்.

III

தனிநபர் - சமூக உறவுகள் குறித்து சுவாமி விவாதிக்கிறார். தனிநபரை வியஸ்தி (vyashti) என்கிறோம். கூட்டாக எனும்போது சமஸ்டி (samashti) என அறிகிறோம். வியஸ்திக்கு எந்த அளவு உரிமை, சமஸ்டிக்காக எந்த அளவிற்கு தியாகம் என்பது ஒவ்வொரு சமூகமும் சந்திக்கும் பிரச்சனைகள். நவீன மேற்கு சமூகம் இந்த அலைகளில் அல்லாடுகிறது. சமூக மேலாண்மைக்காக தனிநபர்களின் தியாகத்தை சோசலிசம் என பேசுகிறோம். மேற்கு நாடுகளில் 'லிபர்ட்டி' வளர்ச்சிக்கான முன் நிபந்தனையாக இருக்கிறது. அதே நேரத்தில் வலுத்தவர் வாழவும் இளைத்தவர் வீழவும் மேற்கு ஜனநாயகம்

வழிவகுத்துள்ளது - அரசின் பெயரில் மக்கள் சுரண்டப் பட்டு சிலர் செல்வந்தர் ஆகின்றனர் என்கிற பார்வையை விவேகானந்தர் வைக்கிறார். இதை அவர்கள் ஜனநாயகம், அரசியல் அமைப்பு சட்ட ஆட்சி, நாடாளுமன்றம் என்றெல்லாம் அழைக்கின்றனர் என கேலி செய்கிறார். அனார்க்கிச தாக்கம் அவரிடம் இருந்திருக்கலாம்.

சோசலிசத்தில் நன்மை- தீமைகள் என அவர் விவாதிக்கிறார். (இப்பகுதிக்கு நூல்தொகை காட்டப் பட்டுள்ளது) அனைவருக்கும் கல்வி, சில வசதிகள் கிடைக்கும். ஆனால் மக்கள் எந்திரங்களாக்கப்பட்டு உள்ளனர். சுய அறிவுத்திறனற்று இரயில் என்ஜின்கள் போல் ஓடுகிறார்கள், திரும்புகிறார்கள். உயிர்த்துடிப்பு இல்லை. சுயவிருப்பம் சார்ந்த துள்ளல் இல்லை. புதுமை விழைவில்லை. No Stir of Inventive Genius என கடுமையான விமர்சனங்களையும் அவர் அடுக்குகிறார். எந்த நாட்டின் அனுபவம் கொண்டு அவர் இதை தெரிவிக்கிறார் என தெரியவில்லை.

சுவாமியை சோசலிஸ்ட் என அழைக்கலாமா என கேள்வி அவரிடம் எழுப்பப்படுகிறது. அதற்கு அவர் தயக்கமின்றி தனது பதிலை தருகிறார். I am a Socialist not because I think it is a perfect system, but half a loaf is better than no bread. அனைத்து மக்களுக்கும் பட்டினியை விட அரைத்துண்டு ரொட்டி கிடைப்பது மேலானது என்கிற சமூக முறைக்காக நான் சோசலிஸ்ட் ஆக இருக்கிறேன். அந்த முறை மிக நேர்த்தியானது என்பதற்காக அல்ல என தனது நிலையை அவர் தெளிவுபடுத்துகிறார். அவரின் வெளிப்படையான விமர்சனம், குறிப்பிட்ட கட்டத்தில் சரியான ஒன்றுடன் தன்னையும் அடையாளப்படுத்திக் கொள்ளும் நேர்மை கொண்டாடப்படவேண்டிய ஒன்றாக இருக்கிறது.

அவர் காணவிரும்பும் இலட்சிய அரசு என்பது குறித்த வினாவிற்கு அவரின் கற்பனை சித்திரத்தை அவர் வழங்குகிறார். மார்க்சிய வகைப்படுத்தலில் சமூக மாற்றத்தை அவர் விளக்கவில்லை. இந்திய வருண முறையில் அவர் எடுத்துரைக்கிறார். அதை வர்க்கம் என்ற சொல்லாக்கி அவர் விளக்குகிறார். நால்வகை வர்க்கத் தாரின் தீமைகள் ஏதுமற்ற அவர்களின் உயர் அடை யாளங்களை இணைத்துக்கொண்ட - புரோகித அடை யாளமான அறிவு - சத்ரிய போர்க்குண பலம் - வைஸ்யர் வணிக நியாயம் - சூத்திரர்களின் சமத்துவ உணர்வு என கட்டப்படும் அரசுதான் லட்சிய அரசாக அமையும் என அவர் பேசுகிறார். அரசின் தலைமைபாத்திர வர்க்கம் என்கிற மார்க்சிய சொல்லாடலை அவரிடம் நாம் எதிர் பார்க்க முடியாது.

அரசு பாதுகாப்பில் என எப்போதும் இயங்கும் சமுகத்தில் அரசில் வளர்ச்சி நின்றுபோய்விடும். வலிமையான மனிதனை குழந்தைபோல் பாவித்தால் என்ன ஆகும்? அந்நாடுகள் அழிந்து கூட போகும் என தெரிவித்த அவரின் பார்வைதீர்க்கம் ஆச்சர்யமானது. தேர்தல், பொறுப்பேற்றல், விவாதம் அச்சமுகத்தில் தேவை என்கிறார். பரவலாக வேலையை பொறுப் பாக்கிக் கொள்ளும் பழக்கம் தேவை. உழைப்பில், சொத்தில் மட்டுமில்லாது நிர்வாகத்திலும் பங்கிருந்தால் தான் நல்ல வளர்ச்சி ஏற்படும் என்கிறார்.

நமது நாட்டில் நாம் செய்ய வேண்டிய கடமை யாது என்ற விவாதத்தை தொடர்ந்து செய்தவர் விவேகானந்தர். நமது பெரும்பான்மை மக்களுக்கு கல்வி, உணவு, பராமரிப்பு உடனடி கடமை. வளம் நிறைந்த நாட்டில் பட்டினி என்ற முரணை ஏற்பதற் கில்லை. மக்களுக்கு கற்று கொடுத்தால், பொருளாதாரம் உட்பட பிரச்சனைகளை அவர்கள் தீர்த்துக்கொள்வர். நாடாளுமன்றத்தில் நல்ல சட்டங்கள் வருவதால் மட்டுமே நாடு சிறந்துவிடாது. ஆன்மிகத்தன்மையும் வேண்டும். இதன் பொருள் மூடநம்பிக்கைகளை சுமக்க வேண்டும் என்பதல்ல என நேர்படுத்துகிறார். அவரின் பரிந்துரை வேதாந்தம். பிராமணர் அல்லாதவர்கள் சம்ஸ்கிருதத்தை கைவிடக்கூடாது என வேண்டுகோள் விடுத்தவர் அவர். புரோகித வர்க்கத்தின் ஏகபோகத்தி லிருந்து அதை மீட்க அவர் விழைந்திருக்கலாம்.

இளைஞர்கள் ஆற்றல்மீது மிகுந்த நம்பிக்கை வைத்து அவர்களை செயலுக்கு உந்தி தள்ளியவர் விவேகானந்தர். புரட்சியின் சக்தி என அவர்களை கருதினார். அவர்களுக்கான சமூக கடமையை வலியுறுத்தி நிறைவேற்ற அறைகூவல் விடுக்கிறார். நம்பிக்கையற்ற நிலையில் உள்ள நம் மக்கள் தெய்வத்திற்கு நிகரானவர்கள். பணம் உள்ளவர்களை நிமிர்ந்து பார்த்திருக்க வேண்டாம். அனைத்து வேலை களையும் செய்துவரும் ஏழைகளை நிமிர செய்வீர். அவர்களுக்கு தீர்வை கொணருங்கள். அவர்களுக்கு விஞ்ஞானம், இலக்கியம் கற்பியுங்கள். அவர்கள் இல்லாமல் பணக்காரர்களுக்கு வாழ்வேது? அவர்கள் எழ வேண்டும். எழுவார்கள். உங்களுக்கு நன்றி பாராட்டு வார்கள். இதில் காலதாமதம் வேண்டாம். இளைஞர் களே! இதுதான் உங்கள் mission என செயலுக்கு அழைக்கிறார்.

தேசபக்தி எனும் நம்பிக்கை குறித்து பேசுகிறார். இதயத்தின் அடி ஆழத்திலிருந்து அந்த உணர்வு பெருக வேண்டும். அன்பு திறக்காத கதவு என ஏதுமில்லை. அவர் மேற்கோள் ஒன்றை காட்டுகிறார். "துறவிகள் தூற்றட்டும் அல்லது போற்றட்டும். அதிர்ஷ்ட தேவதை வரட்டும் - வராமல் போகட்டும். சாவு இன்று வந்தாலும் சரி - நூறு ஆண்டுகள் தள்ளிப் போனாலும் சரி. நான் ஒருபோதும் உண்மையிலிருந்து அங்குலம் கூட விலகமாட்டேன் என்ற உறுதிப்பாடு கொண்ட புரட்சிகர மனிதன் எழுந்து வரட்டும்" பார்திஹரி என்கிற மன்னனின் உண்மைக்காக நிற்கும் வைராக்கிய வரிகள் அவை.

●